# HARTI



# நிருவாக அறிக்கை

## 2019

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்
இலக்கம் 114, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07.

## உள்ளடக்கப் பக்கங்கள்


| | பக்க எண். |
|---|---|
| **ஆளுனர் சபை** | **1** |
| **ஆளுனர் சபைக் கூட்டங்கள் - 2019** | **3** |
| **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு** | **5** |
| **கண்ணோட்டம்** | **6** |
| **கமத்தொழில் கொள்கை மற்றும் கருத்திட்டங்கள் மதிப்பீட்டுப் பிரிவு** | **8** |
| **கமத்தொழில் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு** | **13** |
| **சூழல், நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு** | **15** |
| **சந்தைப்படுத்தல் உணவுக் கொள்கை, கம-வியாபாரப் பிரிவு** | **21** |
| **மனித வள, நிறுவன அபிவிருத்திப் பிரிவு** | **28** |
| **புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தும் பிரிவு** | **35** |
| **நூலகம்** | **37** |
| **வெளியீட்டு அலகு** | **40** |
| **வேறு செயற்பாடுகள்** | **42** |
| **2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு பதவியணியின் நிலை** | **45** |
| **பதவியணியின் முன்னேற்றம்** | **46** |
| **இறுதிக் கணக்குகள்** | **50** |
| **கணக்காளர் தலைமை அதிபதியன் அறிக்கை 14(2)(இ)** | **63** |
| **பதில் - கணக்காளர் தலைமை அதிபதியன் அறிக்கை** | **68** |

## தாபிப்பு

1972இன் 5ஆம் இலக்க கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகச் சட்டத்தின் கீழ், 1972ஆம் ஆண்டு ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் (ஹெ.கொ.க.ஆ.ப.நி.) தாபிக்கப்பட்டது. இந்த நிறுவகம் கமத்தொழில் அமைச்சின் கீழ் ஒரு நியதிச்சட்ட சபையாகத் தொழிற்படுகின்றது. இந்த நிறுவகம் பிரதானமாக கமநல மற்றும் கிராமியத் துறையின் கொள்கை முனைப்பிலான ஆராய்ச்சயை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பயிற்சித் தேவைகளைக் கவனத்திற்கெடுப்பதற்காகவும் தாபிக்கப்பட்டது. நாட்டில் கமநல ஆராய்ச்சியில் முதன்நிலை வகிக்கும் ஹெ.கொ.க.ஆ.ப.நி. அது தாபிக்கப்பட்ட நாளிலிருந்து கமநலத் துறையின் அபிவிருத்திசார்ந்த கொள்கைகளை வகுத்தமைப்பதற்கான தகவல்களை வழங்கியும் மற்றும் சமூகப் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றை நடத்தியும் 45 வருடங்களுக்கும் அதிக கால அனுபவத்தைக் கொண்டுள்ளது.

**ஆணை**

மேற்குறித்த சட்டத்தின் 3 (1)ஆம் பிரிவினது ஏற்பாடுகளின் கீழ், நிறுவகத்தின் ஆணை வருமாறு:

i. கமநல ஆராய்ச்சியைப் பேணுதல், உதவுதல், ஊக்குவித்தல மற்றும் ஒத்துழைத்தல்.

ii. அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றினால் பொறுப்பேற்கப்படுகின்ற கமநல ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

iii. கமத்தொழிலின் அபிவிருத்தியைப் பாதிக்கின்ற நிறுவனம் சார்ந்த காரணிகள் தொடர்பான ஆராய்ச்சிகளையும் மற்றும் ஆய்வுகளையும் மேற்கொள்ளல்.

iv. கமத்தொழில் நோக்கங்களுக்கான காணியின் பொருளாதாரரீதியான பாவனையுடன் தொடர்புடைய மதிப்பாய்வுளையும், ஆராய்ச்சிகளையும் மற்றும் ஆய்வுகளையும் மேற்கொள்ளல்.

v. கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி ஆகியவற்றுடன் தொடர்புடைய சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

vi. தனியாக அல்லது இலங்கையிலுள்ள அல்லது வெளிநாடுகளிலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து டிப்ளோமாக்கள், பட்டங்கள், பரிசில்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய நன்மதிப்புகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் கமநல ஆராய்ச்சி தொடர்பான பயிற்சி சார்ந்த செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்டங்கள் என்பவற்றைச் செயற்படுத்துதல், மேற்கொள்ளல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

vii. உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் மகாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றை நடத்துதல் மற்றும் அத்தகையவற்றுக்கு அனுசரணை வழங்குதல்.

viii. ஆசிய பிராந்திய நாடுகளுடன் கூட்டிணைந்து அவற்றின் பிராந்தியரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கமத்தொழில் கட்டமைப்பின் பிரச்சினைகள் தொடர்பான அத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் கமத்தொழில் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கும் மற்றும் பரம்பல்செய்வதற்குமான ஒரு நிலைய வசதியை ஏற்பாடு செய்து வழங்குதல்.

ix. பொதுவாக இலங்கைக்கும் மற்றும் ஏனைய ஆசிய பிராந்திய நாடுகளுக்கும் விசேட குறிப்புடன் கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளுடன் அத்தகைய ஆராய்ச்சிகளை தொடர்புபடுத்துதல்.

**தூரநோக்கு**

நிலையான கமநலத்திற்கும், கிராமிய அபிவிருத்திற்குமான அறிவு உருவாக்கத்திலும் மற்றும் அறிவு பரம்பலிலும் முதன்னிலை வகித்தல்.

**செயற்பணி**

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாக கமநலத் துறையையும் மற்றும் கிராமியத் துறையையும் வலுப்படுத்துதல்.

**குறிக்கோள்கள்**

i. கமநல விடங்களில் சமூகப் பொருளாதார ஆராய்ச்சியில் சிறந்த ஒரு நிலையமாக விளங்குதல்.

ii. அரசாங்க நிறுவனங்களிலும், வியாபாரத் துறையிலும் திட்டமிடுபவர்களுடனும், கொள்கை ஆக்குநர்களுடனும் மற்றும் ஆராய்ச்சி சமூகங்களுடனும் நெருங்கிய தொடர்பைப் பேணுதல்.

iii. அறிவு உருவாக்கம் மற்றும் உரிய காலத்திற்கு அத்தகைய அறிவைப் பரப்புதல் ஆகியவற்றினூடாக கொள்கை வகுத்தமைப்பையும், செயற்படுத்துகை நடைமுறையையும் மிகவும் பயனுள்ளதாகச் செய்தல்.

iv. தேசியக் கொள்கை விடயங்களில் சுயாதீன மதிப்பீடுகளை வழங்குவதன் மூலமாக பொதுமக்களை அறியச் செய்தல்.

v. அதன் பணியாளரினதும் மற்றும் நிறுவகத்தினதும், அறிவுத் தளத்தினதும் ஆற்றல்களில் முதலீடு செய்வதனூடாக சமூகப் பொருளாதார கொள்கைப் பகுப்பாய்வுக்கான ஆற்றலை வலுப்படுத்துதல்.

vi. கிராமிய அபிவிருத்தியில் அக்கறையுடைய தரப்புகளின் ஆற்றலைப் பயிற்சியினூடாக அதிகரித்தல்.

**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**

**ஆளுனர் சபை – ஹெ.கொ.க.ஆ.ப.நி. - 2019**

| | | |
|---|---|---|
| திரு. கே.டி.எஸ்.ருவான்சந்ர | - | செயலாளர், கமத்தொழில் அமைச்சு, ஆளுனர் சபையின் தலைவர் |
| திரு. நீல் பண்டார ஹபுஹின்ன | - | செயலாளர், கமத்தொழில் அமைச்சு, ஆளுனர் சபையின் தலைவர் (28 நொவம்பர் 2019 முதல்) |
| திரு. கருணாதாச உடகே | - | பணிப்பாளர்/பி.நி.அ. (2019 ஜனவரி முதல்) |
| திரு.கீர்த்தி பீ. கொட்டகம | - | பணிப்பாளர்/பி.நி.அ. (பெப்ரவரி முதல் செப்ரெம்பர் வரை) |
| திரு.டபிள்யு.எச்.டி.பிரியதர்ஷன | - | பணிப்பாளர்/பி.நி.அ. (பதில்) (2019 ஒக்ரோபர் முதல்) |
| கலாநிதி (திருமதி) பி.டபிள்யு. அழகாகோன் | சபை உறுப்பினர் - | மேலதிகச் செயலாளர் (கமத்தொழில் அபிவிருத்தி) கமத்தொழில் அமைச்சு (2019 மே முதல்) |
| திருமதி இ.எ.ஆர்.திருமதி ரேணுகா | -அதே- - | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) காணிகள், பாராளுமன்றச் சீர்திருத்த அமைச்சு (2019 செப்ரெம்பர் முதல்) |
| திரு எம்.ஆர்.வி.ஆர். மீபுற | -அதே- - | பணிப்பாளர், பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு (2019 ஜனவரி முதல் பெப்ரவரி வரை) |
| திரு.வசந்த தர்மசேன | -அதே- - | பணிப்பாளர், நிதி, வெகுஜன ஊடக அமைச்சு (2019 பெப்ரவரி முதல்) |
| திரு யூ.ஜி. ரத்னசிறி | -அதே- - | மேலதிகச் செயலாளர் (பொருளாதார விவகாரங்கள்), தேசியக் கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள் அமைச்சு (2019 மார்ச் முதல்) |
| திருமதி கே. பியரத்ன | -அதே- - | மேலதிகச் செயலாளர் (மறுசீரமைப்பு), கைத்தொழில்கள், வர்த்தக அமைச்சு (2019 மார்ச் முதல் மே வரை) |
| திரு.என்.ஜி.பண்டிதரத்ன | -அதே- - | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) கைத்தொழில்கள், வர்த்தக அமைச்சு (2019 ஜூன் முதல் ஒக்ரோபர் வரை) |
| திருமதி அருணி எஸ்.ரணசிங்க | -அதே- - | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு (2019 மார்ச் முதல் ஒக்ரோபர் வரை) |
| திருமதி பீ.எல்.டீ. பாலசூரிய | -அதே- - | கல்விப் பணிப்பாளர் (கமத்தொழில் சூழல் கல்விக் கிளை), கல்வி அமைச்சு (2019 மார்ச் முதல் ஒக்ரோபர் வரை) |
| திருமதி எச்.என்.என்.குணசேகர | -அதே- - | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) (ஓகஸ்ட் முதல்) (மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு (2019 மார்ச் முதல் ஏப்ரல் வரை) |

| | | |
|---|---|---|
| திருமதி எச்.ஜி.ஜே.பி.விஜேசிறிவர்தன | -அதே- - | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) (மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு (2019 ஜூலை முதல் ஒக்ரோபர் வரை) |
| திரு எஸ். சேனாநாயக்க | -அதே- - | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்), கிராமிய பொருளாதார அமைச்சு (2019 மார்ச் முதல் ஒக்ரோபர் வரை) |
| கலாநிதி சந்ரநாத் அமரசேகர | -அதே- - | மேலதிகப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு, இலங்கை மத்திய வங்கி (2019 மார்ச் முதல் ஒக்ரோபர் வரை) |
| கலாநிதி டபிள்யு.எம்.டபிள்யு. வீரக்கோன் | -அதே- - | பணிப்பாளர் நாயகம் கமத்தொழில் திணைக்களம் |
| திருமதி ஆர்.எம்.சி.எச். ஹேரத் | -அதே- - | காணிகள் ஆணையாளர் நாயகம் காணிகள் ஆணையாளர் திணைக்களம் |
| திரு.டபிள்யு.எம்.எம்.பீ.வீரசேகர | -அதே- - | ஆணையாளர் நாயகம் கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| திரு. (எந்திரி) எஸ். மோகனராஜா | -அதே- - | நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம் |
| திரு எஸ்.எல். நசீர் | -அதே- - | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (2019 ஜனவரி முதல் மே வரை) |
| திரு.சுவிந்த எஸ்.சிங்கபுலி மற்றும் | -அதே- - | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (2019 ஜூன் முதல் ஒக்ரோபர் வரை) |
| கலாநிதி டி.பீ.ரி.விஜேரத்ன | -அதே- - | உதவி உ.வி.தா. பிரதிநிதி (செயற்றிட்டம்) |
| திரு.பீ.ஆர்.சி.பண்டார | -அதே- - | செயலாளர், ஆளுனர் சபை |

**ஆளுனர் சபைக் கூட்டங்கள் - 2019**

| **கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள்** | **கலந்துகொண்ட உறுப்பினர்களின் எண்.** |
|---|---|
| 1. 03 ஜனவரி 2019 | 07 |
| 2. 21 பெப்ரவரி 2019 | 06 |
| 3. 28 மார்ச் 2019 | 14 |
| 4. 30 ஏப்ரல் 2019 | 09 |
| 5. 23 மே 2019 | 12 |
| 6. 20 ஜுன் 2019 | 11 |
| 7. 25 ஜூலை 2019 | 12 |
| 8. 22 ஓகஸ்ட் 2019 | 15 |
| 9. 19 செப்ரெம்பர் 2019 | 17 |
| 10. 24 ஒக்ரோபர் 2019 | 11 |

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| | | |
|---|---|---|
| திரு.வசந்த தர்மசேன (தலைவர்) | - | பணிப்பாளர், நிதி, வெகுஜன ஊடக அமைச்சு |
| 1. திரு எஸ்.எல். நசீர் (உறுப்பினர்) | - | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்<br>கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்<br>(பெப்ரவரி முதல் ஜூன் 2019 வரை) |
| 2. திரு. சுவிந்த எஸ்.சிங்கபுலி (உறுப்பினர்) | - | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர்<br>மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர்,<br>கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்<br>(ஜூன் முதல் ஒக்ரோபர் 2019 வரை) |
| 3. திரு.டபிள்யு.எம்.எம்.பீ.வீரசேகர (உறுப்பினர்) | - | ஆணையாளர் நாயகம்<br>கமநல அபிவிருத்தித் திணைக்களம |
| 4. திரு.யு.எஸ்.எல்.குமார (அவதானிப்பாளர்) | - | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்<br>கமத்தொழில் அமைச்சு |
| 5. திருமதி எஸ்.எ.டி.என்.பெரேரா (அவதானிப்பாளர்) | - | கணக்காய்வு மேலாளர்<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் |

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**

**கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள்**

28 பெப்ரவரி 2019
06 ஜுன் 2019
11 செப்ரெம்பர் 2019

## கண்ணோட்டம்

மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கமத்தொழிலின் பங்களிப்பு பொலிவழந்த நிலயிலானது என்ற போதிலும், அண்ணளவாக 70 சதவீதம் கொண்ட சனத்தொகையில், கமத்தொழில் மீது நேரடியாக அல்லது மறைமுகமாக வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதன் காரணமாக நாட்டின் சமூக-பொருளாதார அமைப்பில் பிரதான பங்கொன்றைக் கொண்டுள்ளது.

பூச்சிநாசினியின் பாவனையைக் குறைந்தபட்சமாக்கி, உற்பத்தியை அதிகரிக்கின்ற அதேவேளை, சேதன கமத்தொழிலை மேம்படுத்துதல், காணிப் பயன்பாடு தொடர்பிலான பிரச்சனைகள், கமத்தொழில் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள், கமத்தொழில் உள்ளீடுகளின் தரத்தை உயர்த்துதல் மற்றும் ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் இடையில் ஒருங்கிணைப்பின் பற்றாக்குறை ஆகியன இன்று கமநலத் துறையில் எதிர்நோக்கப்படும் சவால்களின் மத்தியில் விளங்குகின்றன. முன்னுரிமைக் கரிசனையொன்றாக தேசிய உணவுப் பாதுகாப்பு இருக்கின்ற போது, மேற்படி சவால்கள் அவசரமாகத் தீர்க்கப்படுவது அவசியமாகும்.

கமநல ஆராய்ச்சியில் முன்னோடியொன்றாக இருப்பதனால், ஆண்டில் 19 ஆராய்ச்சி ஆய்வுகளிலும், ஏழு பயிற்சிச் செயற்றிட்டங்களிலும் மேற்படி கரிசனைகளை ஹெ.கொ.க.ஆ.ப.நி. ஒன்றிணைத்துள்ளது. கமத்தொழில் கொள்கை மற்றும் கருத்திட்டங்கள் மதிப்பீட்டுப் பிரிவானது ஆய்வொன்றில் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் மூலதனங்களை மதிப்பாய்ந்த அதேவேளை, இன்னொன்று அபாய பரிமாணத்தை முனைவுபடுத்தி, அபாய முகாமைத்துவம் மீதான அடிப்படையில் பூச்சிநாசினியின் பயன்பாட்டினைக் குறைந்தபட்சமாக்குவது மீது நோக்கினைக் கொண்டிருந்தது. மேலதிகமாக, *ஹெல பொஜூன்ஹல்* மற்றும் பெண் வாண்மையாளர்களின் செயற்றிறன் ஆகியன மீது மதிப்பீட்டு ஆய்வொன்று நடத்தப்பட்ட அதேவேளை, பாதுகாப்பான உணவையும், அதன் உற்பத்தியையும் மேம்படுத்தும் கமத்தொழில் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இலங்கையில் சிறந்த கமத்தொழில் நடைமுறைகள் மீதான இன்னொரு மதிப்பீட்டு ஆய்வு முடிக்கப்பட்டது. இலங்கையின் பால் கைத்தொழில் மீது பெறுமதிச் சங்கிலி மதிப்பாய்வொன்றும், கடந்த இரு தசாப்தங்களில் நெல் உற்பத்தி மீதான அரசாங்கக் கொள்கைகளின் மதிப்பாய்வொன்றும் நடத்தப்பட்டது. பழம் மற்றும் மரக்கறி பாவனைப் பாங்குகள் மீதான ஆராய்ச்சியொன்று முக்கியமான முடிவுகளையும் வெளிப்படுத்தியுள்ளது.

இதனிடையே, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், காணி ஒதுக்கீட்டின் நோக்கத்துடன் நடைமுறையிலான காணி பயன்பாட்டு நடைமுறையின் இணக்கமின்மையின் மட்டத்தை கமத்தொழில் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு மதிப்பிட்டது. முன்கூட்டிய கண்டுபிடித்தல் ஊடாக, பூச்சியினாலும், நோயினாலும் பயிர்ச் சேதங்களைக் குறைந்தபட்சமாக்குவது மீது செயல் ஆராய்ச்சியொன்று நடந்து கொண்டிருக்கிறது.

அதேவேளை, பயிர்ச்செய்கை சமூகங்களில் காலநிலை மாற்றத்திற்கான ஊறுபடுந்தன்மை மற்றும் காலநிலை மாற்றத்திற்கு அனுசரிப்பு நடவடிக்கையொன்றாக பாதுகாக்கப்பட்ட கமத்தொழிலின் முக்கியத்துவம் ஆகியன மீதான அடிப்படையில் இரு ஆய்வுகளை சூழல், நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு பொறுப்பேற்றது. காணி உற்பத்தித்திறன் மீது காணி நிலவுரிமை முறைமையின் தாக்கத்தையும் அத்துடன் சிறிய நீர்ப்பாசன ஒப்பந்தங்களை வழங்குவதன் தாக்கங்களையும் மதிப்பிடுவதற்காக இலங்கையின் மத்திய மேட்டுநிலப் பிராந்தியங்களின் நீர் ஆட்சிப் பிரச்சனைகள் மீதான ஆய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இலங்கையின் தரத்திலான விதை உருளைக்கிழங்கின் உற்பத்தி மீதான ஆராய்ச்சியொன்றையும் அத்துடன் முக்கிய முடிவுகளை வெளிப்படுத்திய இலங்கையில் காலநிலை காட்டி காப்புறுதித் திட்டத்தின் செயற்றிறனை மதிப்பிடுவது மீதான ஆய்வொன்றையும் சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை கம-வியாபாரப் பிரிவு நடத்தியது. இன்னொரு ஆய்வில் கமத்தொழில் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதில் கமத்தொழில் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களங்களில் உள்ள அலுவலங்களினால் முகங்கொடுக்கப்படும் சவால்களும், கஷ்டங்களும் ஆராயப்பட்டன. இலங்கையில் மரக்கறி உற்பத்தி மீது கமக்காரர்களின் தீர்மானத்தின் நிர்ணயக் கூறுகளை அடையாளங்காணுதல், இலங்கையில் நெல்/அரிசி பெறுமதிச் சங்கிலி மற்றும் இடைத்தர பருவத்தின் வேறு வெளிக்களப் பயிர்ச் செய்கை தொடர்பான பிரச்சனைகள் ஆகிய சில ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இலங்கையில் பொலித்தீன் பைகளினதும், பகல் போசனத் தாள்களினதும் மீதான தற்போதைய சூழ்நிலையையும் அத்துடன் சாத்தியமான முன்னோக்கிய பாதையையும் இலங்கையின் பொலித்தீன் தடை மீதான ஆய்வொன்றில் மனித வள, நிறுவன அபிவிருத்திப் பிரிவு மதிப்பிட்டது. இன்னொரு ஆராய்ச்சியில், பாதுகாப்பான நீர் பாவனையின் பாதுகாப்பிலான மூலமொன்றாக மழைநீரை மேம்படுத்தும் ஆற்றலளவு பரீட்சிக்கப்பட்டது. புறம்பான ஆய்வொன்றில், வீட்டுத் தோட்ட தென்னைச் செய்கை நோக்காக விளங்கியது. பெண்களின் அதிகாரமளிப்பு, தலைமைத்துவம், சமூக

ஒன்றுதிரட்டல், துரித கிராமிய மதிப்பீடு மற்றும் பங்கெடுப்பிலான கிராமிய மதிப்பீடு ஆகியன மீது ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சிச் செயற்றிட்டங்கள் பிரதானமாக மையம் கொண்டிருந்தது.

நிதிப்படுத்தலிலான ஆய்வுகளில், "இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பிராந்தியங்களில் வாழை, மா, அன்னாசிப் பயிர்களுக்கு பெறுமதிச் சங்கிலியைப் பலப்படுத்துவதற்கான அடிமட்ட ஆய்வு" முடிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக, விலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டு நடமாடும் தொலைபேசியினதும், அத்துடன் வாராந்த, மாதாந்த செய்தித்திரட்டுக்களினதும் ஊடாக பரப்பப்படும் கருத்திட்டம் ஒன்றான கமத்தொழில் சந்தை தகவல் சேவையானது செயற்பாட்டில் இருந்தது.

கொள்கை முனைப்பான ஆராய்ச்சியை மேம்படுத்துகின்றதும், கமநலத் துறையின் பயிற்சித் தேவைகளைக் கவனத்திற்கெடுக்கின்றதுமான ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் பிரதான நோக்கத்திற்கு அமைவாக, 2019ஆம் ஆண்டில் நிறுவகத்தின் வேலைத்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. நிறுவகத்தின் வளர்ச்சியையும் அத்துடன் இலங்கையின் கமத்தொழில் துறையின் முன்னேற்றத்தையும் நோக்கி ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட பணிகளையும், நூற்கல்விப் பணியையும் 2019 ஆண்டு அறிக்கையானது தொகுக்கின்றது.

**கீர்த்தி பீ. கோத்தாகம**
**பணிப்பாளர்**

# 01

## கமத்தொழில் கொள்கை மற்றும் கருத்திட்டங்கள் மதிப்பீட்டுப் பிரிவு

**நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள்**

1. **கமத்தொழிலில் ஆராய்ச்சியினதும், அபிவிருத்தியினதும் மீதான மூலதனங்களின் மதிப்பாய்வு**

**ஆராய்ச்சிக் குழாம்**

| | | |
|---|---|---|
| திருமதி ரஸீகா விஜேசிங்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. பிரசன்ன விஜேசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி மாலதி ரம்பொடகெதர | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
வருடாந்த மூலதனச் செலவினத்திலிருந்து கமத்தொழிலுக்கு அண்ணளவாக ஏழு சதவீதம் ஒதுக்கப்படுவதுடன், இதில் பாரிய சதவீதமொன்று துறையின் ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் ஒதுக்கப்படுகின்றது. எனினும், நாட்டின் வருடாந்த உணவு இறக்குமதிகள் ரூபா 200 பில்லியனுக்கு மேற்பட்ட தொகை என்பதுடன், கமத்தொழிலில் பெரும்பாலான உப-துறைகளின் உற்பத்தி மட்டங்கள் ஆற்றலளவை விட மிகவும் குறைவாகும். எனவே, துறையினதும் மற்றும் கமநல சமூகத்தினதும் அபிவிருத்தியின் பொருட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்காக செய்யப்பட்ட மூலதனங்களின் உண்மையான பங்களிப்பினைப் புரிந்துகொள்வதற்கும் அத்துடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடைமுறை தொடர்பில் கமத்தொழிலின் பயனுறுதித்தன்மையை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை கண்டறிவதற்கும் துறையில் தெரிவுசெய்யப்பட்ட தாபனங்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மதிப்பாய்வதே நோக்கங்களாகும்.

கமத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற மூன்று பிரதான ஆராய்ச்சி நிறுவனங்களும் அத்துடன் ஐந்து வருடங்களுக்கு (2012-2016) அவற்றின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளும் இந்த ஆய்வில் மதிப்பாயப்பட்டுள்ளன.

**முடிவுகள்**:
ஆராய்ச்சி ஆய்வுகளின் எண்ணிக்கை, ஆராய்ச்சியின் செலவினம் மற்றும் பயிற்சி செயற்றிட்டங்களின் எண்ணிக்கை ஆகியனவற்றைப் பொறுத்தளவில், மூன்று நிறுவனங்களும் மாறுபட்ட பாங்கொன்றைக் காட்டியுள்ளன: ஒன்று மேல்நோக்கிய போக்கொன்றை காட்டிய அதேவேளை, இன்னொன்று ஏறியிறங்கும் பாங்கொன்றைக் காட்டியுள்ளது. மூன்று நிறுவனங்களிலும் ஆராய்ச்சி வெளிப்பாட்டின் அமைப்பும் மாறுபட்டுள்ளது. கொள்கை பரிந்துரைகளுடன் ஆராய்ச்சி அறிக்கைகள், விழிப்பியலை வழங்குவதற்காக வியாபார அலகுகளை அமைத்தல் மற்றும் தொழில்நுட்ப ஏற்றுக்கொள்ளல் மீதான உசாவுகை அத்துடன் உற்பத்தி ஆகுசெலவைக் குறைப்பதற்காக புதிய விதை வகைகளை விருத்தி செய்கின்ற கருத்திட்டங்கள். ஆராய்ச்சிக்கும் மற்றும் கொள்கையை வகுக்கும் மட்டத்திற்கும் இடையிலான பலமான இரு-வழியிலான தொடர்பாடல் இன்மை ஆகியன அது விரும்பப்பட்ட நன்மைகளை சமூகம் அடைவதை இழக்கச்செய்வதற்கான மறுதலையான தாக்கங்களை உருவாக்குவதற்கு இட்டுச்சென்றுள்ளது.

**பரிந்துரைகள்**:

- தேசிய மற்றும் துறைசார் அபிவிருத்தித் தேவைகள் மீதான அடிப்படையிலான ஆராய்ச்சி செயற்றிட்டங்களின் முன்னுரிமைப்படுத்தல் ஆராய்ச்சி தலையீடுகள் ஊடாக தீர்த்துவைப்பதில் பெறுமதிமிக்க முக்கிய பிரச்சனைகளை அடையாளங்காண்பதற்கான அவசியம் உள்ளது.
- தேசியக் கொள்கை வகுக்கும் உறுப்புக்களுக்கும் அத்துடன் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையிலான இணைப்பினைப் பலப்படுத்துதல்.

- ஆராய்ச்சிக்கும் அத்துடன் விரிவாக்கத்திற்கும் இடையிலான ஒன்றிணைப்பினைப் பலப்படுத்துதல்.

- அபிவிருத்தி நடைமுறையில் ஆராய்ச்சி விளைவினை ஒன்றிணைப்பதற்காக ஒரு தேசிய மட்டப் பொறிமுறையைத் தாபித்தல்.
- ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தின் மதிப்பாய்வுக்கும், கண்காணித்தலுக்கும் அத்துடன் மதிப்பீட்டிற்கும் மிகவும் கருத்தாழமிக்கதும், முறைமையானதுமான முறையைத் தாபித்தல்.

## 2. இலங்கையில் பூச்சிநாசினி பயன்பாட்டுக்கான சாத்தியக்கூறுகள்: இடர்பாட்டு முகாமைத்துவம் மீதான ஒரு வலியுறுத்தல்

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| செல்வி எ.கே.எ. திசாநாயக்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| கலாநிதி டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி திலினி பெரேரா | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| செல்வி யு.டி.ஆர்.உதாரி | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
பூச்சிநாசினிகளின் பாரபட்சமற்ற பயன்பாடும் அத்துடன் அதன் ஊறுவிளைவிக்கின்ற விளைவுகளும் தற்போது இலங்கையில் மருத்துவ மற்றும் சூழல் துறையில் ஒரு பாரிய கரிசனையாகும். எனவே, பூச்சிநாசினியின் பயன்பாட்டினைக் குறைந்தபட்சமாக்குவது ஒரு நேரகாலத்திலான நகர்வாகும். பூச்சிநாசினியின் பாவனையின் தொழில்நுட்ப அம்சம், பூச்சி சேதத்தின் காரணமாக பயிர் இழப்பின் இடர்பாடு மீதான கமக்காரர் முன்னுணர்வு, ஆரோக்கிய இடர்பாடு மற்றும் வேறு சமூக-பொருளாதாரக் காரணிகள் ஆகியன மீதான அடிப்படையில் நெற்செய்கையில் பூச்சிநாசினியின் பயன்பாட்டினைக் குறைந்தபட்சமாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை அடையாளங்காண்பது மீது இந்த ஆய்வு பிரதானமாக நோக்கினைக் கொண்டுள்ளது.

**முடிவுகள்**:
காலநிலை வலயம் மற்றும் நீர்ப்பாசன முறை ஆகியவற்றுக்கு அக்கறையின்றி, இலங்கையின் நெற்செய்கையில் பூச்சிநாசினியின் பயன்பாட்டில் பாரிய பகுதியே களைநாசினியாகும். பூச்சித் தொகையின் தோற்றப்பாடு மீது கிரமமான நடைமுறையொன்றாகவும் அத்துடன் பூச்சிநாசினிகளாகவும் களைநாசினிகளை கமக்காரர்கள் பிரயோகிக்கின்றனர். இடர்பாட்டு வெறுப்பு நடத்தையை கமக்காரர்கள் காட்டியதுடன், பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தும் போது உயர்ந்தளவு ஆரோக்கிய இடர்பாட்டுக்கும் அத்துடன் சூழல் இடர்பாட்டுக்கும் தாம் வெளிப்படுவது குறித்து பாரியளவு பெரும்பான்மையினர் அறிந்துவைத்திருந்தனர்.

**பரிந்துரைகள்**:
- கமக்காரர் முகாமைத்துவ குறிக்கோள்களுக்கு இணங்கும் விதத்தில், பூச்சிநாசினியின் பிரயோகத்தை வடிவமைப்பதற்கு பூச்சி முகாமைத்துவத்தினதும் மற்றும் கமக்காரர் இடர்பாட்டு வெறுப்பு நடத்தையினதும் இடர்பாட்டுப் பரிமாணத்தை கரிசனைக்கெடுப்பது அவசியமாகும்.
- நெல் கமக்காரர்களின் இடர்பாட்டு வெறுப்பு நடத்தையை பொறுப்புக்கு எடுக்கின்ற விரிவாக்கல் மற்றும் பயிற்சி செயற்றிட்டங்களை அமுலாக்குதல்.

## 3. கமத்தொழில் திணைக்களத்தின் “ஹெல பொஜுன்ஹல்” மற்றும் பெண் தொழில்வாண்மையாளர்கள் மீதான தற்போதைய செயற்றிறனின் மதிப்பீட்டு ஆய்வு

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி எம்.டி. சுசிலா லூர்து | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி சாகரிகா ஹிட்டிஹாமு | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி திலூபா பமுனுஆரச்சி | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
செயற்கையான துணிக்கைகளிலிருந்து விடுபட்டு உள்நாட்டுச் சமையலை மேம்படுத்தும் அதேவேளை, தமது குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்காக தொழில்வாண்மையாளராக செயற்றிட்டத்தைச் சேர்ந்த பெண்களைப் பயிற்றுவிப்பதற்காக கமத்தொழில் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்தின் பெண்கள் விரிவாக்கல் அலகினால் *ஹெல பொஜூன்ஹல்* செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகின்றது. செயற்றிட்டத்தின் தற்போதைய நிலையை மதிப்பாய்வதையும் அத்துடன் *ஹெல பொஜூன்ஹல்* செயற்றிட்டத்தை விஸ்தரிப்பதற்கான பரிந்துரைகளை முன்மொழிவதையும் இந்த ஆய்வு குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**முடிவுகள்**:
பெண் தொழில்வாண்மையாளர்களின் குடும்பங்களுக்கு வருமானத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்பொன்றை முன்னெடுப்பு வழங்குவதுடன், அந்தக் குடும்பங்களின் சமூக-பொருளாதார அபிவிருத்தி மீது திட்டமான தாக்கமொன்றையும் கொண்டுள்ளது. குறைந்த உணவுக் கட்டணங்களின் காரணமாக, பாவனையாளர்கள் மத்தியில் கருத்துரு பிரசித்தத்தை ஈட்டுகின்றது.

**பரிந்துரைகள்**:
- ஒவ்வொரு நிலையத்திற்கும் பயிற்றுவிக்கப்பட்டவர்கள் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன், தனிப்பட்ட வியாபார முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு கூட்டுச் சேர்ந்த அலகு ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- கடன் பற்றிய அறிவு, தொழில்வாண்மையாளர்களுக்கான மனப்பாங்கிலான முன்னேற்றம் ஆகியன மீது பயிற்சி வழங்கப்பட வேண்டுமென்பதுடன், பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்பத்திரமொன்றும் வழங்கப்பட வேண்டும்.
- கமத்தொழில் திணைக்களம் மற்றும் வேறு அமைச்சு/திணைக்கள இடப்பரப்புக்களில் விற்பனைக்கூடங்கள் தாபிக்கப்பட வேண்டும்.

## 4. இலங்கையில் சிறந்த கமத்தொழில் நடைமுறைகள் (சி.க.ந.): நிலை, சவால்கள் மற்றும் கொள்கை தலையீடுகள்

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி பீ.எ.டி.எஸ்.பமுனுஆரச்சி | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி சாகரிகா ஹிட்டிஹாமு | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி எம்.டி. சுசிலா லூர்து | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
பாதுகாப்பான உணவினதும் அத்துடன் அதன் உற்பத்தியினதும் மீதான வளர்ச்சியுறும் விழிப்புணர்வுடன் மேற்படி முடிவைச் சாதிப்பதற்காக சிறந்த கமத்தொழில் நடைமுறைகள் முன்னணியில் உள்ளன. எனினும், சிறந்த கமத்தொழில் நடைமுறைகள் செயற்றிட்டத்தின் மெதுவான முன்னேற்றமானது ஒரு சவால் என்பதுடன், இது அவசரமாகத் தீர்க்கப்படுவது அவசியம் என்பதுடன், சிறந்த கமத்தொழில் நடைமுறைகள் செயற்றிட்டத்திற்கு ஊறுவிளைவிக்கின்ற காரணிகளை அடையாளங்காண்பதும் முக்கியமானதாகும். இலங்கையில் சிறந்த கமத்தொழில் நடைமுறைகள் செயற்றிட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கத்தை இயலச்செய்கின்றதும் அத்துடன் ஊறுவிளைவிக்கின்றதுமான காரணிகளைக் கண்டறிவதையும் அத்துடன் செயற்றிட்டத்தின் நிலைத்திருக்கும்தன்மை தொடர்பில் கொள்கை அறிவுறுத்தல்களை வழங்குவதையுமே இந்த ஆய்வு குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**முடிவுகள்**:
விளைவுகள் அத்துடன் அவர்கள் எதிர்நோக்குகின்ற பெருமளவு பிரச்சனைகள் ஆகியன குறித்து கமக்காரர்கள் அதிகளவு திருப்தியடையவில்லை என்ற அதேவேளை, சிறந்த கமத்தொழில் நடைமுறைகளையும் அத்துடன் பயிர்களை ஏற்றுமதி செய்வதில் கொள்வனவாளர்களைக் கண்டறிவதில் கஷ்டங்களை அடைவதையும் இது கண்டறிந்தது. நிரந்தரமான கிராக்கியும் அத்துடன் எதிர்பார்க்கப்பட்ட விலையும் பற்றாக்குறையாக விளங்கியமையும் ஏனைய காரணங்களாகும்.

செயற்றிட்டத்தின் வெற்றிகரமான தொடர்ச்சிக்கு பிரதான தடைக்காரணியாக சிறந்த கமத்தொழில் நடைமுறைகள் சான்றுப்பத்திரம் குறைந்தளவு அங்கீகரிக்கப்பட்டமை விளங்கியது.

**பரிந்துரைகள்**:

- பாவனையாளர் விழிப்பியல் செயற்றிட்டங்கள் மற்றும் விளம்பரப்படுத்தல் இயக்கங்கள் ஆகியன ஊடாக சிறந்த கமத்தொழில் நடைமுறைகள் சான்றுப்பத்திரத்திற்கு அதிகளவு அங்கீகாரம் வழங்கப்படுவது அவசியமாகும். கமக்காரர் வியாபாரப் பாடசாலைகள் மற்றும் வெளிக்கள செய்துகாட்டல்கள் ஆகிய வழிகளினால் அடிக்கடியிலான கமக்காரர் விழிப்பியல் செயற்றிட்டங்கள் அமுலாக்கப்படுவது அவசியமானதாகும்.
- இது நாட்டின் ஏற்றுமதி ஆற்றலளவை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் உபாயத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
- சிறந்த கமத்தொழில் நடைமுறைக்காக பயிர் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தினால், அது பூச்சிகளினதும் மற்றும் நோய்களினதும் சேதங்களின் காரணமாக பயிர் இழப்பின் இடர்பாட்டினைக் குறைந்தபட்சமாக்கும்.
- கொள்வனவு செய்யும் சக்தி உயர்வாக உள்ள நகரங்களில் சிறந்த கமத்தொழில் நடைமுறைக்காக விசேட விற்பனைக் கூடங்களைத் தாபித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 5. இலங்கையில் பால் கைத்தொழிலின் பெறுமதிச் சங்கிலிப் பகுப்பாய்வு

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி சாகரிகா ஹிட்டிஹாமு | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி எம்.டி. சுசிலா லூர்து | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி பீ.எ.டி.எஸ் பமுனுஆரச்சி | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
அதன் வருமானத் தோற்றுவிப்பிற்கும் மற்றும் தொழில் தோற்றுவிப்புத் திறமைக்கும் அத்துடன் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அம்சமொன்றாக பாற்பண்ணை அபிவிருத்தி விளங்குகின்றது. இருந்த போதிலும், இலங்கையின் பாற்பண்ணைத் துறையை விருத்திசெய்வதில் பெருமளவு தடைக்காரணிகள் அடையாளங்காணப்பட்டன. உற்பத்தியாளர்களிடமிருந்து பதப்படுத்துவோர் வரை அல்லது பாவனையாளர் மட்டம் வரை கூட பால் மற்றும் பாற்பண்ணை உற்பத்திகளில் பெறுமதிச் சங்கிலியைப் பகுப்பாய்வதற்கும் அத்துடன் சங்கிலி செயற்றிறனை மேம்படுத்துவதற்கு ஆலோசனைகளை முன்வைப்பதற்கும் ஆய்வு நடத்தப்பட்டது.

**முடிவுகள்**:
பாற்பண்ணை வளர்ப்பில் இளைஞர்களின் பங்கெடுப்பின் எண்ணிக்கை குறைந்தபட்சம் என்பதுடன், அது பிரதான தொழிலாகக் கடைப்பிடிக்கும் பெரும்பான்மையினரின் பிரதான தொழிலாகும். காணியானது ஒரு மட்டுப்படுத்தும் காரணி என்பதுடன், இதுவும் உற்பத்திக்கு ஊறுவிளைவிக்கின்றது. செறிவிலான தீவனமின்றி விளைச்சலை அதிகரிக்க முடியாது என கமக்காரர்கள் நம்புவதினால் உயர்ந்த ஆகுசெலவில் விலங்கினங்களுக்கு அவர்கள் பெரும்பாலும் செறிவான உணவுகளையே வழங்குகின்றனர். பாலின் பாரிய பங்கொன்று முறைமையான சேகரிப்பாளர்களினால் பதப்படுத்துவதாக ஆய்வு வெளிப்படுத்துகின்றது. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி இலாபகரமானது.

**பரிந்துரைகள்**:

- மந்தையொன்றில் பால்கறக்கும் பசுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.
- உயர்ந்த வருமானமொன்றைப் பெறுவதற்காக பால் சுரக்கும் வளைவில் பால் வழங்கும் விலங்குகள் சரிவர நிருவகிக்கப்பட வேண்டும்.
- சரியான தீவனத்தை வழங்குதல் மற்றும் தேவையான அளவிலான நீரை வழங்குதல் ஆகியன மீது கமக்காரர்கள் அறிவூட்டப்பட வேண்டும். நியாயமான ஓரம் ஒன்றுக்கு செறிவிலான தீவன ஆகுசெலவு சீராக்கப்பட வேண்டும்.

**நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்**

### 1. இலங்கையில் நெல் உற்பத்தி மீதான அரசாங்கக் கொள்கைளின் தாக்கத்தின் ஒரு மதிப்பாய்வு

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி திலினி பெரேரா | - | ஒருங்கிணைப்பாளர் |
| கலாநிதி டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| செல்வி எ.கே.எ.திசாநாயக்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| செல்வி யு.டி.ஆர்.உதாரி | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
சுதந்திரத்திலிருந்து நாட்டில் நெல் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு அடுத்தமைந்த அரசாங்கங்கள் நடவடிக்கைகளை எடுத்தன. அரிசி உட்பட உணவுப் பயிர்களின் சுய நிறைவினைச் சாதிப்பதிலும் அத்துடன் திறந்த சந்தையில் விலைகளை ஸ்திரப்படுத்துவதிலும் முக்கிய பங்கொன்றை கொள்கை வகுத்தல் ஆற்றுகின்றது. எனவே, அரிசியில் சுயநிறைவினைச் சாதிப்பதற்காக சிறந்த கொள்கைகளை வகுத்தமைப்பதனை நோக்கி இலங்கையில் கடந்த இரு தசாப்தங்களின் போது அமுலாக்கப்பட்ட அரசாங்கக் கொள்கைகளை மதிப்பாய்வதற்கு இந்த ஆய்வு முயலுகின்றது.

**தற்போதைய முன்னேற்றம்:**
தரவு சேகரிப்பும் அத்துடன் பகுப்பாய்வும் முடிவடைந்துள்ளன. அறிக்கை எழுதுதல் நடந்துகொண்டிருக்கின்றது.

### 2. இலங்கையில் பழம் மற்றும் மரக்கறிப் பாவனையின் பாங்குகள் மற்றும் நிர்ணயக்கூறுகள்

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| செல்வி யு.டி.ஆர்.உதாரி | - | ஒருங்கிணைப்பாளர் |
| செல்வி எ.கே.எ.திசாநாயக்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி திலினி பெரேரா | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| கலாநிதி டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
உணவில் பழங்களும, மரக்கறிகளும் முக்கியமான ஆக்கக்கூறுகள் என்பதுடன், நுண் போஷாக்கு குறைபாடுகளையும் அத்துடன் நோய்களின் தொற்றின்மையின் நிகழ்வினையும் தடுப்பதற்கும் உதவுகின்றது. வயது வந்த ஒருவருக்கு பழங்களினதும், மரக்கறிகளினதும் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச நாளாந்த உள்ளெடுப்பு 400 கிராம்களாகும். எனினும், இலங்கையில் அதன் பெரும்பாலான மக்களினால் இந்த தேவைப்பாடு நிறைவேற்றப்படவில்லை. எனவே, பழங்களினதும், மரக்கறிகளினதும் பாவனையையும் மற்றும் கொள்வனவு பாங்குகளையும், குறைந்த பாவனைக்கு பங்களிக்கும் காரணிகளையும் அத்துடன் பழம் மற்றும் மரக்கறி நுகர்வின் சராசரியை மேம்படுத்துவதற்கான மட்டுப்படுத்தல்களையும் அத்துடன் ஆற்றலளவுகளையும் அடையாளங்காண்பது மீது ஆய்வு நோக்கினைக் கொண்டுள்ளது.

**தற்போதைய முன்னேற்றம்:**
நகர, கிராமிய மற்றும் தோட்டத் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 14 மாவட்டங்களில் 450 குடித்தனங்களிலிருந்து தரவு சேகரிப்பு முடிவடைந்துள்ளது. தரவு பகுப்பாய்வும் மற்றும் அறிக்கை எழுதுதலும் நடந்துகொண்டிருக்கின்றன. 2019 மார்ச்சில் இந்த ஆய்வு ஆரம்பிக்கப்பட்டதுடன், 2020 செப்ரெம்பரில் முடிக்கப்படவுள்ளது.

## 02

## கமத்தொழில் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

**நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள்**

1. **காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் உரிமை மாற்றத்தினதும், தற்போதைய நடைமுறைகளினதும் நோக்கங்களுக்கு இடையிலான இணக்கத்தன்மை**

**ஆராய்ச்சிக் குழாம்:**

| | | |
|---|---|---|
| திருமதி தினுஷா ரத்னாயக்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி தூஷாரா தர்மவர்தன | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. அமல் திசாநாயக்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:

1935இன் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மீதான அடிப்படையில், அமுலாக்கப்பட்ட காணி ஒதுக்கீட்டுச் செயற்றிட்டங்கள் இலங்கையில் பெருமளவு காணியற்ற மக்களுக்கு நன்மையளித்துள்ளது. வதிவிட மற்றும் கமத்தொழில் நோக்கங்களுக்காக காணிகள் வழங்கப்பட்ட போதிலும், உத்தேசமான நோக்கங்களுக்காக அக்காணிகள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது கேள்விக்குரியதாகும். அனுராதபுரம், குருநாகல் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் 2012 முதல் 2018 வரை பங்கிடப்பட்ட மேட்டு நிலங்களின் தற்போதைய காணிப் பயன்பாட்டுப் பாங்கினை ஆராய்வதற்கு இந்த ஆய்வு முயலுகின்றது.

**முடிவுகள்**:

மூலத்திலான காணியைப் பெற்றவர்களில் பெரும்பான்மையானோர் ஒதுக்கீடுகளை தக்கவைத்துள்ளதுடன், ஏனையவற்றை அவர்களது பிள்ளைகள், உறவினர்கள் அல்லது வேறு உறவு அற்ற மக்கள் பயன்படுத்துகின்றனர். வதிவிடம், கமத்தொழில் மற்றும் வெற்றுநிலம் என காணிப் பயன்பாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது. வதிவிட குடியிருப்புக்காக வழங்கப்பட்ட காணிகள் பாரியளவில் சாதிக்கப்பட்டு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் முக்கிய நோக்கத்தினை பாரியளவில் சாதித்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அனுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் கமத்தொழில் காணிகளில் தென்னை, முந்திரி, மா, எலுமிச்சை, தோடை மற்றும் வாழை போன்ற பல்லாண்டுப் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன், நெல், உழுந்து, நிலக்கடலை, பயிற்றங்காய், எள்ளு, கெக்கரி, புடோல் ஆகியன சிறியளவில் செய்கை பண்ணப்படுகின்றன. சிறிய வியாபாரங்கள் மற்றும் சுய-செயற்பாடுகள் போன்ற வேறு வருமானத்தைத் தோற்றுவிக்கும் முயற்சிகளுக்காக சிறிதளவு காணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பரிந்துரைகள்**:

- பயனுறுதிவாய்ந்த காணிப் பயன்பாட்டுக்கு கமத்தொழில் காணிகளைப் பங்கிடும் போது, காணி பொருத்தத்தன்மை நிர்ணயிக்கப்பட வேண்டும்.
- பயனுறுதிவாய்ந்த காணிப் பயன்பாட்டினதும் அத்துடன் எதிர்பார்க்கப்பட்ட பிரச்சனைகள் மீதும் பின்தொடர் முறையொன்று இடம்பெற வேண்டும்.
- காணிப் பயன்பாடு மீது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட ஒழுங்குவிதிகள் மீதும் அத்துடன் உரித்துரிமை மீது குடும்பப் பிணக்குகளைத் தவிர்ப்பதற்காக அடுத்தமைவர்களை நியமிப்பதன் முக்கியத்துவத்தினதும் மீதும் காணி பெற்றவர்களுக்கு விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

**நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்**

1. **உணவுப் பயிர்கள் துறையில் பூச்சி மற்றும் நோய் முகாமைத்துவத்திற்கான பயனாளி-மையத்திலான நடமாடும் அடிப்படையிலான தீர்வு**

**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்துடனும், மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்துடனும் மற்றும் கமத்தொழில் திணைக்களத்துடனும் கூட்டு முயற்சியிலான ஆராய்ச்சிக் கருத்திட்டம்**

**ஹெ.க.ஆ.ப.நி. ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி ரிபானா புஹாரி | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ரேணுகா வீரக்கொடி | - | பிரதான ஆராய்ச்சியாளர் |
| திருமதி துஷாரா தர்மவர்தன | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. அமல் திசாநாயக்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. விராஜித் குருப்பு | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
கைநிறைந்த அறுவடையொன்றையும் அத்துடன் மேம்படுத்தப்பட்ட கமக்காரர்கள் வருமானமொன்றையும் பெறுவதில் முக்கிய பங்கொன்றை கமத்தொழில் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் முகாமைத்துவம் ஆற்றுகின்றது. மரபுரீதியான வழிவகைகளைத் தவிர, குறிப்பாக சாத்தியமான நோய்களின் நிகழ்வில் பூச்சியையும் மற்றும் நோயினையையும் தடுப்பதற்கு செம்மையானதும், விரிவானதுமான தகவலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அடைதலையே இலங்கையின் கமக்காரர்கள் கொண்டிருக்கின்றார்கள் என்பதுடன், அத்தகைய நிகழ்வுகளில் தடுப்பிலான நடவடிக்கைகள் எடுக்கப்படவும் வேண்டும். அத்தகைய தொடர்பாடல் விடுகைகள் தீவிரமான பயிர் இழப்புக்களுக்கு இட்டுச்செல்லக்கூடும். எனவே, பூச்சி மற்றும் நோய் நிகழ்வுகளினதும் மற்றும் சாத்தியமான நோய்களினதும் முன்கூட்டிய கண்டுபிடிப்பு ஊடாக பூச்சியிலானதும் மற்றும் நோயிலானதுமான பயிர் சேதங்களைக் குறைந்தபட்சமாக்குவதற்கு உறுதியான கணக்கிடும் தொழில்நுட்பங்களை குறிப்பாக உணர்திறன் மற்றும் நிகழ்வு கண்டுபிடிப்பினைப் பயன்படுத்தி சனசமூக அடிப்படையிலான அணுகுமுறைகளை விருத்திசெய்வதே இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

**தற்போதைய முன்னேற்றம்**:
பொலன்னறுவை, குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 180 நெற் கமக்காரர்களைக் கொண்ட ஆய்வு மாதிரியும் அத்துடன் அடிமட்ட அளவீடும் முடிக்கப்பட்டுள்ளன. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம், மேற்கு சிட்னி பல்கலைக்கழகம் மற்றும் கமத்தொழில் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து பல்-பிரிவுகளைக் கொண்ட விஞ்ஞானிகளின் குழாமினால் 'Ladybird' என்ற இந்த நடமாடும் பிரயோகத்தை விருத்திசெய்வதற்கு ஒன்றாகப் பணியாற்றப்பட்டதுடன், இது தற்போது சோதனையின் கீழுள்ளது. மாத்தளை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து 120 கமக்காரர்களைக் கொண்ட மாதிரியொன்றுடன் பெரிய வெங்காயத்திற்கு இந்தப் பிரயோகத்தை மேலும் விருத்திசெய்வது நடைமுறையிலுள்ளதுடன், இது 2020 சிறு போகத்தின் முன்னர் அமுல்படுத்துவதற்கு பொறுப்பேற்கப்படும்.

**03**

**சூழல், நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு**

**நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள்**

**1. இலங்கையின் உலர் வலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர் உற்பத்தி முறைமைகளின் காலநிலை மாற்றத்தின் பாதிப்புத்தன்மை**

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி கீதானி சமரசிங்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. டபிள்யு.எச்.எ. ஷாந்த | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. சிதத் பண்டார | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி திலினி பத்மாஜனி | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி மாலதி ரம்பொடகெதர | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி நதிஷா டயஸ் | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
காலநிலை மாற்றத்தின் பாரதூரமான தாக்கங்களைத் தணிப்பது தொடர்பில் அனுசரிப்புத் திட்டமிடலில் ஊறுபடுதன்மை மதிப்பீடு ஒரு பயனுள்ள கருவியாகும். நாட்டின் உணவு உற்பத்திக் கூடையான உலர் வலயம் உயர்ந்த சதவீதத்தைக் கொண்ட கமத்தொழில் சரீர உழைப்பினைக் கொண்டுள்ளது. ஊறுபடுந்தன்மை மதிப்பீட்டினைப் பயன்படுத்தி, இலங்கையின் உலர் வலயத்தில் செய்கை பண்ணப்படும் சில வேறு வெளிக்களப் பயிர்களுடன் இணைந்துள்ள பயிர்ச்செய்கை சமூகங்களின் ஒப்பீட்டுரீதியிலான ஊறுபடுந்தன்மையைப் புரிந்துகொள்வது மீது இந்த ஆய்வு நோக்கினைக் கொண்டுள்ளது.

**முடிவுகள்**:
குடித்தன தலைமையின் கல்வி மட்டம் மற்றும் தகவலுக்கான அடைதல் ஆகியன கமக்காரரர் மட்டத்திலான ஊறுதன்மையைக் குறைப்பதற்கு உதவுகின்றன. குறிப்பிட்ட வெளிக்களப் பயிர் ஒன்றுடன் செய்கை பண்ணப்பட்ட அதிகரிக்கப்பட்ட காணி விஸ்தீரணம் மற்றும் முழுநேர கமக்காரர்களாக விளங்குவது ஆகியன காலநிலை மாற்றத்திற்கான அதிகரிக்கப்பட்ட கமக்காரர் ஊறுபடுந்தன்மைக்கு இட்டுச்செல்கின்றன. புவியியல்-சார்ந்த அமைவிடம் மீதான அடிப்படையில் ஊறுபடுந்தன்மையின் மட்டம் குறிப்பிடத்தக்கவிதத்தில் மாறுபடுகின்றது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள கமக்காரர்கள் மிகவும் ஊறுபடத்தக்க சமூகத்தினராவர். உலர் வலயத்தில் வேறுபட்ட பயிர் உற்பத்தி முறைமைகளின் கீழ் சமூகங்கள் மத்தியில் ஊறுபடுந்தன்மையில் வேறுபாடுகளை விளைவிக்கின்ற காரணிகள் புவியியல் அமைவிடத்திற்கும் அத்துடன் சமூக-பொருளாதார வேறுபாடுகளுக்கும் அக்கறையின்றி பெரிதுமே ஒத்ததாகும்.

**பரிந்துரைகள்**:

- கமக்காரர்களுக்கு பாசன நீரின் அதிகரித்த கிட்டுந்தன்மைக்கும் மற்றும் செயற்றிறனுக்கும் நீர்ப்பாசனக் கட்டமைப்பையும், குறைநிரப்பு நீர்ப்பாசன வசதிகளையும் விருத்தி செய்வதற்கும் அத்துடன் நீர் முகாமைத்துவத்தைப் பலப்படுத்துவதற்கும் அதிகளவு நிதியங்கள் ஒதுக்கப்படுவது அவசியமாகும்.
- காலநிலை மாற்றத்திலான தாக்கங்களைத் தணிப்பதில் நீர்ப்பாசன செயற்றிறனையும் மற்றும் நீர் உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதற்கும் அத்துடன் பயிர்ச்செய்கைச் செயற்பாடுகளின் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கும் உயர் செயற்றிறனிலான நீர்ப்பாசன முறைமைகளை மேம்படுத்தல் உயர்த்தப்பட வேண்டும்.
- காலநிலை மாற்றத்தினதும் மற்றும் காலநிலை மிதமிஞ்சிய நிலைகளினதும் தாக்கங்களுக்கு குறைந்த கூருணர்விலான பகுதியில் கிட்டுகின்ற உத்தேசமான வாழ்வாதார விருப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கும் அத்துடன் மேம்படுத்துவதற்கும் பயிற்சிச் செயற்றிட்டங்களை நடத்துவது சுட்டிச்சொல்லப்படுகின்றது.

- காலநிலை மற்றும் காலநிலை சாராமாறிகள் ஆகியன மீது புதுப்பித்தல்களைப் பெறுவது மற்றும் பயன்படுத்துவது, கமத்தொழில் உற்பத்திகளின் கிட்டுந்தன்மை மற்றும் அவற்றுக்கான அடைதல் அத்துடன் புதுமையானதும், மேம்படுத்துவதுமான

தொழில்நுட்பங்கள் ஆகியன மீது புதுப்பித்தல்களைப் பெறுவது மற்றும் பயன்படுத்துவது ஆகியன மீது கமக்காரர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

## 2. காலநிலை மாற்றத்திற்கு அனுசரிப்புப் பதிலிறுப்பாக பாதுகாக்கப்பட்ட கமத்தொழிலின் கீழ் மரக்கறிச் செய்கை

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி எம்.பி.என்.எம். டயஸ் | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ரி.பி.முனவீரகே | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
பாரிய பருவங்களில் உற்பத்தி உச்சநிலையை அடைகின்ற அதேவேளை, அது பருவமற்ற காலங்களில் குறைவடைவதனால், மரக்கறிச் செய்கைத் துறையில் பாரிய பிரச்சனையொன்றாக மரக்கறி உற்பத்தியின் பருவகாலத்தன்மை விளங்குகின்றது. கிராக்கியை நிறைவேற்றுவதற்கு ஆண்டு பூராவிலுமான மரக்கறி உற்பத்தி விரும்பப்படுகின்றது. அவ்வாறாக, ஆகக்கூடுதலான மரக்கறி உற்பத்தியைக் கொண்டுள்ள உலர் வலயமானது மரக்கறி உற்பத்தியின் அதிகரிப்பில் இதை மேற்கொள்வதற்கான பாரிய ஆற்றலளவைக் கொண்டுள்ளது. உலர் வலய உற்பத்தியின் பாரிய தடைக்காரணிகளாக விளங்கும் மட்டுப்படுத்தப்பட்ட நீரினதும் மற்றும் வேறு மூலங்களினதும் கீழ், மரக்கறி உற்பத்தியை அதிகரிக்கின்ற அதேவேளை, மறுதலையான காலநிலையிலான நிகழ்வுகளின் தாக்கங்களைத் தணிப்பதற்கு பயனுறுதிவாய்ந்த அனுசரிக்கும் முறையொன்றாக பாதுகாக்கப்பட்ட கமத்தொழில் அடையாளங்காணப்பட்டுள்ளது. எனவே, ஆண்டு முழுவதும் மரக்கறி உற்பத்தியை அதிகரிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களினதும் அத்துடன் மிதமிஞ்சிய காலநிலை நிலைமைகளினதும் கீழ், உலர் வலயத்தில் மரக்கறிச் செய்கைக்காக பாதுகாக்கப்பட்ட கமத்தொழிலைப் பயன்படுத்தும் கமக்காரர் மட்ட ஆற்றலளவுகளையும் மற்றும் தடைக்காரணிகளையும் கண்டறிவதை இந்த ஆய்வு குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**முடிவுகள்**:
மழைப் பருவங்களின் போது உயர்வான வருமானமொன்றை ஈட்டுவதற்காக, உலர் வலய மரக்கறி கமக்காரர்களினால் பயன்படுத்தப்படும் பாதுகாக்கப்பட்ட கமத்தொழில் முறைமைகளின் பாரிய வகையே மழை உறைவிடங்களாகும். பாதுகாக்கப்பட்ட கமத்தொழில் மீதான தொழில்நுட்ப அறிவு, பாதுகாக்கப்பட்ட கமத்தொழில் முறைமைகளின் நிருமாணத்திற்கான நிதியங்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களின் தோதான சந்தைப்படுத்தல் வழிவகைகள் ஆகியவற்றுக்கான பற்றாக்குறையே மரக்கறி கமக்காரர்களுக்கான பாரிய தடைக்காரணிகள் எனக் கண்டறியப்பட்டது.

**பரிந்துரைகள்**:

- உலர் வலயப் பகுதிகளுக்கு பொருத்தமான பாதுகாக்கப்பட்ட கமத்தொழில் முறைமைகளை வடிவமைப்பது மீது ஆராய்ச்சி நோக்கினைக் கொண்டிருக்கவேண்டும்.
- கட்டுப்பாட்டுச் சூழல் காரணிகளுக்காக நுண் நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்களின் பயன்பாடு, குறைந்த ஆகுசெலவிலான தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் நிருமாண ஆகுசெலவினைக் குறைத்தல் ஆகியன பாதுகாக்கப்பட்ட கட்டமைப்புக்களை வடிவமைக்கும் போது கரிசனைக்கெடுக்கப்பட வேண்டிய பாரிய காரணிகளாகும்.
- பாதுகாக்கப்பட்ட கமத்தொழில் தொழில்நுட்பங்கள் மீதான பயிற்சிச் செயற்றிட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

### நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்

## 1. மத்திய மேட்டுநிலப் பிராந்தியத்தின் கிழக்குச் சரிவுகளில் நீர் முகாமைத்துவ மற்றும் ஆட்சிப் பிரச்சனைகள் மீதான ஆய்வு

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யு.எச்.எ. ஷாந்த | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ஜி.ஜி.டீ. எல்.டபிள்யு.சமரசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ரி.பி.முனவீரகே | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:

வேறுபட்ட பயன்பாட்டாளர்கள் மத்தியில் நீர் ஒதுக்கீட்டினை ஒழுங்குபடுத்துவதற்கு நிறுவனரீதியிலான அமைப்பொன்றும் அத்துடன் நீர் வளங்கள் மீதான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு தாபிக்கப்பட்ட பொறிமுறையொன்றும் இன்மையானது மத்திய மேட்டு நிலப் பிராந்தியத்தின் காலநிலைக்கு ஊறுபடத்தக்க கிழக்குச் சரிவுகளில் அத்தகைய பிணக்குகளின் உயர்வுக்கு முன்னணிவாய்ந்த காரணியொன்றாகும். வேறுபட்ட பயன்படுத்துனர்கள் மத்தியில் நீரின் நியாயமான ஒதுக்கீட்டுக்கு பொறிமுறையொன்றைத் தாபிக்கின்ற அதேவேளை, நீர் மோதல் தீர்மானத்திற்காக நிறுவனரீதியிலான ஒழுங்குகளின் தேவைப்பாட்டினை ஆராய்ச்சி முனைவுபடுத்துகின்றது. மத்திய மேட்டு நிலப் பிராந்தியத்தின் காலநிலையிலான ஊறுபடத்தக்க கிழக்குச் சரிவுகளில் நீர் முகாமைத்துவப் பிரச்சனைகளை இந்த ஆய்வு மதிப்பாய்வதுடன், வேறுபட்ட பயன்படுத்துனர் குழுக்கள் மத்தியில் நீரின் ஒதுக்கீட்டுக்கான நிலைத்திருக்கத்தக்க பொறிமுறையொன்றையும் முன்மொழிகின்றது. இது வேறுபட்ட அக்கறைகளுடனான வேறுபட்ட நீர் பயன்பாட்டாளர் குழுக்களை அடையாளங்காண்பதுடன், வேறுபட்ட பயிர் உற்பத்தி முறைமைகளில் காணி விஸ்தீரணத்தின் விஸ்தரிப்பினையும்/வீழ்ச்சியினையும் மதிப்பிடுகின்றது. மேலும், அனுகூலமற்ற நீர் பயன்பாட்டுக் குழுக்களின் வாழ்வாதாரத்தினதும் மற்றும் குடித்தன உணவுப் பாதுகாப்பினதும் மீது நீர் பற்றாக்குறையின் தாக்கத்தினைப் பரீட்சிப்பதுடன், வேறுபட்ட பயனுரித்தாளர்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைத்திருக்கத்தக்க நீர் ஒதுக்கீட்டு பொறிமுறையொன்றைப் பெறுவதையும் பரீட்சிக்கின்றது.

**தற்போதைய முன்னேற்றம்**:
தரவு சேகரிப்பும் மற்றும் பகுப்பாய்வும் முடிவடைந்துள்ளன. அறிக்கை எழுதுதல் நடந்துகொண்டிருக்கின்றது.

## 2. இலங்கையின் ஈர வலயத்தில் கமத்தொழில் உற்பத்தித்திறன் மீது தற்போதைய பாரம்பரிய நிலவுரிமை முறைமையின் (*தட்டு-மாறு மற்றும் கட்டி-மாறு*) தாக்கங்கள்

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி ரி.பி.முனவீரகே | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ஜி.ஜி.டீ. எல்.டபிள்யு.சமரசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
தாழ் மற்றும் மத்திய நாட்டு ஈர வலய நெற் காணிகளில் செறிந்துள்ள பிராந்தியத் தோற்றப்பாடு ஒன்றே *தட்டு-மாறு மற்றும் கட்டி-மாறு* ஆகும். விடயம் மீது மிகவும் சில ஆய்வுகளே நடத்தப்பட்டுள்ளதுடன், முறைமையின் பெறுமதி பற்றி பலமானதும் அத்துடன் முரண்படுகின்றதுமான கருத்துக்கள் தோற்றுவித்துள்ளன. *தட்டு-மாறு மற்றும் கட்டி-மாறு* முறைமையின் தன்மையும் மற்றும் பின்விளைவுகளும் ஒரு பகுதியிலிருந்து இன்னொன்றுக்கு பாரியளவில் வேறுபடுகின்றன. எனவே, இலங்கையின் ஈர வலயத்திலுள்ள நெற் காணிகளில் உற்பத்தித்திறன் அம்சங்கள் மீது *தட்டு-மாறு மற்றும் கட்டி-மாறு* காணி உரிமை முறைமைகளின் தாக்கங்களைப் பரீட்சிப்பதையும் அத்துடன் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு சாத்தியமான தீர்வுகளை நாடுகின்ற அதேவேளை, இப்பிரச்சனையின் அளவினை முனைவுபடுத்துவதையும் இந்த ஆய்வு நோக்காகக் கொண்டுள்ளது.

நோக்கத்தைச் சாதிப்பதில் *தட்டு-மாறு மற்றும் கட்டி-மாறு* காணி உரிமை முறைமையின் குணவியல்பிலான அம்சங்களையும் அத்துடன் கமத்தொழில் உற்பத்தித்திறன் மீது காணி உரிமை முறைமையின் தாக்கத்தின் அளவையும் அத்துடன் தன்மையையும் ஆய்வு அடையாளங்காணும். நடைமுறையிலான கமத்தொழில்/கமநல அமைப்பில் இந்த முறைமையை நோக்கி சிறுநிலஉரிமை மனப்போக்குகள் ஆராயப்படும் என்பதுடன், குறிப்பிட்ட காணி உரிமையுடன் இணைந்துள்ள உற்பத்தித்திறன் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான தீர்விலான நடவடிக்கைகளும் சுட்டிச்சொல்லப்படும்.

*தட்டு-மாறு மற்றும் கட்டி-மாறு* காணி நிலவுரிமை முறைமை நிலவுகின்ற இரத்தினபுரி, களுத்துறை மற்றும் காலி ஆகிய மூன்று மாவட்டங்கள் இந்த ஆராய்ச்சியின் ஆய்வுப் பகுதிகளாக தெரிவுசெய்யப்பட்டன.

**தற்போதைய முன்னேற்றம்**:
2018/2019 பெரும்போகத்திலும் மற்றும் 2019 சிறுபோகத்திலும் *தட்டு-மாறு மற்றும் கட்டி-மாறு* முறைமையைக் கடைப்பிடிக்கும் தெரிவுசெய்யப்பட்ட 150 கமக்காரர் குடித்தனங்கள் மீதான கேள்விக்கொத்து அளவீடொன்று நடத்தப்பட்டது.

**3. கமக்காரர் தாபனங்களுக்கு சிறிய நீர்ப்பாசனப் புனரமைப்பு ஒப்பந்தங்களை வழங்குவதன் மதிப்பீடு: இலங்கையில் நிலைத்திருக்கதத்க்க சிறிய நீர்ப்பாசன அபிவிருத்திக்கான தாக்கங்களின் ஒரு பகுப்பாய்வு**

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி எம்.ரி. பத்மாஜனி | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. டபிள்யு.எச்.எ. ஷாந்த | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஜி.ஜி.டீ. எல்.டபிள்யு.சமரசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
MNPEA 3/2003இன் கீழ் வழங்கப்பட்ட சுற்றறிக்கையுடன் கமக்காரர் தாபனங்களுக்கு சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு ஒப்பந்தங்களை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டது. போட்டிக்குரிய கூறுவிலை நடைமுறையொன்றைப் பின்பற்றாமல் கமக்காரர் தாபனங்களுக்கு சிறிய நீர்ப்பாசனப் புனரமைப்பின் ஒப்பந்தங்களை வழங்கும் அதன் நோக்கங்களை கமநல அபிவிருத்தித் திணைக்களம் சாதித்துள்ளதா அத்துடன் இந்த நகர்வானது சாத்தியமானதா என்றவாறு மேற்படி செயல் திட்டம் தொடர்பான இரு அடிப்படை வினாக்களுக்கு பதிலளிப்பதற்காக இந்த ஆய்வு வடிவமைக்கப்பட்டது. கமக்காரர் தாபனங்கள் ஊடாக, சிறிய நீர்ப்பாசனப் புனரமைப்பின் இந்த தாக்கங்களை ஆய்வு செய்வதில் இலங்கையில் சிறிய நீர்ப்பாசன முறைமைகளின் நிலைத்திருக்கும்தன்மையை நோக்கி சுற்றறிக்கையை மீள்பரிசீலிப்பதற்கும் அத்துடன் அவசியமான திருத்தங்களைச் செய்வதற்கும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு நன்மை அளிக்கின்றது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து குருநாகல், அனுராதபுரம், நுவரெலியா, பதுளை மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களில் கடந்த ஐந்து வருடங்களில் (2015-2019) அமுலாக்கப்பட்ட 40 சிறிய நீர்ப்பாசன புனரமைப்புக் கருத்திட்டங்கள் அளவீட்டு மாதிரியாக எழுந்தமான விதத்தில் தெரிவுசெய்யப்பட்டன.

**தற்போதைய முன்னேற்றம்**:
வெளிக்கள தரவுச் சேகரிப்பு முடிவடைந்துள்ளதுடன், தரவுகளைக் குறியிடுதல், பதித்தல் மற்றும் பதிவுசெய்தல் ஆகியன நடந்துகொண்டிருக்கின்றன.

**4. இலங்கையில் கிராமியக் கமத்தொழிலின் நிலைத்திருக்கும்தன்மை மீது கமத்தொழில் மரபுரிமைகளின் தாக்கங்கள்**

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| செல்வி ஜே.எ.யு.பி.ஜயசிங்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே.ரம்பொடகெதர | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஆர்.டி.விஜேசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
இலங்கையின் தேசிய கமத்தொழில் மரபுரிமை முறைமைகளாகக் கருதப்படுகின்ற உள்ளூர்ரீதியாக உருவாக்கப்பட்ட பயிர்ச்செய்கை, பண்ணை முகாமைத்துவத் தொழில்நுட்பங்கள் மற்றும் முறைமைகள் ஆகியன மீதான பெருமளவு அறிவொன்றுடன், வளமான கமத்தொழில் வரலாறொன்றை இலங்கை கொண்டுள்ளது. எனினும், வர்த்தகரீதியிலான துரிதப்படுத்தப்பட்ட கமத்தொழிலின் துரிதமான கூர்ப்புடன் இந்த முறைமைகளை வரையறுப்பதற்கும், அங்கீகரிப்பதற்கும், சேகரிப்பதற்கும் அத்துடன் பாதுகாப்பதற்கும் தேசியக் கொள்கையும் மற்றும் பொறிமுறையும் இன்மையினால் நிலைத்திருக்கத்தக்க நவீன கமத்தொழில் முறைமைகளை விருத்திசெய்வதற்கு சாதகமான தளமொன்றாக அவற்றைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஒன்று இருந்தபோதிலும், இந்த முறைமைகள் அற்றுப்போகின்றன. எனவே, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் வேண்டுகோள் ஒன்றின் மீது, இலங்கையில் கிராமியக் கமத்தொழிலின் நிலைத்திருக்கம்தன்மை மீது கமத்தொழில் மரபுரிமை முறைமைகளின் விளைவுகளைப் பரீட்சிப்பதற்காக இந்த ஆய்வினை ஹெ.கொ.க.ஆ.ப.நி. நடத்துகின்றது.

**தற்போதைய முன்னேற்றம்**:

தெரிவு மூலபிரமாணத்தை விருத்திசெய்யும் நடைமுறையில் தேசிய முக்கிய கமத்தொழில் மரபுரிமை முறைமைகளை அடையாளங்காண்பதற்காக இலக்கியம் மதிப்பீடு செய்யப்படுவதுடன், முறைமையியலும் வரையறுக்கப்படுகின்றது.

**நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்கள்**

1. **சேமிப்பினதும், வளர்ப்பினதும் அணுகுமுறையின் அமுலாக்கத்திற்கான அடிப்படையைக் கட்டியெழுப்புதல்** (உ.வி.தா. ஆய்வு) **அரிசி அடிப்படையிலான பயிர்ச்செய்கை முறைமைகளின் நிலைத்திருத்தல் மற்றும் காலநிலை விரிவாற்றலிலான துரிதப்படுத்தல் மீதான பிராந்திய உபாயங்கள்**

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யு.எச்.எ. ஷாந்த | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஜி.ஜி.டீ. எல்.டபிள்யு.சமரசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ரி.பி.முனவீரகே | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே.ரம்பொடகெதர | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| செல்வி ஜே.எ.யு.பி.ஜயசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
சூழல் முறைமைகளின் காவும் ஆற்றலளவினுள் உற்பத்தி உள்ளீட்டின் அலகினால் ஆகக்கூடுதலான சாத்திய உற்பத்தித்திறனைச் சாதிப்பதற்காக உணவு விவசாயத் தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பயிர் உற்பத்தியின் நிலைத்திருக்கத்தக்க துரிதப்படுத்தலின் *பாதுகாத்தலும், வளர்த்தலும்* அணுகுமுறை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும், சிறுவுடைமை பண்ணை முறைமைகளில், பயிர் உற்பத்தியின் நிலைத்திருக்கத்தக்கதும், காலநிலை உறுதியான துரிதப்படுத்தலுக்கும் மற்றும் பரவலாக்களுக்கும் மூலோபாயங்களைக் கருத்திட்டம் வகுத்தமைத்தது. ஆரம்பத்தில் சோளம் அடிப்படையிலான பயிர் உற்பத்திக்கு ஆபிரிக்காவின் சாம்பியாவில் அதன் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு கருத்திட்டம் எதிர்பார்க்கின்ற அதேவேளை, இலங்கையில் அரிசி அடிப்படையிலான முறைமையில் பயிர் உற்பத்தியில் தீவிரப்படுத்தலை அது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் வேறுபட்ட அரசாங்க நிறுவனங்களின் பங்காண்மையில் அனுராதபுரம் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆய்வு அமைவிடங்களில் கருத்திட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை, தேசிய மட்ட சேவை வழங்குனராக ஹெ.கொ.க.ஆ.ப.நி. சேவையாற்றியது.

தேசிய மட்டத்தில் கருத்திட்ட அமுலாக்கத்தை வசதிப்படுத்துவதே நோக்கமாகும். தாழ்நில நெல் துறை மற்றும் மேட்டுநில சோளம் மற்றும் வேறு களப்பயிர் துறை ஆகியவற்றுக்கு வேறுபட்ட கமப்பொருளியல் தொழில்நுட்பங்களை அமுலாக்குவதும் அத்துடன் மதிப்பிடுவதும் மற்றும் பயிற்சி அத்துடன் செய்துகாட்டல்கள் ஆகியன ஊடாக பண்ணைத்தொழில் சமூகங்கள் மத்தியில் புதிய தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதுமே குறிக்கோளாகும்.

**முடிவுகள்**:

நெல் விளைச்சலில் குறிப்பிடத்தக்க ஏற்றத்திலான மாற்றமொன்றைப் பதிவுசெய்கின்ற அதேவேளை, சிறிய நீர்ப்பாசனக் குளங்களில் நீரைச் சேமிப்பதற்கான உயர்ந்த அளவில் பயனுறுதிவாய்ந்ததாக நீர் முகாமைத்துவத்தின் மாற்று ஈரப்படுத்தும் மற்றும் உலர்த்தும் முறை விளங்குகின்றது. பயிர் விளைச்சலுக்கு இணக்கமின்றி நைதரசன் உரத்தின் தேவைப்பாட்டின் 40 சதவீதத்திற்கு மேற்பட்டதை இலை வர்ண அட்டவணை மீதான அடிப்படையில் நைதரசன் உர பிரயோகம் குறைக்கமுடியும். விதை நெல் தேவைப்பாட்டினையும் அத்துடன் நீர் தேவைப்பாட்டினையும் குறைக்கின்றதும் அத்துடன் இறுதியாக பயிர் விளைச்சலை அதிகரிக்கின்றதுமான பண்ணைத் தொழில் சமூகங்களுக்கு பல்-எண்ணிக்கையிலான அனுகூலங்களை நெல் பரசூட் முறையை தாபித்தல் விளைவித்துள்ளது.

பயிர்களைத் தாபிப்பதற்கான சரீர உழைப்பின் தேவைப்பாட்டினை Fiterelli விதைப்பான் உடனான சோள விதையிடும் பொறிமுறை குறிப்பிடத்தக்களவில் குறைப்பதுடன், நடுகையினால் விதை ஆழமாக இடப்படும் போது அது மயில்களினாலும் மற்றும் வேறு பறவைகளினாலும் அத்துடன் விலங்குகளினாலும் விதைகள் கொத்தப்படுவதை தடுப்பதாக கண்டறியப்பட்டது.

2. **இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பயிர் வகைகளுக்கான நுண் நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்களுக்கு நீர்/சக்தி அடிமட்ட மதிப்பீடு**

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. எம்.எ.சி.எஸ். பண்டார | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. டபிள்யு.எச்.எ. ஷாந்த | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி எம்.ரி. பத்மாஜனி | - | துணை-ஆராய்ச்சியாளர் |

திரு. டபிள்யு.எ.என்.விஜேசூரிய - துணை-ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நேர காலம்**: செப்ரெம்பர் 2019 - ஜனவரி 2020

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:

வேறுபட்ட பயிர்ச்செய்கை முறைமைகள் மற்றும் வேறுபட்ட புவியியல் சார்ந்த அமைவிடங்கள் முழுவதும் கமக்காரர்களினால் மரபுரீதியிலான நீர்ப்பாசன வகைகள் (வெள்ள நீர்ப்பாசனம், வாய்க்கால் நீர்ப்பாசனம் மற்றும் தாவர குன்றுகளில் நீர் பாய்ச்சுதல்) ஆகியன பரந்தரீதியில் கடைப்பிடிக்கப்படுகின்றன. நீரையும் மற்றும் சரீர உழைப்பையும் சேமிக்கும் முன்னெடுப்பொன்றாக இந்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக நுண்-நீர்ப்பாசன முறைமைகள் (விசிறல் மற்றும் சொட்டு நீர்ப்பாசன முறைமைகள்) முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. நுண்-நீர்ப்பாசன முறைமைகளை அறிமுகப்படுத்துவதிலும் அத்துடன் மேம்படுத்துவதிலும் பின்னர் தோன்றிய முன்னெடுப்புக்களினால் அரசாங்க நிறுவனங்களின் பயிர் பரவலாக்க உபாயங்கள் நன்கு ஆதரவளிக்கப்பட்டன. மிகவும் முறைமையான தன்மையொன்றில் நுண்-நீர்ப்பாசன முறைமைகளைப் பிரசித்தப்படுத்துவதற்கும் அத்துடன் மேலும் மேம்படுத்துவதற்கும் வேறுபட்ட பயிர்களுக்கும் அத்துடன் வேறுபட்ட அமைவிடங்களுக்கும் இந்த தொழில்நுட்பத்தின் உண்மையான நீரையும் மற்றும் சக்தி சேமிப்புக்களையும் ஆய்வு செய்வதும், தணிக்கை செய்வதும் அத்துடன் ஆவணப்படுத்துவதும் அவசியமாகும்.எனவே, குறிப்பான பயிர் வகைகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட பண்ணைத் தொழில் சமூகங்களினால் பிரயோகிக்கப்படுகின்ற பாரிய நீர்ப்பாசன முறைமைகளின் வகைகளை இந்த ஆய்வு ஆராய்கின்றது. வேறுபட்ட அமைவிடங்களில் வேறுபட்ட நீர்ப்பாசன முறைமைகளின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயிர்களுக்கு கமக்காரர்களினால் பயன்படுத்தப்படும் நீரின் அளவை இது ஆய்வு செய்வதுடன், வேறுபட்ட நீர்ப்பாசன முறைமைகளுடன் தெரிவுசெய்யப்பட்ட பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கான சக்தி பாவனையிலுள்ள வேறுபாடுகளையும் பரீட்சிக்கின்றது.

**தற்போதைய முன்னேற்றம்**:

தரவு சேகரிப்பும் மற்றும் பகுப்பாய்வும் முடிவடைந்துள்ளன. அறிக்கை எழுதுதல் நடந்துகொண்டிருக்கின்றது.

### 3. இலங்கை, அனுராதபுரம் மாவட்டத்தில் அரிசி உற்பத்தி மீது திருந்திய கமத்தொழில் விரிவாக்கல் சேவைகளின் தாக்கம் மீதான சான்றினைக் கட்டியெழுப்புதல்

**ஆராய்ச்சிக் குழாம்**:

திரு. டபிள்யு.எச்.எ. ஷாந்த - ஒருங்கிணைப்பாளர்
திரு. எம்.எ.சி.எஸ். பண்டார - துணை-ஆராய்ச்சியாளர்
திருமதி எம்.ரி. பத்மாஜனி - துணை-ஆராய்ச்சியாளர்
திருமதி ஜி.ஜி.டீ. எல்.டபிள்யு.சமரசிங்க- துணை-ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்**: உணவு, விவசாயத் தாபனம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:

அதன் தேசிய அரிசி சுயநிறைவு மற்றும் கிராமிய வறுமைக் குறைப்பு நோக்கங்கள் மீது அரசாங்கம் பாரிய முயற்சிகளைத் தொடர்கின்ற அதேவேளை, அதன் உர மான்யச் செயற்றிட்டத்தை மீளவாய்வதற்கும் அது திட்டமிடுகின்றது. மேலும், மான்ய விநியோகத்தை மேம்படுத்துவதற்காக தற்போதைய மான்ய செயற்றிட்டத்தை அடைவதில் முகங்கொடுக்கப்படும் வேறுபட்ட மான்ய முறைமைகளினதும் அத்துடன் கமக்காரர் மான்ய முன்னுரிமைகளினதும் சவால்களின் தாக்கத்தைப் புரிந்துகொள்வதற்கான தகவலை கமத்தொழில் அமைச்சு கோரியுள்ளது.

எனவே, பயன்பாட்டில் நிலைத்திருக்கத்தக்க கமத்தொழில் நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளுதல் அத்துடன் செயற்றிறன் ஆகியன மீது தகவலைப் பெற்றுக்கொள்வதற்காக அரிசி உற்பத்தியாளர் மத்தியில் குடித்தன மட்ட அளவீடொன்றை நடத்துவதே ஆய்வின் நோக்கமாகும். சேமித்தல் மற்றும் வளர்த்தல் கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அனுராதபுரம் மாவட்டத்தில் உணவு விவசாயத் தாபனத்திற்கும் மற்றும் ஹெ.கொ.க.ஆ.ப.நி.க்கும் இடையிலான முன்னைய கூட்டுமுயற்சியின் மீது இந்த அளவீடு கட்டியெழுப்பப்படுகின்றது. சேமித்தல் மற்றும் வளர்த்தல் கருத்திட்டத்தின் கீழ் 2018 ஒக்டோபரிலும் மற்றும் 2019 பெப்ரவரியிலும் மாவட்டத்தில் தரவுகளை 110 கமக்காரர் தாபனங்களிலிருந்து 1,100 அரிசி கமக்காரர்களைக் கொண்ட குடித்தன அளவீடொன்று சேகரித்தது. தற்போதைய கருத்திட்டத்திற்கான அடித்தளமாக இந்த தரவுத் தொகுதி விளங்குகின்றது.

மேற்படி ஆய்வைச் சாதிப்பதில் சேமநலன் விளைவுகள் மீது வேறுபட்ட நடைமுறைகளினதும் மற்றும் அதன் விளைவுகளினதும் ஏற்றுக்கொள்ளலின் செலுத்திகளை மதிப்பிடுவதுடன், குடித்தன சேமநலனினதும் மற்றும் உற்பத்தித்திறனினதும் அத்துடன் கமக்காரர் விருப்புரிமைகளினதும் மீது வேறுபட்ட உரமான்ய முறைகளின் தாக்கத்தையும் பகுப்பாய்கின்றது. 2020 செப்ரெம்பரிலும், ஒக்டோபரிலும் சேமித்தல் மற்றும் வளர்த்தல் அளவீட்டில் சகல 1,100 குடித்தனங்களுக்கு அளவீட்டுத் தரவு சேகரிப்பின் இரண்டாவது சுற்றினை ஆய்வு அமுலாக்கவுள்ளது. உர மான்ய விருப்புரிமைகள் தொடர்பான மேலதிகமான கேள்விகளை சேர்க்கின்ற அதேவேளை, முன்னைய சேமித்தல் மற்றும்

வளர்த்தல் அளவீட்டினை அளவீடு நகல்படுத்தும். மேலதிகமாக, இரு மான்ய அமுலாக்கல் முறைகளை ஒப்பிடுவதற்கும் அத்துடன் தாக்கப் பகுப்பாய்வினையும் அத்துடன் சமயாசமய அனுமானத்தையும் மேம்படுத்தக்கூடிய குழாம் தரவு பொருளியலளவைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும் உதவிபுரியும்.

**04**

**சந்தைப்படுத்தல் உணவுக் கொள்கை, கம-வியாபாரப் பிரிவு**

**நிறைவுசெய்யப்பட்ட ஆய்வுகள்**

**1. இலங்கையில் தரத்திலான விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்காக அரசாங்க-தனியார் பங்காண்மை வாய்ப்பு வளங்கள்**

**ஆராய்ச்சிக் குழாம்**:

திரு. ஐ.வி.குருப்பு - ஒருங்கிணைப்பாளர்
திருமதி எ.ஆர்.டபிள்யு.எம்.எம்.டி. அமரக்கோன்- துணை-ஆராய்ச்சியாளர்
திரு. எஸ்.பி.பெர்னாண்டோ - துணை-ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
இலங்கையில் பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் பண்ணைத்தொழில் சமூகங்ககளின் பாரிய உணவுப் பயிரொன்றாகவும் மற்றும் பிரதான வாழ்வாதாரமாகவும் உருளைக்கிழங்கு விளங்குவதுடன், விதையைப் பெறுவதில் உள்ள பிரச்சனைகளின் காரணமாக, அதன் செய்கை கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது. விளைவொன்றாக தரத்திற்கு விட்டுக்கொடுத்து கமக்காரர்களினால் சுய-விதை உற்பத்தியின் ஊடாக பெருமளவு விதை உற்பத்தி நிறைவேற்றப்படுகின்றது. அரசாங்க-தனியார் பங்காண்மைகள் ஊடாக தரத்திலான விதை உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பலப்படுத்துவதற்கு பாரியளவிலான ஆற்றலளவு உள்ளது. இலங்கையின் தரத்திலான விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை மேம்படுத்துவதற்கு அரசாங்க-தனியார் பங்காண்மைகளை ஆரம்பிப்பதில் உள்ள வாய்ப்பு வளங்களை நிர்ணயிப்பதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். முறைமையானதும், முறைசாராததுடன் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி முறைமைகளில் கட்டமைப்பு-நடத்துகை-செயற்றிறன் மாதிரிகளையும், இலங்கையில் விதை உருளைக்கிழங்கின் அரசாங்க-தனியார் பங்காண்மைகளையும் ஆய்வு செய்வதும் அத்துடன் தரத்திலான விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்காக சாத்தியவளத்திலான அரசாங்க-தனியார் பங்காண்மை மாதிரிக்கான மூலோபாயத்திலான வழிகாட்டல்களை முன்மொழிவதுமே வேறு நோக்கங்களின் மத்தியில் விளங்குகின்றன.

**முடிவுகள்**:
சுமார் 35 சதவீதத்தைக் கொண்ட வருடாந்த தேவைப்பாடானது உள்ளூர் உற்பத்தி ஊடாக நிறைவேற்றப்படுகின்றது. 2013 முதல் ஆறு நாடுகளில் இருந்து விதை உருளைக்கிழங்கை இலங்கை இறக்குமதி செய்கின்றது. கமக்காரர்களினால் முறைசாரா உற்பத்தியினதும், அரசாங்க மற்றும் தனியார் பண்ணைகளினால் முறைமையான உற்பத்தியினதும் அத்துடன் இறக்குமதியினதும் ஊடாக உள்ளூர் உற்பத்தி வழங்கப்படுகின்றது. அண்ணளவாக 1,000 மெ.தொ. - 2,000 மெ.தொ. கொண்ட விதை உருளைக்கிழங்கு அரசாங்கப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, மேலும், 1,000-1,500 மெ.தொ. இறக்குமதி செய்யப்படுகின்றது. வர்த்தக விதை விற்பனையாளர்களாகச் செயற்படும் கமக்காரர்களில் எவருமே நடைமுறையிலான 2003இன் 22ஆம் இலக்க விதைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை.

**பரிந்துரைகள்**:

- விதைத் துறையில் அரசாங்க-தனியார் பங்காண்மையொன்றை அமைப்பதற்காக தெளிவான அணுகுமுறையுடனும், மூலோபாய வழிகாட்டல்களுடனும் விதைச் சட்டம் பலப்படுத்தப்பட வேண்டும்.
- பிரதானமாக அரசாங்கத் துறையினால் GI உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டும்.

- GI விதை உருளைக்கிழங்கு உற்பத்தி மீதான நோக்குடன் உள்ளூர் உற்பத்தியில் தனியார் நிறுவனங்கள் பிரவேசிக்க முடியும். இந்த முன்மொழிவுக்கு கட்டுதல்-செயற்படுத்துதல்-கைமாற்றுதல் பொருத்தமான மாதிரியாகும்.
- காற்றுவுயிர்ப்பு முறைமையின் கீழ் பல்-சுரங்கங்களில் GI விதை உருளைக்கிழங்கின் உற்பத்தியைப் பலப்படுத்துவதற்கு காணியை தனியார் நிறுவனம் பயன்படுத்த வேண்டும்.
- வர்த்தக நோக்கங்களுக்காக ஒரேயொரு வகையை (கிரனோலா) மட்டுமே பெருக்குவதற்கான அதிகாரத்தை இலங்கை கொண்டிருப்பதால், விதை உருளைக்கிங்கு இறக்குமதி அவ்வாறே விளங்க வேண்டும்.

## 2. இலங்கையில் காலநிலை சுட்டி காப்புறுதித் திட்டத்தின் செயற்றிறன்

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி ரோஷினி ரம்புக்வெல | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ருவீனி விதானபத்திரன | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி பி.எ.ஜி.சம்பிகா | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. துமிந்த பிரியதர்ஷன | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
ஐந்து வருடங்களுக்கு மேலாக செயற்பாட்டில் உள்ள மரபுரீதியிலான கமத்தொழில் காப்புறுதித் திட்டம் பெருமளவு பின்னடைவைக் கொண்டிருப்பதுடன், பண்ணைத்தொழில் சமூகத்தின் மத்தியில் பிரசித்தமானதல்ல. எனவே, இயற்கையான அழிவுகளுடன் இணைந்துள்ள அபாயங்களிலிருந்து கமக்காரர்களைப் பாதுகாப்பதற்கு பயனுறுதிவாய்ந்த பயிர் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது நேரகாலத்திலானதாகும். கமத்தொழிலில் பயனுறுதிவாய்ந்ததாக காலநிலை தொடர்பான அபாயங்களைச் சமாளிப்பதற்கான புதிய சக்திமிக்க கருவியின் அங்கமே காலநிலை காட்டி காப்புறுதியாகும்.

இலங்கையில் நெல்லுக்கு காலநிலை காட்டி காப்புறுதித் திட்டத்தில் செயற்றிறனை ஆய்வதற்கு ஆராய்ச்சி வடிவமைக்கப்பட்டது. நிறுவனரீதியிலான மனத்தோற்றப்பாட்டில் நடைமுறையிலான காலநிலை காட்டி காப்புறுதித் திட்டத்தின் தற்போதைய நிலையும், பின்னடைவுகளும் மற்றும் வாயப்புக்களும் பரீட்சிக்கப்பட்டதுடன், காலநிலை காட்டி காப்புறுதி திட்டத்திற்கான கமக்காரர் பதிலிறுப்புக்களும் அவதானிக்கப்பட்டன.

**முடிவுகள்**:
காலநிலை காட்டி காப்புறுதி திட்டம் தொடர்பிலான கமக்காரர் பங்கெடுப்பின் விகிதம் 0.5 சதவீதத்திற்கு குறைவானது என்பதுடன், இது இலங்கையில் நெல் கமக்காரர்களின் மத்தியில் காலநிலை காட்டி காப்புறுதி திட்டம் பிரசித்தமானதல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்றது. காலநிலை காட்டி காப்புறுதி திட்டம் பற்றி சுமார் 90 சதவீத்தைக் கொண்ட கமக்காரர்கள் தோதான விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், 65 சதவீதத்தைக் கொண்ட கமக்காரர்கள் இத் திட்டம் குறித்து இன்னுமே திருப்தியடையவில்லை. நுண் காலநிலை மாறல்கள், பாரிய ஆரம்ப ஆகுசெலவு, காலநிலை நிலையங்களின் குறைவான அடர்த்தி, தரத்திலானதும், புதுப்பிக்கப்பட்டதுமான காலநிலைத் தரவுகளின் பற்றாக்குறை, தரவுகளைப் பரிமாறுவதற்கு நிறுவனரீதியிலான ஒருங்கிணைப்புக்களினதும், பொறிமுறையினதும் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக அடிப்படை ஆபத்தே விநியோகப் பக்க மனத்தோற்றப்பாட்டின் காலநிலை காட்டி காப்புறுதி திட்டத்தில் பாரிய தடைகளாகக் கண்டறியப்பட்டன.

**பரிந்துரைகள்**:
- காலநிலைக் காட்டி காப்புறுதித் திட்டத்தை மேம்படுத்துவதற்கு சமூக அடிப்படையிலான பங்கெடுப்பு பொறிமுறை இடம்பெற வேண்டும்.

- அடிப்படையிலான ஆபத்துக்களைக் குறைந்தபட்சமாக்குவதற்காக, உண்மையான நேர மழை வீழ்ச்சித் தரவுகளைப் பெறுவதற்கு தன்னியக்கத்திலான சாதனத்தினால் மழைவீழ்ச்சி

தரவுகளைச் சேகரிப்பதற்கான வலைப்பின்னலைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உற்பத்தி வடிவமைப்பும் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

- உட்கட்டமைப்பினையும், சேவைகளையும் வழங்குவதற்கு காலநிலைக் காட்டி காப்புறுதித் திட்டத்தில் அரசாங்கத் தலையீடு முக்கியமானதாகும்.
- கமக்காரர் தாபனங்கள் ஊடாக கமக்காரர் விழிப்பியல் செயற்றிட்டங்களும், பயிற்சியும் நடத்துப்படுவது அவசியமாகும். காலநிலைக் காட்டி காப்புறுதித் திட்டத்தை முன்னேற்றுவதற்கு வெகுஜன ஊடகங்கள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியன ஊடாக பலமான விழிப்புணர்வு இயக்கமொன்று அவசியமாகும்.
- நடமாடும் தொலைபேசி தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைப் பார்ப்பது முக்கியமானதாகும். கமக்காரர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், கட்டுப்பணத்தை அறவிடுதல், கோரலை இணக்குதல் மற்றும் எவ்வாறு காட்டி செயற்படுகின்றது, காட்டியின் முன்னேற்றம், எப்பொழுது கோரல்கள் கொடுப்பனவுக்குரியவை போன்ற வேறு கிரமமான தொடர்பாடல் தொலைபேசி மூலம் வழங்கப்படலாம்.
- திருந்தியதும், தேசியரீதியில் நம்பகமானதும், சர்வதேசரீதியில் ஒப்பிடத்தக்கதுமான கமத்தொழில் மற்றும் காலநிலைத் தரவுகள், காலநிலை நிலையங்கள் ஆகியன நன்கு நிருவகிக்கப்பட வேண்டும் என்பதுடன், சமூக அடிப்படையிலானதும், தன்னியக்கத்திலானதுமான காலநிலை நிலையங்களும் நிறுவப்பட வேண்டும்.
- பலதரப்பட்ட மூலங்களிலிருந்து கிட்டுகின்ற காலநிலைத் தகவலை தேசிய மைப்படுத்திய தரவுத் தளமொன்றினுள் ஒன்றிணைப்பது மிகவும் முக்கியமானதாகும். இது கமக்காரர்களுக்கு சிறந்த காப்புறுதித் திட்டங்களை வழங்குவதற்கு அரசாங்க மற்றும் தனியார் காப்புறுதியாளர்களுக்கு உதவும்.
- காலநிலை நிலையங்களிலிருந்து சதுர கிலோமீட்டர் அரை வட்டத்தைக் குறைப்பதற்கு காலநிலை நிலைய அடர்த்தி அதிகரிக்கப்பட வேண்டும். தொடர்பான காலநிலை நிலையங்களிலிருந்து 15 சதுர கிலோ மீற்றர்களிலிருந்து 5 சதுர கிலோ மீற்றர்களுக்கு குறைப்பது சிறந்ததாகும். இது சூழ்நிலையைச் செம்மையாக பிரதிநிதிப்படுத்தும் என்பதுடன், அடிப்படையிலான ஆபத்தினையும் குறைந்தபட்சமாக்குவதற்கு உதவும்.
- வெற்றிகரமான காட்டி காப்புறுதி உற்பத்திப்பொருட்களுக்கு செம்மையானதும், நேரகாலத்திலானதுமான காலநிலைத் தரவுகள் முக்கியமானவையாகும். புதிய தொழில்நுட்ப புத்தாக்கங்களையும் மற்றும் வேறு சேய்மை கூருணர்வு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் சாத்தியக்கூறுக்கும் அத்துடன், காலநிலை காட்டி காப்புறுதிக்கும் செய்மதி பிரதிமை அடிப்படையிலான தரவுகளையும் மற்றும் கணனி மாதிரிகளையும் அறிமுகப்படுத்துவதும் பொறுப்புக்கு எடுக்கப்பட வேண்டும். செய்மதி தரவுகளைப் பயன்படுத்துவது சாத்தியமென்றால், காலநிலைக் காட்டி காப்புறுதித் திட்டத்தில் ஆதரவிலான தரவுப் பிரச்சனைகளை அது தீர்த்துவைக்கும் என்பதுடன், பாரிய பகுதி முழுவதும் அத்துடன் வேறுபட்ட பயிர்கள் மீதும் அதனால் தகவலை வழங்க முடியும். இது செயற்றிறனான தன்மையொன்றில் சாத்தியமானளவு உயர்த்தப்படவும் முடியும்.

## 3. கருத்திட்ட அமுலாக்கல் சவால்கள்: கமத்தொழில் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களங்களுக்கான மேற்கோளுடன்

**ஆராய்ச்சிக் குழாம்**:

செல்வி இந்திக எதிரிசிங்க - ஒருங்கிணைப்பாளர்

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லை மற்றும், குறிக்கோள்கள்**:

உத்தேசத்திலான நோக்கங்களை வெற்றிகரமாகச் சாதிப்பதற்கும் அத்துடன் நேரத்திற்கு இலக்குகளை நிறைவேற்றுவதற்கும் கருத்திட்ட முகாமைத்துவம் முக்கியமானதாகும். கருத்திட்டங்களை அமுலாக்குவதில் கமத்தொழில் திணைக்களத்தினாலும் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் முகங்கொடுக்கப்படும் சவால்களை அடையாளங்காண்பதற்கும் அத்துடன் பயனுறுதிவாய்ந்ததும், செயற்றிறனாதுமான கருத்திட்ட அமுலாக்கத்திற்கு பொருத்தமான பரிந்துரைகளைச் செய்வதற்கும் இந்த ஆய்வை ஹெ.கொ.க.ஆ.ப.நி. பொறுப்பேற்றது.

**முடிவுகள்**:

திட்டமிடல், நிதிப்படுத்தல், மனித வளங்கள், நிதிசார் முகாமைத்துவம், நேர முகாமைத்துவம், கொள்கைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றில் முரணின்மை, போக்குவரத்து வசதிகள்,

ஆவணப்படுத்தல், கண்காணித்தல், பின்தொடர் செயற்பாடுகள், உத்தியோகத்தர்களின் ஆற்றலளவு, முன்னேற்றம், வேறுபட்ட அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும் மத்தியில் தேசிய, மாகாண மற்றும் மாவட்டத் திட்டங்களினுள் ஒருங்கிணைப்பு, அரசியல் பிரதிநிதித்துவத்திற்கும், அதிகாரிகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளில் பெரிதுமே சவால்கள் கண்டறியப்பட்டன.

**பரிந்துரைகள்**:
பயனுறுதிவாய்ந்ததும், செயற்றிறனானதுமான முகாமைத்துவத்திற்கு பின்வரும் பிரதான பரிந்துரைகளை ஆய்வு முன்மொழிகின்றது:

சாத்தியமானவிடத்து சகல தொடர்பான பயனுரித்தாளர்களின் உசாவுகையுடன் திட்டமிடல்; பிரதானமாக சரியான நேரத்தில் போதியளவு தொகைகளில் நிதியங்களை ஏற்பாடுசெய்தல்; நாட்காட்டியின் சரியான நேரத்தில் கருத்திட்டங்களை அமுலாக்குவதில் கவனத்தைச் செலுத்துதல்; கொள்கைகளில் முரண்பாடுகளை அடையாளங்காண்பதற்கும், திருத்தம் செய்வதற்கும் வேறுபட்ட பயனுரித்தாளர்களுடன் கலந்தாய்வொன்றை ஆரம்பித்தல்; திருப்திகரமான மட்டமொன்றில் இடம் ஏவல் வசதிகளை வழங்குவதற்கு பொருத்தமான மூலோபாயங்களைச்செய்தல்; தடையற்றதும், கிரமமானதுமான கண்காணித்தலும், பின்தொடர் செயற்பாடுகளையகும் அமுலாக்குதல்; பணியாளரின் ஆற்றலளவு முன்னேற்ற அம்சத்தைப் பலப்படுத்துதல்.

**நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்**

**1. இலங்கையில் மரக்கறி உற்பத்தி மீது கமக்காரர்களின் தீர்மானத்தின் நிர்ணயக்கூறுகள்**

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. பிரசன்ன விஜேசிங்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| கலாநிதி ரஞ்ஜித் விக்ரமசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| கலாநிதி இ.எம்.சி.பிரியங்கர | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. விராஜித் குருப்பு | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்
**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
இலங்கையில் மரக்கறிச் சந்தையில் விலை ஏற்றஇறக்கம் ஒரு பொதுவான அம்சம் என்பதுடன், இது உற்பத்தியாளர் மற்றும் பாவனையாளர் என இருவருக்கும் சேமநலன் இழப்புக்களுக்கு இட்டுச்செல்கின்றது. சில மாதங்களில் சில மரக்கறிகளின் மிகையான விநியோகமும், அத்துடன் போதிய விநியோகம் இன்மையும் இந்தச் சந்தை பாகுபாட்டிற்கான காரணிகளாகும். இந்தச் சூழமைவில் உறுதியான பொருளாதார தீர்மானங்களை எடுப்பதில் முக்கியமான வகிபங்கொன்றை செம்மையான தகவல் ஆற்றுகின்றது. எரிபற்றக்கூடிய விலை நகர்வுகளுக்கும் அத்துடன் தமது செலவினங்களை உள்ளடக்குவதற்குக் கூட விலைகள் கமக்காரர்களுக்கு கிடைக்காதவிதத்தில் கிராக்கியினதும் விநியோகத்தினதும் பொருத்தமின்மையொன்று இலங்கையில் நிலவுகின்றது. இது பாவனையாளர் விருப்பு மற்றும் மதிப்பீட்டுத் தவறுகள் ஆகியவற்றின் மோசமான புரிந்துணர்வின் காரணமாகும்.

அவ்வாறாக, மரக்கறித் துறையின் நடைமுறையிலான பூரணமற்ற தகவலையும் அத்துடன் இலங்கையில் மரக்கறித் துறையின் தகவல் அனுமானத்தைக் குறைப்பதற்கு அவசியப்படும் நடவடிக்கைகளையும் அடையாளங்காண்பதற்கு ஆய்வு முயல்வதுடன், அவ்வாறாக இலங்கையின் மரக்கறித் துறையில் மூலவள ஒதுக்கீட்டின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு மூலோபாயங்களையும் வகுத்தமைக்கின்றது.

சந்தைப்படுத்தல் நோக்கத்திற்காக மரக்கறிச் செய்கைபண்ணும் 480 கமக்காரர்களை நேர்முகங்காண்பதன் மூலம் அனுராதபுரம், குருநாகல், புத்தளம், கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து ஆரம்பநிலையிலான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**தற்போதைய முன்னேற்றம்**:
ஆரம்பநிலையான தரவு சேகரிப்பு முடிவடைந்துள்ளது. தரவைப் பகுப்பாய்தலும், அறிக்கை எழுதுதலும் நடந்துகொண்டிருக்கின்றன.

## 2. இலங்கையில் நெல்/அரிசிப் பெறுமதிச் சங்கிலியின் ஒரு பகுப்பாய்வு: பாரிய அரிசி குற்றுதல் வலயத்தின் ஒரு விடயம், பொலன்னறுவ

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யு.எ.என்.விஜேசூரிய | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. துமிந்த பிரியதர்ஷன | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. விராஜித் குருப்பு | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
அறுவடை மற்றும் பருவமற்ற காலங்களின் போது தொடர்ச்சியான விலையேற்ற இறக்கமொன்றை நெல்/அரிசி கைத்தொழில் அனுபவிப்பதுடன், இது கமக்காரர்களையும் மற்றும் பாவனையாளர்களையும் அசௌகரியப்படுத்துகின்றது. மறுதலையிலான ஏற்றஇறக்கங்களைக் குறைந்தபட்சமாக்குவதற்காக, பெருமளவு வழிகளில் நெல்/அரிசி சந்தைப்படுத்தலில் அரசாங்கம் தலையிடுகின்றது. எனவே, பாவனையாளர் நெல்/அரிசி பெறுமதிச்சங்கிலிக்கு கமக்காரரின் செயற்றிறனைப் பரீட்சிப்பது எதிர்கால ஏற்றஇறக்கங்களைக் குறைந்தபட்சமாக்குவதற்கு அதிகளவு நுட்பமான தீர்மானங்களை அடைவதற்கு விரும்பத்தக்க நடவடிக்கையொன்றாகும்.

நாட்டில் பாரிய குற்றுதல் வலயமாக விளங்கும் பொலன்னறுவை மாவட்டத்தில் நெல்/அரிசி பெறுமதிச் சங்கிலிகளின் விரிவான பெறுமதிச் சங்கிலிப் பகுப்பாய்வொன்றை ஆரம்பநிலையாக ஆய்வு நடத்துகின்றது. நெல்/அரிசி மற்றும் அரிசி தவிட்டு பெறுமதிச் சங்கிலிகள் ஊடாக வேறுபட்ட செயற்பாட்டாளர்களினால் கிடைக்கப்பெறும் மொத்த ஓரங்களையும் அத்துடன் விளைவுகளையும் மதிப்பிடுவதும் அத்துடன் பெறுமதிச் சங்கிலி ஊடாக முக்கியமான பெறுமதிச் சங்கிலி செயற்பாட்டாளர்களின் பலங்களையும், பலவீனங்களையும், வாய்ப்புக்களையும் அத்துடன் அச்சுறுத்தல்களையும் கண்டறிவதுமே ஏனைய நோக்கங்களின் மத்தியில் விளங்குகின்றன.

**தற்போதைய முன்னேற்றம்**:
தரவு சேகரிப்பு (கமக்காரர், சேகரிப்பாளர் மற்றும் அரிசி ஆலையாளர் அளவீடுகள்) முடிக்கப்பட்டுள்ளது. தரவு பகுப்பாய்வு நடந்துகொண்டிருக்கின்றது.

## 3. இடைத்தரப் பருவத்தில் வேறு வெளிக்களப் பயிர்களைச் செய்கைபண்ணுவதில் உள்ள பிரச்சனைகள்

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| கலாநிதி என்.பி.ஜி.சமந்த | - | ஒருங்கிணைப்பாளர் |
| கலாநிதி இ.எ.சி.பிரியங்கர | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
கடந்த நான்கு தசாப்தங்களில் வேறு வெளிக்களப் பயிர்களின் தேசிய உற்பத்தியின் கணிசமான வீழ்ச்சியுடன் வேறு வெளிக்களப் பயிர்களின் இறக்குமதி சிட்டை குறிப்பிடத்தக்கவிதத்தில் அதிகரித்துள்ளது (உதாரணம்: 2018இல் ரூபா 41,734 மில்லியன்). எனவே, பொருளாதார அத்துடன் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பொறுத்தளவில் வேறு வெளிக்களப் பயிரின் உற்பத்தியை அதிகரிப்பது தற்போது ஒரு பாரிய கரிசனையாகும். மேலதிக போகமொன்றில் செய்கை பண்ணுவதன் மூலம் பயிர்ச்செய்கையின் தீவிரப்படுத்தலை அதிகரிப்பது இந்த முயற்சியில் விரும்பத்தக்க தீர்வொன்றாக அடையாளங்காணப்பட்டுள்ளது. கமத்தொழில் திணைக்களத்தின்

வேண்டுகோளின் மீது மூன்றாவது போகமொன்றில் வேறு வெளிக்களப் பயிரின் விஸ்தரிப்பை தடுக்கின்ற பிரச்சனைகளை பரீட்சிப்பதற்கு இந்த ஆய்வினை ஹெ.கொ.க.ஆ.ப.நி. ஆரம்பித்தது. மூன்றாவது போகத்தில் வேறு வெளிக்களப் பயிரைச் செய்கைபண்ணுவதில் கமக்காரர்களினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகளும், தடைக்காரணிகளும் அடையாளங்காணப்படும் என்பதுடன், வேறு வெளிக்களப் பயிர்ச் செய்கையில் ஊறுவிளைவிக்கின்ற கமப்பொருளியல், சூழலியல் மற்றும் நிறுவனரீதியிலான பிரச்சனைகள் ஆகியன மதிப்பாயப்படும்.

மூன்றாவது போகத்தில் வேறு வெளிக்களப் பயிர்ச் செய்கைக்கான கமத்தொழில் திணைக்களத்தின் பரிந்துரைகள் மீதான அடிப்படையில் ஆய்வுக்காக ஹம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டன. ஆரம்பநிலையிலானதும் அத்துடன் இரண்டாம் நிலையிலானதுமான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

கமக்காரர்களிடமிருந்து ஆரம்பநிலையிலான தரவுகளையும் மற்றும் தகவலையும் சேகரிப்பதற்காக நோக்குக் குழு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. ஹம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து 150 கமக்காரர்களின் பங்கெடுப்புடன் பதினைந்து நோக்குக் குழு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

**தற்போதைய முன்னேற்றம்**:
அறிக்கை எழுதுதல் நடந்துகொண்டிருக்கின்றது.

## 4. கமத்தொழில் சந்தைத் தகவல் சேவை

கமத்தொழில் சந்தைத் தகவல் சேவை ஒரு கருத்திட்டம் என்பதுடன், இதில் விலைத் தரவுகள் (மொத்த விற்பனை, சில்லறை மற்றும் பண்ணையிலான படலை விலை) சேகரிக்கப்படுகின்றன. ஒன்பது சந்தை இடங்களிலிருந்து (புறக்கோட்டை, வெள்ளவத்தை, கிருலப்பனை, நுகேகொடை, நாரஹேன்பிட்டி, தெமட்டகொடை, தொட்டலங்க, கடவத்தை மற்றும் கிரிபத்கொடை) மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைத் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. பாரிய உற்பத்திப் பகுதிகளிலிருந்து உற்பத்தியாளர் விலைகள் சேகரிக்கப்படுகின்றன. கொழும்பு சந்தைகளிலிருந்து தகவலைச் சேகரிப்பதற்காக 28 அமைவிடங்களிலிருந்து 28 வெளிக்கள உத்தியோகத்தர்களும் மற்றும் 11 சமயாசமய ஆய்வாளர்களும் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். மேலதிகமாக, 6666 என அழைக்கப்படும் நடமாடும் சுற்றுதல் சேவை ஒன்றும் உள்ளதுடன், இது இலங்கையில் எட்டு அர்ப்பணிக்கப்பட்ட சந்தைகளிலிருந்து மரக்கறிகளின் நாளாந்த மொத்த விற்பனை விலைகளை வழங்குகின்றது. இந்த விலைகள் வாராந்த மற்றும் மாதாந்த செய்தித்திரட்டுக்களினால் பரப்பப்படுகின்றன.

**நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்கள்**

**பிராந்திய அபிவிருத்தி வங்கி மீதான மாய வடிக்கையாளர் அளவீடு**

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. ஐ.வி.குருப்பு | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. ஐ.பி.பி.எம்.விஜேசிங்க | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: பிராந்திய அபிவிருத்தி வங்கி

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
முழுமையான அரசாங்க வங்கி ஒன்றாக (உத்தரவுப்பத்திரத்திலான விசேட வங்கி) தாபிக்கப்பட்ட பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கியாடல் வலைப்பின்னலானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கின்ற நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள், பெண்கள் அத்துடன் கமத்தொழில், கால்நடை மற்றும் மீன்பிடித்தொழில் கைத்தொழில்கள் ஆகியவற்றுக்கு பின்னாலுள்ள பாரிய சக்தியொன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், வெறுமனே மட்டத்துடனும் மற்றும் அளவுடனும் வங்கியின் செயற்பாடுகள் அதிகரித்தளவில் சவாலாக

விளங்குகின்றன. இச் சூழமைவில் எதிர்கால முன்னேற்றங்களுக்காக பிராந்திய கிராமிய வங்கிக் கிளைகளை அடிமட்டக் குறியிடுவதற்கு நாட்டைச் சுற்றியுள்ள அதன் கிளைகளை மதிப்பிடுவதற்கு துரித அளவீடொன்றை நடத்துமாறு ஹெ.கொ.க.ஆ.ப.நி.க்கு பிராந்திய கிராமிய வங்கி வேண்டுகோள் விடுத்தது. கிளை செயற்றிறனினதும் மற்றும் வாடிக்கையாளர் சேவையினதும் மட்டத்திற்கான நிபுணத்துவ மற்றும் சமகால படத்தைப் பெற்றுக்கொள்வதும் அத்துடன் வங்கிச் செயற்பாடுகளையும் மற்றும் வாடிக்கையாளர் சேவையையும் மேம்படுத்துவதற்கு சாத்தியமான அனுகூலங்களையும் மற்றும் செயற்றிறன்களையும் பரீட்சிப்பதுமே ஏனைய நோக்கங்களாகும்.

நாடு பூராவும் மொத்தமாக 60 கிளைகள் மதிப்பாயப்பட்டன. கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தொன்றின் ஊடாக ஆரம்பநிலையிலான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**தற்போதைய முன்னேற்றம்**:
ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. பிராந்திய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர்களின் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பணமொன்றினால் அறிக்கை பின்தொடர்ந்தது.

05

**மனித வள, நிறுவன அபிவிருத்திப் பிரிவு**

கமத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற முதியோர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து அதனூடாக இலங்கையின் கமத்தொழில் சமூகத்தினது சமூகப் பொருளாதார நிலையை மேம்படச்செய்வது ஹெ.கொ.க.ஆ.ப. நிறுவகத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் குறிக்கோளாகும்.

இலங்கையில் கிராமியத் துறையிலும் மற்றும் கமத்தொழில் சமூகத்திலும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் சம்பந்தப்படுகின்ற வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் ஆகியோர் உள்ளடங்கிய ஒரு பரந்த குழுவுக்கு ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் பயிற்சி செயற்றிட்டங்களின் வாடிக்கையாளர்கள் சார்ந்தவர்களாவர்.

2019ஆம் ஆண்டின் போது, இந்தப் பிரிவினால் நாடு முழுதிலும் நடத்தப்பட்ட பயிற்சி செயற்றிட்டங்கள பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

## 1. கமக்காரர் அமைப்புகளின் அதிகாரமளிப்பு

**பயிற்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. எஸ்.எம்.எ. சமரகோன் | - | ஒருங்கிணைப்பாளர் (தலைவர்/ம.வ.நி.அ.) |
| திரு. எச்.எம்.ஜே.கே. ஹேரத் | - | வள நபர் (தலைவர்/புஜளு அலகு) |
| திரு. சங்கீத் பிரசாத் பெர்னாண்டோ | - | உதவி ஒருங்கிணைப்பாளர்/வள நபர் (ஆ.உ./ம.வ.நி.அ.) |
| திரு. பீ.டி.எம்.ஆர்.பீ.திசாநாயக்க | - | இளைப்பாறிய தலைமையக பிரிவு உத்தியோகத்தர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

தேசிய கமத்தொழில் அபிவிருத்தியையும் அத்துடன் அதன் பரந்த சட்டத் தளத்தையும் வசதிப்படுத்துவதற்கான அதன் முக்கியத்துவம் இருந்த போதிலும், பெரும்பாலான கமக்காரர் தாபனங்கள் அவற்றின் முழுமையான பலத்துடன் செயற்படுவதில்லை. தாபனங்களுக்கும் மற்றும் கமக்காரர்hகளுக்கும் இடையிலான மோசமான ஒருங்கிணைப்பானது இக் குறிக்கோளைப் பயனுறுதிவாய்ந்தாக அடைவதில் பாரிய தடையாக இருந்துள்ளது.

அவற்றின் ஒழுங்குபடுத்தல் திறன்களை மேம்படுத்துவதன் மூலம், அந்த முன்மொழிவினைச் சாதிப்பதற்காக இச் செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டது. கமக்காரர் தலைவர்களின் அறிவையும், மனப்பாங்குகளையும் மற்றும் திறன்களையும் விருத்தி செய்வது அத்துடன் கமநல அபிவிருத்தி நடைமுறையின் தீவிரமான பங்காளர்களாக அவர்களைச் செய்வது ஆகியன ஊடாக, கமக்காரர் தாபனங்ளைப் பலப்படுத்துவதையும் அது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

கஹட்டகஸ்திகிலிய, பறங்கியாவாடிய, ஹொருவபத்தான, ரத்மல்கஹவெள, புளுகஸ்வெள, முரியகடவல, சிஹிவலகுளம, யக்கல்ல, கெக்கிராவ, எலெயபத்துவ, தந்திரிமலே, ரன்னொருவ, நொச்சியாகம, பேமதுவ, கம்பிரிகஸ்வெள, மதவாச்சி, மிஹிந்தல, பெலோகம, நாகம்பஹா, அடியகல, திரப்பனே ஆகிய கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கி, அனுராதபுரம் மாவட்டத்தில் இச் செயற்றிட்டம் நடத்தப்பட்டது. அண்ணளவாக 1,880 பெண் கமக்காரத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அனுராதபுரத்தில் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும், கமநல அபிவிருத்தி நிலையங்களிலிருந்து கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் திட்டத்திற்கு உதவினர்.

## 2. "ஆரோக்கியமான பரம்பரைக்கான கமத்தொழில்"

**பயிற்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. சங்கீத் பிரசாத் பெர்னாண்டோ | - | உதவி ஒருங்கிணைப்பாளர் (ஆ.உ./ம.வ.நி.அ.) |
| திரு. எஸ்.எம்.எ. சமரகோன் | - | (தலைவர்/ம.வ.நி.அ.) |
| திருமதி நொரிகா அயோமி | - | உதவி ஒருங்கிணைப்பாளர் (ஆ.உ./ ம.வ.நி.அ.) |
| திரு. எச்.எல்.எல்.சாலிந்த | - | ஒருங்கிணைக்கும் உதவியாளர் |

மாகாணங்கள் மற்றும் மாகாண சபை கமத்தொழில் திணைக்களங்களுக்கு இடையிலான வள நபர்

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

இன்று கம இரசாயனங்களின் அதிகரித்த பயன்பாடானது பாரதூரமான ஆரோக்கிய மற்றும் சூழல் கெடுதலுக்கு இட்டுச்சென்றுள்ளது. நாட்பட்ட சிறுநீரக நோயும், சில வேறு அடையாளங்காணப்படாத நோய்களும் நாட்டின் பெருமளவு பகுதிளில் துரிதமாகப் பரவுவதுடன், இது பாரியளவிலான சமூக-பொருளாதாரப் பிரச்சனைகளுக்கும் இட்டுச்சென்றுள்ளது.

கம இரசாயனங்களைப் பயன்படுத்ததல், மனித ஆரோக்கியம் மீது கம இரசாயனங்களின் தாக்கம், சிறுநீரக நோயின் முன்கூட்டிய குணங்குறிகள் ஆகிய மீது கமக்காரர் தலைவர்களுக்கு அறிவூட்டுவதும் அத்துடன் கமத்தொழிலிருந்து ஆகக்கூடுதலான நன்மைகளை அறுவடைசெய்யும் அதே வேளை ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவதில் கமக்காரர் தாபனங்களைப் பலப்படுத்துவதுமே இந்த ஒரு நாள் விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

ரபாவ, பூனாவ, எதகட, மதவாச்சி, களஞ்சிய, கெப்பத்திகொல்லாவ, கஹட்டகஸ்திகிலிய, பதவிய, கலென்பிந்துனுவெள, ஹொருவபத்தன, ரத்மல்கஹவெள, கொன்வெள, பறங்கியாவாடிய, எலயபத்துவ, நொச்சியாகம, ரன்னொருவ, கம்பிரிகஸ்வெள, பேமதுவ, மிஹிந்தலே மற்றும் தந்திரிமலே ஆகிய கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கி, அனுராதபுரம் மாவட்டத்தில் இச் செயற்றிட்டம் நடத்தப்பட்டது. அண்ணளவாக 1,803 கமக்காரத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அனுராதபுரத்தில் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும், கமநல அபிவிருத்தி நிலையங்களிலிருந்து கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் திட்டத்திற்கு உதவினர்.

### 3. பெண்கள் கமக்காரர் அதிகாரமளிப்பு

**பயிற்சிக் குழாம்**:

திரு. சங்கீத் பிரசாத் பெர்னாண்டோ - ஒருங்கிணைப்பாளர் (ஆ.உ./ம.வ.நி.அ.)
திரு. எஸ்.எம்.எ. சமரகோன் - வள நபர் (தலைவர்/ம.வ.நி.அ.)
திரு. எச்.எம்.ஜே.கே. ஹேரத் - வள நபர் (சி.ஆ.உ./ம.வ.நி.அ.))
திரு. எச்.எல்.எல்.சாலிந்த - ஒருங்கிணைக்கும் உதவியாளர்
மாகாணங்கள் மற்றும் மாகாண சபை கமத்தொழில் திணைக்களங்களுக்கு இடையிலான வள நபர்

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

கமக்காரப் பெண்களை அதிகாரமளிப்பது சுபீட்சமான ஒன்றினுள் கமக்காரர் சமூகத்தை உருமாற்றுவதில் அத்தியாவசியமான அங்கமொன்றாக கருதப்படுகின்றது.

எனினும், மோசமான தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவ திறன்களினதும் அத்துடன் பெருமளவு வேறு பிரச்சனைகளினதும் காரணமாக இது தாமதமடைந்துள்ளது. எனவே, அவற்றின் ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவத் திறன்களை ஊக்குவிப்பதற்காக இச் செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டது. குடும்ப சமூகத்திற்கு தாபனத்திலிருந்து ஆகக்கூடுதலான நன்மைகளைப் பெறுவதற்காக தீர்மானமெடுப்பதையும் அத்துடன் பெண் கமக்காரர் தாபனங்களைப் பலப்படுத்துவதையும் மேம்படுத்துவதே ஏனைய நோக்கங்களாகும்.

மடஹாபொல, கணேவத்த, மஹன்னனேரிய, எஹ_ட்டுவெள, குப்புக்கேட், மொரகொல்லாகம, தொடனகஸ்லந்த, கல்கமுவ, கரடகொல்ல, பொத்துஹர, இப்பாகமுவ, மஹராச்சிமுல்ல, வெல்லவ, பொலகஹவெல, ரபே, கொத்துவெஹர, மாவத்தகம, நிக்கவரற்றிய, மஹாவ, ராஜாங்கனய ஆகிய கமநல சேவை நிலையங்களை உள்ளடக்கி குருநாகல் மாவட்டத்தில் இச் செயற்றிட்டம் நடத்தப்பட்டது. அண்ணளவாக 2,028 கமக்காரத் தலைவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். குருநாகலில் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும், கமநல அபிவிருத்தி நிலையங்களிலிருந்து கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் திட்டத்திற்கு உதவினர்.

### 4. கம-வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் விஸ்தரிப்புக்களின் பிரயோகம் மீதான செயலமர்வு

**பயிற்சிக் குழாம்**:

திரு. டபிள்யூ.எச்.எ. ஷாந்த - (ஒருங்கிணைப்பாளர்/தலைவர்/ம.வ.நி.அ.)
திரு. சிதத் பண்டார - (சி.ஆ.உ./சூ.நீ.வ.மு.)
திரு. துமிந்த பிரியதர்ஷன - (தலைவர்/ச.உ.கொ.க.)
திரு. எஸ்.எம்.எ. சமரகோன் - (தலைவர்/ம.வ.நி.அ.)

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

இலங்கையில் கமத்தொழில் துறையில், சிறிய அளவிலான மான்ய பண்ணைத்தொழில் துணைத் துறை முக்கியமான வகிபங்கொன்றை ஆற்றுகின்றது. அவ்வாறாக, சகல மட்டங்களிலும் கம-மட்ட வியாபார முயற்சிகளின் முன்னேற்றம் கடைசி நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து முன்னணிக்கு வந்தது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கம-வியாபார, முகாமைத்துவப் பீடத்தின் இறுதியாண்டு பட்டப்படிப்பு மாணவர்களுக்கு கம-வியாபாரம் மற்றும் சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பின் பிரயோகம் மீது கோட்பாட்டியலிலானதும், செயன்முறையிலானதுமான கண்ணோட்டமொன்றை வழங்குவதற்கு இச் செயற்றிட்டம் அமைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கம-வியாபார, முகாமைத்துவப் பீடத்திலிருந்து 88 மாணவர்களின் பங்கெடுப்புடன் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தில் இரு-நாள் செயலமர்வு நடத்தப்பட்டது.

## 5. கிராமிய சனசமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களின் திட்டமிடலுக்கும், முகாமைத்துவத்திற்கும் பங்கெடுப்பிலான தொழில்நுட்பங்கள்

**பயிற்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. எஸ்.எம்.எ. சமரகோன் | - | ஒருங்கிணைப்பாளர்/தலைவர்/ம.வ.நி.அ. |
| திரு. ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ | - | மேலதிகப் பணிப்பாளர் |
| திரு. எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - | ஆராய்ச்சி சகபாடி/புஜளு அலகு |
| திரு. சங்கீத் பிரசாத் பெர்னாண்டோ | - | ஆராய்ச்சி உத்தியோகத்தர்/ம.வ.நி.அ. |
| திரு. விராஜித் குருப்பு | - | ஆராய்ச்சி உத்தியோகத்தர்/ச.உ.கொ.க. |
| திரு. அமல் திசாநாயக்க | - | ஆராய்ச்சி உத்தியோகத்தர்/க.வ.மு. |
| திரு. எச்.எல்.எல்.சாலிந்த | - | ஒருங்கிணைக்கும் உதவியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

குறைந்த ஆகுசெலவொன்றில் துரிதமாக கிராமிய நிலைமைகள் மீது செம்மையானதும் மற்றும் புதுப்பித்தலிலானதுமான தரவுகளையும் அத்துடன் தகவலையும் சேகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் சார்புரீதியில் புதிய தொழில்நுட்பங்களே துரித கிராமிய மதிப்பீடு மற்றும் பங்கெடுப்பிலான கிராமிய மதிப்பீடு ஆகும். கருத்திட்டத்தை அடையாளங்காணுதல், திட்டமிடுதல், அமுலாக்குதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்தல் ஆகியன உட்பட கருத்திட்டங்களின் முன்னேற்றத்தின் பலதரப்பட்ட கட்டங்களை முழுமைப்படுத்துவதில் இந்த முறைகள் வெற்றிகரமாக பயன்படுத்தப்படுகின்றன.

மக்களின் பங்கெடுப்பின் பெறுமதி பற்றி பங்கெடுப்பாளர்களுக்கு அறிவூட்டுவதே இப் பயிற்சி செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும். அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்ளூர் மட்ட திட்டமிடலையும் மற்றும் முகாமைத்துவத்தையும் பொறுத்தளவில் துரித கிராமிய மதிப்பீடு மற்றும் பங்கெடுப்பிலான கிராமிய மதிப்பீடு ஆகிய தொழில்நுட்பங்களை மேற்கொள்வதற்கான அவர்களின் அறிவையும், திறன்களையும் மற்றும் தகுதியையும் மேம்படுத்துவதையும் இது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

2019இல், கமத்தொழில் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் மற்றும் பிரிவுச் செயலகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக இரு செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன. கமத்தொழில் திணைக்களத்திலிருந்து 61 விடய நிபுணர்களும் மற்றும் கமத்தொழில் போதனாசிரியர்களும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து பிரிவு உத்தியோகத்தர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி உதவி உற்பத்தியாளர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 6. சமூக ஒன்றுதிரட்டல் (விரிவாக்கல் முறைமையியல்)

**பயிற்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. எஸ்.எம்.எ. சமரகோன் | - | ஒருங்கிணைப்பாளர்/தலைவர்/ம.வ.நி.அ. |
| திரு. ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ | - | மேலதிகப் பணிப்பாளர் (ஹெ.கொ.க.ஆ.ப.நி.) |
| திரு. எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - | ஆராய்ச்சி சகபாடி/GIS அலகு |
| திரு. டபிள்யு.எச்.எ.ஷாந்த | - | சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| திரு. சங்கீத் பிரசாத் பெர்னாண்டோ | - | ஒருங்கிணைப்பாளர் (ஆ.உ./ம.வ.நி.அ.) |
| திரு. விராஜித் குருப்பு | - | ஆராய்ச்சி உத்தியோகத்தர்/ச.உ.கொ.க. |
| திரு. எச்.எல்.எல்.சாலிந்த | - | ஒருங்கிணைக்கும் உதவியாளா |
| திரு. பீ.டி.எம்.ஆர்.பீ.திசாநாயக்க | - | இளைப்பாறிய தலைமையக பிரிவு உத்தியோகத்தர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

ஏதேனும் அபிவிருத்தி முயற்சியில் உயர்வான சமூக பங்கெடுப்பினைச் சாதிப்பதற்கு பயனாளிகளின் தீவிர பங்கெடுப்பு முக்கியமானதாகும். சமூக ஒன்றுதிரட்டலினதும் அத்துடன் விஸ்தரிப்பு முறைமையியலினதும் மீது பங்கெடுப்பாளர்களின் கோட்பாட்டுரீதியிலானதும், செயன்முறையிலானதுமான அறிவை மேம்படுத்துவதற்கும் அத்துடன் பலப்படுத்துவதற்கும் சமூக ஒன்றுதிரட்டுனர்களாக கமநல மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்காக பயிற்சிச் செயற்றிட்டம் பிரதானமாக வடிவமைக்கப்பட்டது. 2019இல், இரு அத்தகைய செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன. கமநல அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக இந்தச் செயற்றிட்டம் நடத்தப்பட்டதுடன், 93 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களும் பங்கெடுத்தனர்.

**முடிவடைந்த ஆய்வுகள்**

**1. இலங்கையின் பொலித்தீன் பைகளினதும், பகற்போசன தாள்களினதும் மீதான தடை: தாக்கம், சவால்கள் மற்றும் மாற்றீடுகள்**

**பயிற்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. எஸ்.பி.பெர்னாண்டோ | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ஜி.வி.நொரிகா அயோமி | - | இணை ஆராய்ச்சியாளர் |
| திரு. ஐ.வி.குருப்பு | - | இணை ஆராய்ச்சியாளர் |
| திரு. பி.சி.ஜே. டீ சில்வா | - | இணை ஆராய்ச்சியாளர் |
| திரு. எஸ்.எம்.எ. சமரகோன் | - | இணை ஆராய்ச்சியாளர் |
| திரு. எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - | இணை ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
சூழல் மீது பொலித்தீன் கழிவின் கெடுதலிலான தாக்கங்களைக் கரிசனைக்கெடுத்து, 2017 செப்ரெம்பரில் பொலித்தீன் மீது முழுமையான தடையொன்று செயற்பாட்டுக்கு வந்தது. மாற்று வழிகளுக்கான பற்றாக்குறைக்காகவும் அத்துடன் கைத்தொழிலில் பெரும்பாலானோரின் வாழ்வாதாரங்களின் இழப்புக்காகவும் இந்த நகர்வு அதிகளவு வெறுப்பினை சந்தித்தது. இலங்கையில் PBLSஇன் தற்போதையை நிலையை அடையாளங்காண்பதும் அத்துடன் சாத்தியமான முன்னோக்கிய பாதையை மதிப்பாய்வதுமே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

வேறுபட்ட வழிகளில் விடயத்துடன் தொடர்பான அண்ணளவாக 1,400 தனிப்பட்டவர்கள் இந்த ஆய்வில் நேர்முகங்காணப்பட்டதுடன், இது பெரிதுமே மேல் மாகாணத்தின் மீது நோக்கினைக் கொண்டிருந்தது.

**முடிவுகள்**:
பொலித்தீனின் மிதமிஞ்சிய பயன்பாட்டினை பொலித்தீன் மீதான சட்டம் ஊக்கமளிக்கின்றது. PBLS தடை தொடர்பில் பொதுமக்களுக்கு பாரியளவில் தப்பாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பைகளின் தரக்குறைவின் காரணமாக தடையின் பின்னர் அவர்களது பைகளின் பாவனை அதிகரித்தது. தனிப்பட்ட ஒருவரினால் வரைபடமொன்றுக்கு தோற்றுவிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவின் தொகை அண்ணளவாக 11 கிலோ கிராம் என்பதுடன், இது பாரதூரமான சூழல் கெடுதலையும் அத்துடன் மீள்-சுழற்சிப்படுத்தலுக்கான உத்தேசமான பதப்படுத்தப்படாத பொருளையும் எடுத்துக்காட்டுகின்றது.

**பரிந்துரைகள்**:
- பொலித்தீன் உற்பத்தியையும், பயன்பாட்டினையும் இணைக்கும் சட்டபூர்வமான சட்டங்களைத் திருத்துதல்.
- அணுகுமுறையை ஏற்றுக்கொள்ளுதல்: 'விஸ்தரிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு என்ற வழியினால் மாசுபடுத்துபவர் கொடுப்பனவு செய்வார்' என அவர்கள் தயாரிக்கும் பிளாஸ்டிக்குக்கும் மற்றும் பொதிப்படுத்தலுக்கும் உற்பத்தியாளர்களைப் பொறுப்புக்கு தக்கவைப்பது அல்லது உற்பத்திப்பொருட்கள் நிலவும் முழுக் காலம் ஊடாக பயன்படுத்துவது.
- சூழல்-நட்புறவிலான பொலித்தீன் மாற்றுப் பொருட்களின் தயாரிப்புகளுக்கு ஊக்கமளித்தல்.

**2. வட மத்திய மாகாணத்தில் பாதுகாப்பான நீர் பாவனையின் மூலமொன்றாக மழைநீரை முன்னேற்றுவதற்கான ஆற்றலளவு**

**பயிற்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி ஜி.வி.என்.அயோமி | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. பி.சி.ஜே. சில்வா | - | இணை ஆராய்ச்சியாளர் |
| திரு. எஸ்.பி.பெர்னாண்டோ | - | இணை ஆராய்ச்சியாளர் |
| திரு. எஸ்.எம்.எ. சமரகோன் | - | இணை ஆராய்ச்சியாளர் |
| திரு. எச்.எம்.ஜே.கே.ஹேரத் | - | இணை ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லை மற்றும் நோக்கங்கள்**:
வட மத்திய மாகாணத்தில் குடிநீர் நோக்கங்களுக்காக பாதுகாப்பான நீர் மூலங்கள் இன்மையும், அறியப்படாத காரணவியலின் (ஊமுனுர) நாட்பட்ட சிறுநீரக நோயும் பாரிய பிரச்சனைகளாகும். ஆய்வு அமைவிடங்களாக அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து மதவாச்சிய மற்றும் கெப்பிட்டிகொல்லாவ ஆகியன தெரிவுசெய்யப்பட்டதுடன், பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து மெதிரிகிரிய மற்றும் திம்புலாகல ஆகியன தெரிவுசெய்யப்பட்டன. வட மத்திய மாகாணத்தில் பாதுகாப்பான நீர்ப் பாவனையின் மூலமொன்றாக மழைநீரை மேம்படுத்தும் ஆற்றலளவுகளை நோக்குவதே பிரதான நோக்கமாகும்.

**முடிவுகள்**:
காலநிலைத் தரவுகள் மீதான அடிப்படையில் பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகியவற்றின் போது மழைவீழ்ச்சி குறைந்தபட்சமென்பதனால், மாகாணத்திற்கு மழை காலத்தின் போது மழைநீர் சேகரிப்பு முக்கியமானதாகும். மாகாணத்திலுள்ள மக்களுக்கு மழைநீரின் பாவனை அதிகளவு நேரத்தை மீதப்படுத்துகின்றது, சிக்கனமானது அத்துடன் ஆரோக்கியமானது எனவும் கண்டறியப்பட்டது. குடும்ப அளவின் மீது களஞ்சியத் தாங்கியின் அளவு தங்கியுள்ளதுடன், தாங்கியின் நிறுவுகைக் கட்டத்தில் ஆரம்ப ஆகுசெலவு பெருமளவு குடித்தனங்களுக்கு உயர்வானதாகும்.

**பரிந்துரைகள்**:

- வசதிக்கு கட்டுப்படியாகாதவர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்க மான்யம் அல்லது கடன் வசதித் திட்டம் விருத்தி செய்யப்பட வேண்டும். அத்துடன் தாங்கியின் நிருமாணத்திற்காக குறைந்த ஆகுசெலவிலான மாற்றுப்பொருளொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் முறைமையின் ஆகுசெலவு குறைக்கப்பட முடியும்.
- நீரேந்து பகுதியின் தோதான பராமரிப்பு, பீலி முறைமை மற்றும் முதலாவது பாய்ச்சல் முறைமை அத்துடன் தாங்கி முறைமை ஆகியவற்றினால் கூரை மேற்புற நீரேந்து பகுதி மேம்படுத்தப்பட முடியுமென்றால் செயற்றிறமை உயர்த்தப்பட முடியும். இதற்கு மேலதிகமாக, தாங்கியின் நிருமாணத்திற்காக குறைந்த ஆகுசெலவிலான மாற்றுப்பொருளொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் முறைமையின் ஆகுசெலவு குறைக்கப்பட முடியும்.
- மழைநீர் பாவனையின் ஆரோக்கிய மற்றும் பொருளாதார நன்மைகள் அத்துடன் தாங்கி முறைமையின் பராமரிப்பு நடைமுறைகள் ஆகியன மீது பயனாளிகளுக்கு சரியான வழிகாட்டலும், பயிற்சியும் மற்றும் விழிப்புணர்வும் வழங்கப்பட வேண்டும்.
- மழை நீர் கொள்கையை அமுல்படுத்துவதும் அவசியமாகும்.
- பிராந்திய கமநல அபிவிருத்தி அலுவலகங்களுடனும் அத்துடன் காலநிலை அளவீட்டுத் திணைக்களத்துடனுமான ஒருங்கிணைப்புடன் மழைநீர் சேகரிப்பு பற்றி மழைநீர் தாங்கி பயன்பாட்டாளர்களுக்கு அறிவிப்பதற்காக கருவி அல்லது தொடர்பாடல் முறைமை (SMS எச்சரிக்கை முறைமை) விருத்தி செய்யப்பட முடியும்.

**நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகள்**

**1. இலங்கையில் கைத்தொழில்கள் அடிப்படையிலான தேங்காய் வித்து மீது வீட்டுத் தோட்ட தெங்குச் செய்கையின் தாக்கம்**

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திருமதி ஜி.வி.என்.அயோமி | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. எஸ்.பி.பெர்னாண்டோ | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. எஸ்.எம்.எ. சமரகோன் | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. விராஜித் குருப்பு | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. பி.சி.ஜே. சில்வா | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
நாட்டில் குறைந்த தெங்கு உற்பத்தியானது சந்தைத் தேவைப்பாட்டுக்கும் அத்துடன் கைத்தொழில் தேவைப்பாட்டுக்கும் விநியோகிப்பதில் பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது. எனவே, நாட்டில் தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கு வீட்டுத் தோட்டத்தைப் பயன்படுத்தும் சாத்தியக்கூறினை ஆய்வு ஆராய்கின்றது.

**தற்போதைய முன்னேற்றம்:**
தரவு சேகரிப்பு (கேள்விக்கொத்து அளவீடு, நோக்குக் குழு கலந்துரையாடல்கள் மற்றும் முக்கிய தகவலளிப்பவர் நேர்முகங்காணல்கள்) முடிவடைந்துள்ளது. தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தேங்காய் வித்து அடிப்படையிலான கைத்தொழில்கள் மீதான கேள்விக்கொத்து அளவீடொன்று முடிவடைந்துள்ளது. அறிக்கை எழுதுதல் நடந்துகொண்டிருக்கின்றது.

**முடிக்கப்பட்டுள்ள ஆய்வுகள் - நிதிப்படுத்தப்பட்ட**

**1. இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பிராந்தியங்களில் வாழை, மா மற்றும் அன்னாசிப் பயிர்களுக்கு பெறுமதிச் சங்கிலியைப் பலப்படுத்துவதற்கான அடிமட்ட ஆய்வு**

**ஆராய்ச்சிக் குழாம்**:

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யு. துமிந்த பிரியதர்ஷன | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ருவீனி விதானபத்திரன | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திரு. டபிள்யு.எ.என்.விஜேசூரிய | - | துணை-ஆராய்ச்சியாளர் |
| திருமதி ரோஷினி ரம்புக்வெல | - | துணை-ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்**: ஒன்றிணைந்த நிதியம்

**நோக்கெல்லை மற்றும் குறிக்கோள்கள்**:
பழத் தோட்டத்திலும், பதப்படுத்தலிலும் நடுத்தரத்திலிருந்து பாரிய அளவு வரையிலான முதலீடுகளைக் கவர்வதற்காக பெறுமதிச் சங்கிலி செயற்பாட்டாளர்களுக்காக அதிகரித்த வருமானங்களுக்கு இட்டுச்செல்லும் அன்னாசி, வாழை மற்றும் மா பழ பெறுமதி சங்கிலிகளின் செயற்றிறனையும் மற்றும் போட்டித்தன்மையையும் மேம்படுத்துவதை "இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பிராந்தியங்களில் வாழை, மா மற்றும் அன்னாசி ஆகியவற்றுக்கு பெறுமதிச் சங்கிலியைப் பலப்படுத்துதல்" மீதான FAO- சீன SSC கருத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கருத்திட்டத்தின் உடனடியான செயற்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறையிலான சூழ்நிலைக்குத் தொடர்பான சுயேட்சையாக மதிப்பிடப்பட்ட தகவல் தளமொன்றை வழங்குவதற்காக நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட புவியியல்-சார் பிராந்தியங்களில் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்தினால் இலக்குப்படுத்தப்பட்ட சகல பயனுரித்தாளர்கள் உட்பட அடிமட்ட ஆய்வொன்றை நடத்துவதற்கு ஹெ.கொ.க.ஆ.ப.நி. குறித்தொதுக்கப்பட்டது.

குறித்துரைக்கப்பட்ட இலக்கு புவியியல்-சார் அமைவிடங்களுடன் வாழை, மா மற்றும் அன்னாசி ஆகியவற்றின் விரிவான பெறுமதிச் சங்கிலிப் பகுப்பாய்வொன்றை மேற்கொள்வதே இந்த ஆய்வின் முழுமையான நோக்கமாகும்.

**முடிவுகள்**:
மொத்த விற்பனையாளரைத் தொடர்ந்து சில்லறை விற்பனையாளரினால் ஆகக்கூடுதலான நிகர ஓரம் ஈட்டப்படுகின்றது. பழத்தினால் (உதாரணம்: வாழைக்கு ஆகக்கூடுதலான ஆக்கக்கூறு சரீரஉழைப்பு என்ற அதேவேளை அன்னாசிக்கு நடுகையாகும்) ஆகுசெலவு ஆக்கக்கூறுகள் மாறுபட்டிருந்தன. மா உற்பத்தியில் களைநாசினிகளையும் மற்றும் கனிப்பொருள் உரங்களையும் அடைவதற்கான கஷ்டம், வரண்ட பருவத்தின் போது நீருக்கான பற்றாக்குறை மற்றும் திருந்திய கமப்பொருள் நடைமுறைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அடைதல் ஆகியன பிரதான தடையாக அடையாளம் காணப்பட்டன. பழங்களில் உயர்வான மீத மட்டங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை (அன்னாசி மற்றும் மா) உற்பத்தி செய்வதற்கு ஏற்றுமதி பெறக்கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு பதப்படுத்தப்படாத பொருட்களின் போதிய விநியோகம் இன்மை அத்துடன் பதப்படுத்தல் மற்றும் குளிர் களஞ்சியப்படுத்தல் வசதிகள் இன்மை போன்ற சவால்களுக்கு பழ பதப்படுத்துனர்களும் மற்றும் ஏற்றுமதியாளர்களும் முகங்கொடுக்கின்றனர்.

**பரிந்துரைகள்**:

- பலதரப்பட்ட வழிவகைகள் ஊடாக சகல பங்கெடுப்பாளர்களுக்கும் கிட்டுகின்ற சந்தைப்படுத்தல் புதுப்பித்தல் சந்தை தகவல் மூலம் சந்தை ஒருங்கிணைப்பையும் மற்றும் செயற்றிறனையும் மேம்படுத்த முடியும்.
- நடுத்தர மற்றும் நீண்ட கால மூலோபாயத் தொலைநோக்கினையும் அத்துடன் இந்தப் பழங்களின் தற்போதைய சந்தைத் தளத்தை விஸ்தரிப்பதற்கான திட்டத்தையும் பின்தொடர்ந்து செல்வதற்கு அரசாங்க-தனியார் கலந்தாய்வைப் பலப்படுத்துதல்.
- விஸ்தரிக்கப்பட்ட பங்கீட்டினை அடைவதற்காக பாரிய உற்பத்தியாளர்களுடனும் மற்றும் பதப்படுத்துனர்களுடனும் இணைப்பினை ஏற்படுத்துவதற்காக சிறிய கமக்காரர்களுக்கு உதவுவதற்காக விநியோகச் சங்கிலி விருத்திசெய்யப்பட்டு, பலப்படுத்தப்பட வேண்டும்.
- தோதான கையாள்தல் தொழில்நுட்பங்கள், தரப்படுத்தல் மற்றும் கட்டளைப்படுத்தல் மற்றும் அறுவடை செய்யும் அத்துடன் அறுவடைக்குப் பிந்திய பிரச்சனைகள் ஆகியனவற்றைக் கவனத்திற்கெடுப்பதற்காக பொதிப்படுத்தல் செயற்பாடுகள், கொள்வனவாளர்களுடன் இணைப்புக்களைக் கட்டியெழுப்புதல் மீது கமக்காரர்களுக்கு அறிவூட்டுதல், உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தல், புதிய திருந்திய கமப்பொருளியல் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியனவற்றில் பயிற்சி செயற்றிட்டங்களை அமுலாக்குதல்.

## 06

### புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தும் பிரிவு

கமநலத் துறை மீதான தகவல்களை சேகரித்தல், புதுப்பித்தல், பகுப்பாய்தல் மற்றும் பரம்பல் செய்தல் ஆகியவற்றுக்கான ஒரு நிலையமொன்றாக ஹெ.கொ.க.ஆ.ப.நி. வருவதை நோக்கிய அயராத முயற்சியொன்றை மேற்கொள்வதற்காக புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகள் படிமுறைப்படுத்தும் பிரிவு தாபிக்கப்பட்டது. நிறுவகத்தினால் நடத்தப்பட்ட சமூக-பொருளாதார அளவீடுகளில் திரட்டப்பட்ட தரவுகளைக் களஞ்சியப்படுத்துவதும், பகுப்பாய்வதும் அதேவேளை புள்ளிவிபர மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் பிரயோகம் ஊடாக ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகளின் தரத்தை உறுதிப்படுத்துவதும் அதன் பொறுப்பாகும்.

பிரிவானது இரு அலகுகளைக் கொண்டுள்ளது: தரவு அபிவிருத்தி மற்றும் தரவு படிமுறைப்படுத்தல் ஆகியன அந்த அலகுகளாகும். பின்னர், ஒரு கணனி தொழில்நுட்ப அலகு தாபிக்கப்பட்டது.

**தரவு அபிவிருத்தி அலகு**
களஞ்சியம், சேகரிப்பு முகவராண்மை மற்றும் சேவைப் பணியகம் என்பன போன்ற சம்பந்தப்பட்ட களரீதியான தொழிற்பாடுகள் மற்றும் பொருத்தமான கமநல அபிவிருத்தி அம்சங்கள் என்பன தொடர்பான தகவல்களை இலகுவாக அணுகிப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, ஒரு கமநல தரவுத்தள வங்கி தாபிக்கப்பட்டது. இது விசேடமாக அரசாங்க ஊழியர்களுக்கும், கொள்கை வகுப்போர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புகளுக்கும் தகவல்களை வழங்கக்கூடிய மற்றும் பயனுள்ள ஒரு விதத்தில் தகவல் பரம்பலை ஒருங்கிணைக்கக்கூடிய முழுமையான ஒரு புள்ளிவிபரவியல் தகவல் மூலமாக தொழிற்படும் வகையில் திட்டமிட்டு, தாபிக்கப்பட்டுள்ளது.

ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் சந்தைப்படுத்தல் உணவுக் கொள்கை, கம-வியாபாரப் பிரிவிலிருந்து உணவுப் பண்ட விலைகள் சேகரிக்கப்பட்டன. ஆண்டின் போது, பின்வரும் தகவல் சேகரிக்கப்பட்டது:

- இறக்குமதிகள் - 2017, 2018
- ஏற்றுமதிகள் - 2017
- சில்லறை விலைகள் - 2018
- உற்பத்தியாளர் விலைகள் - 2018
- மொத்த விற்பனை விலைகள் - 2018
- விஸ்தீரணம் - 2018
- உற்பத்தி - 2018
- உற்பத்தியின் ஆகுசெலவு - 2017 சிறு போகம்

ஆண்டின் போது, பின்வரும் காட்டிகளுடன் கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத்தளம் புதுப்பிக்கப்பட்டது:

- நெல்லின் புள்ளிவிபரங்கள் - விஸ்தீரணம் மற்றும் உற்பத்தி
- உற்பத்தியாளர் விலைகள் - 2018
- சில்லறை விலைகள் - 2017, 2018
- 2018 பெரும் போகத்திலும், சிறு போகத்திலும் மற்றும் மொத்தமாகவும் விஸ்தீரணம் மற்றும் உற்பத்தி

மேற்குறித்த காட்டிகளுக்கு சொந்தமான 106,154 எண்ணிக்கைகளைக் கொண்ட பதிவுடன் தரவுத்தளம் புதுப்பிக்கப்பட்டது.

**வேண்டுகோள்களின் மீது தரவுகளின் ஏற்பாடு**

உள்ளக மற்றும் வெளியகப் பாவனையாளர் தரப்புகளிடமிருந்து கமத்தொழில் தகவல்களின் நிமித்தம் மொத்தம் 143 வேண்டுகோள்கள் கிடைத்தன. இதில் 100 வேண்டுகோள்கள் உள்ளகப் பாவனையாளர்களிடமிருந்தும், 43 வேண்டுகோள்கள் வெளியகப் பாவனையாளர்களிடமிருந்தும் கிடைத்தன.

**தரவுகளைச் சேகரிப்பதற்காக அணுகப்பட்ட நூல்கள்**

- இலங்கை மத்திய வங்கியின் சமூகப் பொருளாதாரப் புள்ளிவிபரங்கள் - 2018
- குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் தொகுப்பு - 2018
- நெல்லினதும் மற்றும் ஏனைய வெளிக்களப் பயிர்களினதும் செய்கையின் ஆகுசெலவு - 2017 சிறு போகம்
- சுங்கத் திணைக்களத்தின் வெளிவாரி வர்த்தகப் புள்ளிவிபரங்கள் - 2017/2018

**தரவு படிமுறைப்படுத்தல் அலகு**

கமத்தொழில் தரவுத்தளத்தினதும், மாதிரி அளவீடுகளிலிருந்து வரும் தரவினதும் திரிபுபடுத்தலுக்காக தரவு படிமுறைப்படுத்தல் அலகு தாபிக்கப்பட்டது. தரவு அபிவிருத்தி அலகிலிருந்து தரவுகள் குறியீடு செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டதும், தரவு படிமுறைப்படுத்தல் அலகினால் தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்படுகின்றது. ஆண்டின் போது, தரவுத்தளத்தில் கமத்தொழில் தகவலைப் புதுப்பிப்தற்காக அதன் சேவைகளை அலகு வழங்கியது.

**கணனித் தொழில்நுட்ப அலகு**

கணனிகள், கணனி வலையமைப்புகள் மற்றும் தொடர்பான இணைப்பாகங்கள் மற்றும் கணனி முறைமைகளின் இயக்கத்திற்கு தேவையான மென்பாகச் சாதனங்கள் என்பன தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நிமித்தம் கணனித் தொழில்நுட்ப அலகு தாபிக்கப்பட்டுள்ளது. சகல வகையான பழுதுபார்ப்புகளையும் மற்றும் பிரச்சினைகள் தீர்த்துவைத்தல் விடயங்களையும் மேற்கொள்வதற்கென ஒரு வேலைப்பட்டறை வசதியும் தாபிக்கப்பட்டுள்ளது.

ஆண்டின் போது பின்வரும் பணிகளில் அலகு தீவிரமாக ஈடுபட்டது.

- தொழில்நுட்பத் தகவுதிறன்களைத் தயாரித்தல்
- தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்
- மென்பாகங்களின் நிறுவுகை மற்றும் பிரச்சினைகனைத் தீர்த்தல்

## நூலகம்

ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் ஆராய்ச்சிப் பதவியணியினரினதும், அக்கறையுடைய ஏனைய தரப்புகளினதும் மற்றும் நிறுவனங்களினதும் நன்மை கருதி, கமத்தொழில் துறையுடன் சம்பந்தமான தகவல்களைச் சேகரித்தல், தொகுத்தல், மீளப்பெற்றுக்கொள்ளல் மற்றும் அத்தகைய தகவல்களை பரம்பல்செய்தல் முதலியன நூலகத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். குறித்த ஆண்டு காலப்பகுதியில், ஊழியர்கள் இந்த நூலகத்திலிருந்து 634 நூல்களையும், 17 உசாத்துணை நூல்களையும், 50 சஞ்சிகைகளையும் உசாத்துணைக்காக இரவல் பெற்றனர். ஆண்டின் போது, இந்த நூலகத்திற்கு 260 நபர்கள் வருகை தந்திருந்தனர்.

### நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் அறிக்கைகளின் தேட்டம்

ஆண்டின் போது, 114 நூல்கள் - 37 கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் மற்றும் இலவச அடிப்படையிலும் அத்துடன் வெளியீட்டு பரிமாற்றச் செயற்றிட்டத்தின் கீழும் கிடைத்த 77 நூல்கள் - புத்தக சேகரிப்பு சேர்க்கப்பட்டன. வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்களிலிருந்து பாரிய எண்ணிக்கையைக் கொண்ட காலாந்திரிகள், செய்திக் கடிதங்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகள் ஆகியன ஒன்றில் இலவசமாக அல்லது பரிமாற்ற அடிப்படையில் கிடைத்தன. ஆண்டின் போது எட்டு வெளிநாட்டு சஞ்சிகைத் தலைப்புக்களுக்கும் (இது 96 இதழ்களை உள்ளடக்கியிருந்தது) அத்துடன் இரு உள்ளூர் சஞ்சிகைத் தலைப்புக்களுக்கும் நூலகம் சந்தா செலுத்தியது.

### நூலகச் சேவைகள்

இலக்கிய ஆராய்ச்சி, குறிப்பு சார்ந்த சேவைகள், நடைமுறையிலுள்ள விழிப்புணர்வுச் சேவைகள் மற்றும் புகைப்படப்பிரதியெடுக்கும் சேவைகள் போன்ற தகவல் மற்றும் ஆவணமாக்கல் சேவைகளின் நிமித்தம், அத்தகைய ஆராய்ச்சி ஊழியர்களுக்கும் மற்றும் ஏனைய வெளித்தரப்பு பயனர்களுக்கும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன.

இன்டர்நெட் வசதி அடிப்படையிலான பிரவேசம், இந்த நூலகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற Wi-Fi வசதியைக் கொண்டு, ஆராய்ச்சிப் பதவியணினருக்கு மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வித்தியாசமான பல விடயங்கள் தொடர்பான செய்திக் கட்டுரைகளைத் தொகுத்தல் மற்றும் துரித குறிப்புக்கான கட்டுரைகளை சூசிகையிடுதல் ஆகிய கரும பணிகள் ஆராய்ச்சிப் பதவியணியினரினதும் மற்றும் வெளித்தரப்பு பயனர்களினதும் பாவனையின் நிமித்தம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

### நூலகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு (ILC)

குறிப்பிட்ட நூலகம் ஒன்றில் கிட்டாவிட்டால் நூலகங்களுக்கு இடையிலான இரவல் ஊடாக ஹெ.கொ.க.ஆ.ப.நி.இலிருந்து அவசியப்பட்ட நூலக விடயதானங்களைப் பெறுவதற்கு வசதிகள் கிட்டுகின்றன. வேண்டுகோள் விடுக்கின்ற நூலகங்களுக்கு மட்டுமே நூலக விடயதானங்களின் இரவல் விளங்குவதுடன் தனிப்பட்டவர்களுக்கு அல்ல. தற்போது பல்கலைக்கழகங்களுக்கும், விசேட நூலகங்களுக்கும் இடையிலேயே நூலகங்களுக்கு இடையிலான இரவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இரவல் மீது வெளியீடுகளைப் பெறுவதற்கு முன்னர், நூலகங்களுக்கு இடையிலான இரவல் உடன்படிக்கையில் நூலகங்களுக்கு இடையிலான இரவல்களுக்காக வேண்டுகோள் விடுக்கின்ற நூலகங்கள் கைச்சாத்திட வேண்டும். அத்துடன் விசேடமாக பல்கலைக்கழகங்களுடன் ஈ-மெயில்களைப் பயன்படுத்தி எமது ஆராய்ச்சி நோக்கங்களுக்காக இலத்திரனியல் ஆவணங்கள் பரிமாறப்பட்டன.

2018ஆம் ஆண்டுக்கு தேசிய யூனியன் பட்டியலை புதுப்பிப்பதற்காக தேசிய நூலக சேவைகள் சபைக்கு நூலக தரவுத்தளத்திலிருந்து நூல் விவரப்பட்டியல் மேற்கோள்கள் வழங்கப்பட்டன.

### நிறுவகத்தின் வெளியீடுகளை டிஜிட்டல்மயப்படுத்துதல்

ஹெ.கொ.க.ஆ.ப.நி. வெளியீடுகள் தேசிய விஞ்ஞான மன்றத்தினது தேசிய டிஜிட்டல்மயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் வெற்றிகரமாக டிஜிட்டல்மயப்படுத்தப்பட்டுள்ளன. (http://harti.nsf.ac.lk).

நிறுவகம் சார்ந்த ஒரு இ-களஞ்சிய வசதியைத் தாபிப்பதும் மற்றும் நிறுவகத்தின் வெளியீடுகளுக்கு துரிதமான வினைத்திறன்வாய்ந்த ஒரு ஒன்லைன் வசதியை அளிப்பதும் இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

| ஹெ.கொ.க.ஆ.ப.நி. வெளியீடுகள் | தொகுப்புப் பெயர் | தொகுப்புக் கண்ணோட்டங்கள் |
|---|---|---|
| | வருடாந்த அறிக்கைகள் | 78 |
| | வருடாந்த அறிக்கைகள் (தமிழ்) | 48 |
| | சட்டங்கள் | 44 |
| சஞ்சிகைகள் | Sri Lanka Journal of Agrarian Studies | 72 |
| | கொவி கட்டயுது அத்தியனய | 110 |
| | கொவிஜனதா | 94 |
| | கொவிஜனதா | 116 |
| ஆராய்ச்சி அறிக்கைகள் | தனிவிவர நூல்கள் (ஆங்கிலம்) | 130 |
| | தனிவிவர நூல்கள் (சிங்களம்) | 118 |

| நாட்டின் பெயர் | கண்ணோட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஜப்பான் | 249 |
| இலங்கை | 478 |
| ஐக்கிய அமெரிக்கா | 224 |
| ஜேர்மனி | 51 |
| ரஷ்யா | 137 |
| பிரான்ஸ் | 41 |
| தென் கொரியா | 4 |
| Côte d"Ivoire/ஐவரி கோஸ்ட் | 5 |
| ஐரோப்பிய ஒன்றியம் | 22 |
| அவுஸ்திரேலியா | 5 |
| இந்தியா | 6 |
| இத்தாலி | 5 |
| ஐக்கிய இராச்சியம் | 8 |
| சீனா | 10 |
| ஐக்கிய அரபு நாடுகள் | 3 |
| சுவிட்சர்லாந்து | 3 |
| ஜப்பான் | 249 |
| இலங்கை | 478 |

**நூலக பிரச்சாரச் செயற்பாடுகள்**
ஹெ.கொ.க.ஆ.ப.நி. பற்றி தயாரிக்கப்பட்ட பிரச்சார வீடியோவும், ஒரு துண்டுப்பிரசுரமும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டதுடன், நிறுவகத்தின் இணையதளத்திலும் மேலேற்றப்பட்டன.

**வெளியீட்டு பரிமாற்றச் செயற்றிட்டம்**

ஹெ.கொ.க.ஆ.ப.நி.இன் ஐம்பத்தெட்டு வெளியீடுகள் (நூல்கள்/சஞ்சிகைகள்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள நூலகங்களுக்கு பரிமாற்ற அடிப்படையில் அனுப்பப்பட்டன.

1. கமத்தொழில் திணைக்களத்தின் சமூகப் பொருளாதார நிலையம்
2. குடிசன, புள்ளிவிபரவியல் திணைக்களம்
3. தேசிய நூலகச் சேவைகள் சபை
4. தேசிய விஞ்ஞான மன்றம்

5. யாழ்ப்பாணம் பொது நூலகம்
6. சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம்
7. இலங்கை மகாவலி அதிகார சபை
8. கொழும்பு பல்கலைக்கழகம்
9. களனி பல்கலைக்கழகம்
10. ருகுணு பல்கலைக்கழகம்
11. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
12. பேரதனை பல்கலைக்கழகம்
13. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
14. ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
15. ரஜரட்டை பல்கலைக்கழகம்
16. சப்ரகமுவ பல்கலைக்கழகம்
17. இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்
18. மொரட்டுவை பல்கலைக்கழகம்
19. வயம்ப பல்கலைக்கழகம்
20. பிக்கு பல்கலைக்கழகம், அனுராதபுரம்
21. பௌத்த, பாலி பல்கலைக்கழகம்

மேற்படி நூலகங்களிலிருந்து நாம் 42 வெளியீடுகளைப் பெற்றுக்கொண்டோம்.

## 08

## வெளியீட்டு அலகு

புள்ளிவிபரங்கள், தரவு படிநிலைப்படுத்தல்/வெளியீடு/நூலகம் மற்றும் புவியியல்சார் தகவல் முறைமை அலகுளின் தலைவரின் நோக்கெல்லையின் கீழ் வெளியீட்டு அலகு செயற்படுகின்றது. ஆராய்ச்சி அறிக்கைகள், இடையிடையிலான அறிக்கைகள், சஞ்சிகைகள், செய்தி மடல்கள், செய்தித்திரட்டுக்கள், கையேடுகள், தனிவிவர நூல்கள் மற்றும் வேறு தகவல்சார் விடயதானங்கள் ஆகியவற்றை சகல மூன்று மொழிகளிலும் பதிப்பித்தலும், வெளியிடுதலும் பிரதான பணிகளாகும்.

2019ஆம் ஆண்டில், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் ஆறு ஆராய்ச்சி அறிக்கைகள் வெளியிடப்பட்டன. வெளியீடுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**ஆராய்ச்சி அறிக்கைகள்**

1. இலங்கை, தென் கிழக்கின் உலர் வலயத்தில் சிறிய அளவிலான சோளச் செய்கையில் நிலைத்திருத்தல் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் மேம்படுத்தல் வாய்ப்புக்கள்
2. இலங்கையின் தென் கிழக்கு உலர் வலயத்தில் பயிர் உற்பத்தி முறைமையின் நிலைத்திருக்கும்தன்மை: நிலக்கடலைக்கும், பாசிப்பயறுக்கும் மற்றும் கரும்புக்குமான விசேட மேற்கோளுடன்
3. மரக்கறி சந்தைப்படுத்தல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு கமக்காரர் ஊடாடுதல் செயலின் ஆற்றலளவுகள்
4. இலங்கையில் வீட்டுத் தோட்ட பழச் செய்கை: அரசாங்கத் தலையீட்டின் நிர்ணயக்கூறுகளும், வகிபங்கும்
5. இலங்கையில் உர பண மான்ய செயற்றிட்டத்தின் ஒரு மதிப்பாய்வு
6. இலங்கையின் கமத்தொழில் துறையினுள் கமத்தொழில் பட்டதாரிகளையும், டிப்ளோமாவைக் கொண்டுள்ளவர்களையும் சேர்த்துக்கொள்வது மீதான ஓர் ஆய்வு

**செயல் அறிக்கைகள்**

1. இலங்கையின் கமத்தொழிலில் உயிரகப் பூச்சிநாசினிகளினதும், உயிரக உரத்தினதும் பயன்பாட்டின் ஆற்றலளவுகளும், தடைக்காரணிகளும்
2. ஒன்றிணைந்த நீர் வளங்கள் முகாமைத்துவக் கருத்துருவின் அபிவிருத்திக்கு இலங்கையின் புராதன நீர் முகாமைத்துவத் தொழில்நுட்பங்களிலிருந்து கற்கப்படுவதற்கான பாடங்கள்

மேலதிகமாக, பின்வரும் காலாந்திரிகள் வெளியிடப்பட்டன.

1. கொவிஜனதா - தொகுதி 20, நான்காவது இதழ், 2018
2. கொவிஜனதா - தொகுதி 21, முதலாவது இதழ், 2019
3. கொவிஜனதா - தொகுதி 21, இரண்டாவது இதழ், 2019
4. கொவிஜனதா - தொகுதி 21, மூன்றாவது இதழ், 2019
5. கொவிஜனதா - தொகுதி 21, நான்காவது இதழ், 2019
6. கமநலம் (தமிழ்) – தொகுதி 34, மூன்றாவது, நான்காவது இதழ்கள் 2018
7. கொவி கட்டயுது புவத் ஹசுன, தொகுதி 42, இல.03, 2018
8. கொவி கட்டயுது புவத் ஹசுன, தொகுதி 42, இல.04, 2018
9. கொவி கட்டயுது புவத் ஹசுன, தொகுதி 43, இல.01, 2019

காலத்தின் போது, செயலமர்வொன்றை வெளியீட்டு அலகு ஒழுங்குபடுத்தியது. விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

**புகைப்படமெடுத்தல் மீதான ஒரு நாள் செயலமர்வு**

வெளிக்கள மட்டத்தில் பொறுப்பேற்கப்படுகின்ற தமது ஆராய்ச்சி செயற்பாடுகளில் ஆராய்ச்சி பணியாளர்களுக்கும் மற்றும் அக்கறையைக் கொண்ட நபர்களுக்கும் அவசியமான திறன் ஒன்றான வாழ்க்கைத்தொழில் புகைப்படமெடுப்பதில் நிறுவகத்தின் ஆராய்ச்சி பணியாளருக்கும் அத்துடன் அக்கறையைக் கொண்ட நபர்களுக்கும் பயிற்சியையும், பூரண அறிவையும் வழங்குவதே நிகழ்ச்சியின் நோக்காகும்.

2019 டிசம்பர் 16 அன்று பிரசித்த புகைப்படப்பிடிப்பாளரும், வருகைதரும் நூற்கல்வியாளருமான இந்திரநாத தேனுவரவினால் செயலமர்வு நடத்தப்பட்டதுடன், இது புகைப்படமெடுத்தலின் கோட்பாட்டிலானதும் மற்றும் செயன்முறையிலானதுமான அம்சங்களைக் கொண்டிருந்தது. ஆராய்ச்சி ஆய்வுகளுக்கு தொடர்பான அதிகளவு நுண்மையயானதும், விவரணத்திலானதுமான படங்களை பிடிப்பது மீது கற்கையிலான வாய்ப்பொன்றாகும். செயற்றிட்டத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், புள்ளிவிபர உதவியாளர்கள் மற்றும் சமயாசமய ஆய்வாளர்கள் பங்கெடுத்தனர்.

## வேறு செயற்பாடுகள்

### கட்டுரைச் சமர்ப்பணங்கள்

1. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி டி.ரி.பி.எஸ். தர்மவர்தன, 2019 செப்ரெம்பர் 9 முதல் 11 வரை ஸ்கொட்லாந்து, எடின்பரோ ஒன்பதாவது வன் பொதுநலவரசு அரங்கில் "ஈரநில முகாமைத்துவத்தில் பங்கெடுப்பிலான அணுகுமுறைகளின் வகிபங்கு: தென் இலங்கையின் புந்தல ஈரநிலத்திலிருந்து சான்று" என்ற தலைப்பிலான முழுக் கட்டுரையொன்றை சமர்ப்பித்தார்.

2. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி டி.ரி.பி.எஸ். தர்மவர்தன, 2019 பெப்ரவரி 28 அன்று ருகுணு பல்கலைக்கழகம், கமத்தொழில் பீடத்தில் கமத்தொழில் மற்றும் சூழல் மீதான சர்வதேச கருத்தாடலில் "தெரிவு பரிசோதனையொன்றைப் பயன்படுத்தி ஈரநில பண்புகளின் பொருளாதார மதிப்பீடு: இலங்கையில் புந்தல ஈரநிலத்தின் ஒரு விடயம்" என்ற தலைப்பிலான சுருக்கமொன்றை முன்வைத்து, வெளியிட்டார்.

3. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டி.எம்.எ.சி.திசாநாயக்க, 2019 நொவம்பர் 14 அன்று இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஏழாவது சர்வதேச மகாநாட்டில் (ICSUSL 2019) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயன்பாடு மீது போதியளவு அறிவை இலங்கையின் கமக்காரர்கள் கொண்டுள்ளனரா?ஷ என்ற தலைப்பிலான கட்டுரையொன்றை சமர்ப்பித்தார்.

4. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டி.எம்.எ.சி.திசாநாயக்க, 2019 செப்ரெம்பர் 26 அன்று ருகுணு பல்கலைக்கழக மனிதவியல்கள், சமூக விஞ்ஞானங்கள் பீடத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட 2019 - மனிதவியல்கள், சமூக விஞ்ஞானங்கள் மீதான ஐந்தாவது ருகுணு பல்கலைக்கழக சர்வதேச மகாநாட்டில் (RUICHSS) "இலங்கையில் மனிதன், யானை மோதலுக்கான தணிப்பு நடவடிக்கையாக மின்சார வேலிகளின் ஆற்றலளவுகள் மற்றும் சவால்கள்: மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் ஒரு விடயம்" என்ற தலைப்பிலான ஆராய்ச்சி கட்டுரையொன்றைச் சமர்ப்பித்தார்.

5. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ஆர்.எம்.டி.எச்.ரத்னாயக்க, 2019 மார்ச் 05 அன்று World Journal of Agricultural Research, Vol 7, No 3, 45-55க்கு Pogostemonheyneanus Benth (Lamiaceae) இன் வேறுபட்ட பாகங்களின் பௌதீக மற்றும் இரசாயன விளைச்சல் மீது இடைவெளியிடல் மற்றும் உர மட்டங்கள் என்ற தலைப்பிலான கட்டுரையொன்றை சமர்ப்பித்தார்.

6. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ருவீனி விதானபத்திரன, 2019 நொவம்பர் 07 முதல் 08 வரை கோல்பேஸ் ஹொட்டேலில் நடைபெற்ற கமத்தொழில், உணவு பந்தோபஸ்து மற்றும் பாதுகாப்பு மீதான சர்வதேச மகாநாட்டில் (AgroFood 2019) "இலங்கையில் பழம் மற்றும் மரக்கறி விநியோகச் சங்கிலிகளில் பாதுகாப்பு பிரச்சனைகள்" என்ற தலைப்பிலான முழு அறிக்கையொன்றை வெளியிட்டார்.

### வெளியீடுகள் (சஞ்சிகைக் கட்டுரைகள் போன்ற)

1. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ருவீனி விதானபத்திரன, மீன்பிடித்தொழில், நீரியல் வள அபிவிருத்தி, கிராமிய பொருளாதார அமைச்சுக்காக ஷமொனராகலை மாவட்டத்தின் தெலுளு பகுதியில் அர்ப்பணிக்கப்பட்ட பொருளாதார நிலையத்தின் தாபிப்பு| மீது சாத்தியவள அறிக்கையைத் தயாரித்தார் (2018 டிசம்பர் முதல் 2019 மார்ச் வரை)

2. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ருவீனி விதானபத்திரன, சாராம்சங்களின் நூலில் கட்டுரையொன்றை வெளியிட்டார் - கமத்தொழில், உணவு பந்தோபஸ்து மற்றும் பாதுகாப்பு (Agro Food 2019) ("இலங்கையில் பழம் மற்றும் மரக்கறி விநியோக சங்கிலிகளில் பாதுகாப்பு பிரச்சனைகள்": ஒரு மதிப்பாய்வு"), மகாநாட்டினால் வெளியிடப்பட்டது.

3. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ருவீனி விதானபத்திரன, 05.04.2019 அன்று டெயிலி நியுஸில் "பால் உற்பத்தியிலும் மற்றும் பாவனையிலும் அண்மைய போக்குகள்" என்ற தலைப்பிலான கட்டுரையொன்றை வெளியிட்டார், இணைப்பு: http://www.dailynews.lk/2019/04/05/features/182279/recent-trends-milk-production-and-consumption
4. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ருவீனி விதானபத்திரன, 2019 ஏப்ரல் 17 அன்று தினமின செய்திப்பத்திரிகையில் "රටකිරටහැඩීමනතරකිරීම" என்ற கட்டுரையை வெளியிட்டார். இணைப்பு: http: //www.dinamina.lk//2019/04/17/..රට-කිරට-හැඩීම-නතර-කිරීම...

5. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ஜி.வி. நொரிகா அயோமி, "வட மத்திய மாகாணத்தில் பாதுகாப்பான நீரின் மூலமொன்றாக மழைநீர்" என்ற தலைப்பிலான கட்டுரையை சமர்ப்பித்தார் - கொவிஜனதா சஞ்சிகை, 2019 ஜூலை - செப்ரெம்பர், தொகுதி 21 - ஹெ.கொ.க.ஆ.ப.நி.

6. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ஜி.வி. நொரிகா அயோமி, 2019 ஓகஸ்ட் 27 அன்று டெயிலி நியுஸூக்காக "இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் பாதுகாப்பான நீரின் பாவனையின் மூலமொன்றாக மழைநீரை மேம்படுத்துவதன் ஆற்றலளவு" என்ற தலைப்பிலான கட்டுரையை வெளியிட்டார்.

**குழுக்களுக்கும், கருத்தரங்குகளுக்கும் மற்றும் செயலமர்வுகளுக்கும் சேவைகள்**

1. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டி.எம்.எ.சி.திசாநாயக்க, 2019இல் கமத்தொழில் அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட "கமத்தொழில் துறையில் வன விலங்குகளினாலான பயிர் சேதங்களைச் சமாளிப்பதற்கான தேசிய குழு" மீதான கூட்டத்தில் பங்கெடுத்தார்.

2. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டபிள்யு.எச். துமிந்த, இலங்கையின் பாரிய உணவுப் பயிர்களின் தரவு சேகரிப்பினதும், பகுப்பாய்வினதும் மீது இலங்கைப் பாராளுமன்றத்தின் விசேட ஆராய்ச்சி அலகின் ஆராய்ச்சியாளர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் ஒரு நாள் செயலமர்வொன்றை நடத்தினார்.

3. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டபிள்யு.எச். துமிந்த, வாழ்க்கைச் செலவு மீதான வாராந்த அமைச்சரவை உப குழுவில் பங்கெடுத்தார்.

4. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டபிள்யு.எச். துமிந்த, சோளத்தின் இறக்குமதி மீது உணவு மேம்படுத்தல் சபையினதும் மற்றும் தேசிய செயற்றிட்டத்தின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினதும் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றினார்.

5. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டபிள்யு.எச். துமிந்த, பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நெல் மற்றும் அரிசிக் கையிருப்புக்களின் முகாமைத்துவத்திற்கான தேசியக் குழுவின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றினார்.

6. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டபிள்யு.எச். துமிந்த, 2019 செப்ரெம்பர் 29 முதல் 2020 ஜனவரி 29 வரை நிறுவகத்தின் பதில் தலைவராக/பிரதம நிறைவேற்று அதிகாரியாக சேவையாற்றினார்.

7. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ஜி.ஜி. டீ எல்.டபிள்யு. சமரசிங்க, இலங்கை நீர் பங்காண்மையின் (லங்கா ஜலானி) முன்னெடுத்தல் குழுவின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றினார்.

8. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ஜி.ஜி. டீ எல்.டபிள்யு. சமரசிங்க, இலங்கை ஆச்சாரியா மன்றம், கரிட்டாஸ் சுவிடசர்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் ஆகியவற்றினால் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்ட இலங்கை-தென் ஆசிய ஆற்றலளவைக் கட்டியெழுப்பும் கமத்தொழில், நீர் தீழ்ப்புக்கான கருத்திட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றினார்.

9. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ஜி.ஜி. டீ எல்.டபிள்யு. சமரசிங்க, இலங்கை கமத்தொழில் ஆய்வுக் கொள்கைச் சபையின் தேசிய வளங்கள் முகாமைத்துவ, நிலைத்திருக்கத்தக்க கமத்தொழில், காலநிலை மாற்றம் மீதான தேசியக் குழுவின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றினார்.

10. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ருவீனி விதானபத்திரன, இலங்கையில் மலர்சசெடி வளர்ப்பு ஆராய்ச்சி, அபிவிருத்தி மீதான தேசியக் குழுவின் உறுப்பினர் ஒருவராகச் சேவையாற்றினார்.

**தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளுக்கு பங்களிப்புகள்**

1. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டபிள்யு.எச்.டி.பிரியதர்ஷன, சிரச தொலைக்காட்சியினாலான "அஸ்வென்ன" நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கெடுத்தார்.

2. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. டபிள்யு.எச்.டி.பிரியதர்ஷன, இ.ஒ.கூ.இன் ரங்கிரி எப்.எம்.இன் "பெரதிய மன்கட" நிகழ்ச்சி மற்றும் நான்கு "கமத்தொழில் நவோதய" நிகழ்ச்சி ஆகியவற்றில் பங்கெடுத்தார்.

## 2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு பதவியணியின் நிலை

| | 2018 டிசம்பர் 31இல் உள்ளவாறு பதவிகளின் நிலை | ஆண்டின் போது பதவிவிலக்கல், ராஜினாமா | நியமனங்கள் | 31.12.2019இல் உள்ளவாறு பதவிகளின் நிலை |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | 1 | 1 | - | - |
| மேலதிகப் பணிப்பாளர் | 1 | - | - | - |
| பிரிவுகளின் தலைவர்கள் | 6 | - | - | 6 |
| ஆராய்ச்சிப் பதவியணியினர் | 30 | - | - | 30 |
| நிருவாகப் பதவியணியினர் | 8 | - | 1 | 9 |
| நூலகத்தின் சிரேஷ்ட பதவியணியினர் | 2 | - | - | 2 |
| தரவுகள் அபிவிருத்தி வங்கி | 2 | - | - | 2 |
| கணனி அலகு | 1 | - | - | 1 |
| வெளியீட்டு அலகு | 5 | - | - | 5 |
| புள்ளிவிபரப் பதவியணியினர் | 29 | 7 | - | 22 |
| தொழில்நுட்பப் பதவியணியினர் | 5 | 2 | - | 3 |
| எழுதுநர், செயலக மற்றும் இணையான தரங்கள் | 49 | 3 | 2 | 48 |
| இயக்கச்செயற்பாட்டு மற்றும் இணைந்த தரங்கள் | 46 | 1 | 1 | 46 |
| மொத்தம் | **185** | **15** | **4** | **174** |

## பதவியணியின் முன்னேற்றம்

2019இல் பதவியணியின் முன்னேற்றத்திற்காக, ரூபா 2.1 மில்லியன் நிதி முதலீடு செய்யப்பட்டதுடன், இதில் 45 பதவிநிலை-சார்ந்த ஊழியர்களும், எட்டு பதவிநிலை-சாராத ஊழியர்களும் உள்நாட்டுப் பயிற்சியை மேற்கொண்டனர். ஒன்பது பதவிநிலை-சார்ந்த ஊழியர்கள் வெளிநாட்டுப் பயிற்சிகளை மேற்கொண்டனர்.

**பின்வரும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளைப் பின்பற்றினரகள்:**

| | | |
|---|---|---|
| திரு. எச்.ஜே.சி.ஜயசூரியா | - | பட்டப்பின்படிப்புக் கற்கைகள் (முதுமானி)<br>அவுஸ்திரேலியா, 08 ஜனவரி 2019 - 31 டிசம்பர் 2020 |
| திருமதி பி.எ.ஜி.சம்பிக | - | பட்டப்பின்படிப்புக் கற்கைகள் (முதுமானி)<br>அவுஸ்திரேலியா, 08 ஜனவரி 2019 - 31 டிசம்பர் 2020 |
| திரு. பி.சி.ஜே. டி சில்வா | - | பிலிப்பைன்ஸில் "பட்டப் பாடசாலையில் சமூக அபிவிருத்தி" மீதான கலாநிதிப் பட்டம், 19 பெப்ரவரி 2019 - 01 பெப்ரவரி 2022 |

**சர்வதேச பயிற்சியில் பங்கெடுப்பு**
**செயற்றிட்டங்கள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்/மாநாடுகள்/கூட்டங்கள் முதலியன**

1. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி எம்.டி.சுசிலா ஹூர்து, 2019 ஜனவரி 21 முதல் பெப்ரவரி 17 வரை இந்தியா, ஹைதராபாத்தில் நடைபெற்ற தேசிய கிராமிய அபிவிருத்தி, பஞ்சஜட்டி ராஜ் நிறுவனத்தில் (NIRD-PR) பயிற்சிநெறியில் பங்கெடுத்தார்.

2. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ஐ.கே.எதிரிசிங்க, 2019 பெப்ரவரி 18 முதல் மார்ச் 17 வரை இந்தியாவில் நடைபெற்ற "வறுமைக் குறைப்புக்கும், நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கும் பங்கெடுப்பிலான திட்டமிடல்" என்ற தலைப்பிலான பயிற்சி செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

3. மேலதிகப் பணிப்பாளரான திரு. ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ, 2019 மார்ச் 01 முதல் மார்ச் 10 வரை வியட்நாமில் நடைபெற்ற "உணவு வீண்விரயத்திலிருந்து செல்வந்தத்திற்கு: சந்தைக்கு அறுவடைக்குப் பின்" என்ற CIRDAP - NIRD கூட்டுமுயற்சியிலான சர்வதேசப் பயிற்சி செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

4. ஆராய்ச்சி சகபாடியான திருமதி பி.ஆர்.வீரக்கொடி, 2019 ஜூன் 25 முதல் ஜூன் 28 வரை இந்தியாவில் நடைபெற்ற CIRDAP தொழில்நுட்பக் குழுவின் முப்பத்திநான்காவது கூட்டத்தில் (TC-34) பங்கெடுத்தார்.

5. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி திலினி பத்மாஜனி, 2019 ஒகஸ்ட் 19 முதல் ஒகஸ்ட் 24 வரை சீனாவில் நடைபெற்ற "உயிரக உரம் மற்றும் உயிரகப் பூச்சிநாசினிகள்: ஒன்றிணைந்த பூச்சி முகாமைத்துவம்" மீதான 04ஆவது சர்வதேச மகாநாட்டில் பங்கெடுத்தார்.

6. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. சிதத் பண்டார, நேபாளம் LiBird மற்றும் இந்தியா DHAN மன்றத்தினால் இணைந்து நடத்தப்பட்ட "கமத்தொழில் கால்நடை மற்றும் வன வள முகாமைத்துவத்தில் நீர்த்தீழ்ப்பு மீதான பிராந்திய TOT செயற்றிட்டத்தில்" பங்கெடுத்தார். 2019 ஒகஸ்ட் 28 முதல் ஒகஸ்ட் 30 வரை நேபாளம் பொக்ஹரவில் செயற்றிட்டம் நடைபெற்றது.

7. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. எம்.எ.சி.எஸ். பண்டார, 2019 செப்ரெம்பர் 30 முதல் ஒக்டோபர் 04 வரை இந்தோனேஷியா, பாலியில் நடைபெற்ற "கமத்தொழில் உருமாற்றம்"மீதான செயலமர்வில் பங்கெடுத்தார்.

8. ஆராய்ச்சி சகபாடியான திரு. எச்.எம்.ஜே.கே.ஹேரத், 2019 நொவம்பர் 20 முதல் நொவம்பர் 29 வரை இந்தியா, ஹைதராபாத்தில் நடைபெற்ற "திட்டமிடலுக்கும், முகாமைத்துவத்திற்கும் புவி தகவல் மற்றும் நவீன அளவீட்டுத் தொழில்நுட்பங்கள்" மீதான CIRDAP – NIRD சர்வதேசப் பயிற்சி செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

**உள்ளூர் பயிற்சியில் பங்கெடுப்பு – பதவிநிலை-சார்ந்த உத்தியோகத்தர்கள்**

1. ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திரு. எஸ்.பி.பெர்னாண்டோ மற்றும் திருமதி ஜி.வி.என்.அயோமி ஆகியோர் 2019 மார்ச் 14 முதல் 16 வரை மழை நிலையத்தில் நடைபெற்ற "மழைநீர் அறுவடை மற்றும் நிலத்தடி நீர் மீள்ஏற்றுதல்" மீதான சான்றுப்பத்திர செயற்றிட்டத்தில் பங்கெடுத்தனர்.

2. ஆராய்ச்சி உத்தியோகத்தரான செல்வி ஜே.எ.யு.பி.ஜயசிங்க, 2019 ஜூன் 20 அன்று மீன்பிடித் தொழில், நீரியல் வாழ் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற "கக்க ஓய வட்டகையில் ராஜாங்கனை நீர்த் தேக்கத்தில் நச்சியலிலான அல்கா பெருக்கமொன்றின் தோற்றப்பாடு" மீதான ஒருநாள் செயலமர்வில் பங்கெடுத்தார்.

3. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான கலாநிதி என்.பி.ஜி.சமந்த, 2019 ஜூன் 06 முதல் 07 வரை ஜெற்விங் புளு ஹொட்டேலில் நடைபெற்ற "இலங்கையில் வீட்டில் வளர்க்கும் பாடசாலை தீவன மாதிரியில்" பங்கெடுத்தார்.

4. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி டி.ரி.பி.எஸ். தர்மவர்தன, 2019 ஜூலை 23 முதல் 24 வரை வங்கியாடல் ஆய்வுகள் நிலையத்தில் நடைபெற்ற "பொறுப்பான நிதிசார் உள்ளடக்கம்" மீதான சர்வதேச செயலமர்வில் பங்கெடுத்தார்.

5. நூலகரான திருமதி எச்.எம்.ரி.ஜி.எல்.ஹேரத், 2019 ஓகஸ்ட் 07 அன்று சர்வதேச பண்டாரநாயக்க கற்கைகள் நிலையத்தில் நடைபெற்ற "அறிவு சமூகமொன்றில் நூலகங்களின் வகிபங்கு" மீதான கருத்தரங்கில் பங்கெடுத்தார்.

6. தரவு பகுப்பாய்வாளரான திருமதி என்.பி.ஜயநெத்தி, 2019 செப்ரெம்பர் 17 அன்று குடிசன கணக்கெடுப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தில் நடைபெற்ற "சனத்தொகையினதும், வீடமைப்பினதும் கணக்கெடுப்பு - 2021. தரவுகளைப் பயன்படுத்துவோரின் ஆலோசனைகள்/வேண்டுகோள்கள்" மீதான கருத்தரங்கில் பங்கெடுத்தார்.

7. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திருமதி ருவீனி விதானபத்திரன மற்றும் ஆர்.என்.கே.ரம்புக்வெல ஆகியோர், 2019 செப்ரெம்பர் 17 அன்று இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தில் நடைபெற்ற "உணவின் தரம், சமூகம் மற்றும் ஒழுங்குவிதிகள்" மீதான கருத்தரங்கில் பங்கெடுத்தனர்.

8. ஆராய்ச்சி உத்தியோகத்தரான செல்வி எ.கே.எ.திசாநாயக்க, 2019 நொவம்பர் 07 முதல் 08 வரை கோல்பேஸ் ஹொட்டேலில் நடைபெற்ற "கமத்தொழில் உணவுப் பந்தோபஸ்து மற்றும் பாதுகாப்பு" மீதான சர்வதேச மகாநாட்டில் பங்கெடுத்தார்.

9. மேலதிகப் பணிபாளரான (பதில்) கலாநிதி டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க மற்றும் உதவிப் பதிவாளரான (நிகழ்ச்சித்திட்டம்) திருமதி சந்திரிகா தகநாயக்க ஆகியோர், 2019 செப்ரெம்பர் 24 அன்று இலங்கை சுற்றுலா, ஹொட்டேல் முகாமைத்துவ நிறுவனத்தில் நடைபெற்ற "அரசாங்கச் சேவையாளரின் மாற்றமடையும் வகிபங்கு" மீதான விரிவுரையில் பங்கெடுத்தனர்.

10. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திருமதி சாகரிகா ஹிட்டிஹாமு, திருமதி எம்.டி.சுசிலா லூர்து, திருமதி திலூபா பமுனுஆரச்சி ஆகியோரும் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திருமதி மாலதி ரம்பொடகெதர, திருமதி நொரிகா அயோமி மற்றும் திருமதி ஆர்.டி.விஜேசிங்க ஆகியோரும், 2019 செப்ரெம்பர் 26 முதல் 27 வரை ஹொட்டேல் ஜானகியில் நடைபெற்ற "பொலன்னறுவை ஒன்றிணைந்த அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் தேசிய தொழில்முன்னிலை பயிற்சி நிறுவனமொன்றைத் தாபித்தல்" மீதான Pre–DACUM செயலமர்வில் பங்கெடுத்தனர்.

11. ஆராய்ச்சி உத்தியோகத்தரான செல்வி எ.கே.எ.திசாநாயக்க, 2019 ஒக்டோபர் 03 அன்று கொழும்பு ஹில்டனில் நடைபெற்ற விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியில் "சமூக மற்றும் கலாசார இணைவு (SCST)" மீதான சர்வதேச மகாநாட்டில் பங்கெடுத்தார்.

12. ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான செல்வி ஐ.கே.எதிரிசிங்க மற்றும் திருமதி தினுஷா ரத்னாயக்க ஆகியோரும் மற்றும் சிரேஷ்ட தகவல் வெளியீட்டு உத்தியோகத்தரான திரு. எஸ்.எ.சி.யு.சேனநாயக்கவும், 2019 டிசம்பர் 10 அன்று அழிவு முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற "ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதுதல்" மீதான செயற்றிட்டத்தில் பங்கெடுத்தனர்.

13. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி முனவீரகே, 2019 டிசம்பர் 13 முதல் 15 வரை ஹெ.கொ.க.ஆ.ப.நி. இல் நடைபெற்ற யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கமத்தொழில் பீடத்தின் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான "கம-வியாபார கருத்துருக்களினதும் சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பினதும் பிரயோகம்" மீதான செயலமர்வில் வள நபரொருவராகச் சேவையாற்றினார்.

14. களனி பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரையாளரான திரு. இந்திரநாத தேனுவரவினால் 2019 டிசம்பர் 16 அன்று ஹெ.கொ.க.ஆ.ப.நி. நடைபெற்ற 'வெளிக்கள புகைப்படப் பிடிப்பு' மீதான பயிற்சிச் செயற்றிட்டத்தில் ஆராய்ச்சிப் பதவியணியினரும், புள்ளிவிபரப் பதவியணியினரும் பங்கெடுத்தனர்.

15. மேலதிகப் பணிபாளரான (பதில்) கலாநிதி டபிள்யு.எ.ஆர்.விக்ரமசிங்க, சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான கலாநிதி இ.எ.சி.பிரியங்கர மற்றும் திருமதி ஜி.ஜி.டீ எல்.டபிள்யு.சமரசிங்க, உதவிப் பதிவாளரான (நிகழ்ச்சித்திட்டம்) திருமதி சந்திரிகா தகநாயக்க, கணக்காளரான திருமதிஜி.டபிள்யு.துஷாரி மற்றும் நிருவாக உத்தியோகத்தரான (நிகழ்ச்சித்திட்டம்) திருமதி ஆர்.எ.டி.என்.ரூபசிங்க ஆகியோர், CARPஇல் 2019 டிசம்பர் 19 அன்று நடைபெற்ற இலங்கை கமத்தொழில் ஆய்வு கொள்கை சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட "ஆராய்ச்சி கருத்திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்தல்" மீதான பயிற்சி செயலமர்வில் பங்கெடுத்தனர்.

16. ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திருமதி டி.ரி.பி.எஸ்.தர்மவர்தன, திரு. டி.எம்.எ.சி.திசாநாயக்க, திருமதி ஆர்.எம்.டி.எச்.ரத்னாயக்க மற்றும் எம்.பீ.எப்.ரிபானா ஆகியோர், 2019 ஜூலை 09 அன்று ஹெ.கொ.க.ஆ.ப.நி. இனால் ஒழுங்குபடுத்தப்பட்ட 'ஒன்லைன் தரவு பதிவு' மீதான பயிற்சி செயற்றிட்டத்தில் பங்கெடுத்தனர்.

17. ஆராய்ச்சி உத்தியோகத்தரான திருமதி ஆர்.எம்.டி.எச்.ரதனாயக்க, 2019 ஒக்டோபர் 24 அன்று ஐ.நா. சர்வதேச நைதரசன் முகாமைத்துவ முறைமையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட "நிலைத்திருத்தல் நைதரசன் முகாமைத்துவம் மீதான ஐக்கிய நாடுகள் உலகளாவிய இயக்கம்" என்ற தலைப்பிலான செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

18. சிரேஷ்ட தகவல் வெளியீட்டு உத்தியோகத்தரான திரு. எஸ்.எ.சி.யு.சேனநாயக்க மற்றும் தகவல் வெளியீட்டு உத்தியோகத்தரான திருமதி வசந்தி ராஜபக்ஷ ஆகியோர், 2019 டிசம்பர் 17 முதல் 18 வரை தேசிய நூலக சேவைகள் ஆவணப்படுத்தல் சபையில் நடைபெற்ற 'பதித்தலில் அடிப்படை முறைகள்' மீதான இரு நாள் செயலமர்வில் பங்கெடுத்தனர்.

**உள்ளூர் பயிற்சி – பதவிநிலை-சாராத**

1. போக்குவரத்து உதவியாளரான திரு. எ.டி.ஜயன், 2019 பெப்ரவரி 28 முதல் மார்ச் 01 வரை நிருமாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் நடைபெற்ற "போக்குவரத்து முகாமைத்துவம்" மீதான செயலமர்வில் பங்கெடுத்தார்.

2. முகாமைத்துவ உதவியாளரான திருமதி கவிஷா சத்சரனி, 2019 மார்ச் 11 முதல் மார்ச் 12 வரை SDSLஇல் நடைபெற்ற "அரசாங்க உத்தியோகத்தர்களின் லீவு" என்ற செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

3. கணக்குப் பதிவாளரான திருமதி மங்கலானி ஜயலத், 2019 மார்ச் 14 அன்று PRAGஇல் நடைபெற்ற "உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் மற்றும் காசோலைகள்" மீதான ஒரு நாள் செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

4. சாரதியான திரு. சமன் பெத்தலியாகொட, 2019 ஜூன் 29 அன்று நகர அபிவிருத்தி அமைச்சு, நிருமாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் நடைபெற்ற "சாரதிகளுக்கான பாதுகாப்பான செலுத்தல்" மீதான செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

5. கணக்குப் பதிவாளரான திருமதி மங்கலானி ஜயலத், 2019 ஒக்டோபர் 24 அன்று PRAGஇல் நடைபெற்ற "இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல்" மீதான ஒரு நாள் செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

6. முகாமைத்துவ உதவியாளரான திரு. புபுது நிரோஷன், 2019 டிசம்பர் 10 அன்று PRAGஇல் நடைபெற்ற "ஆகுசெலவு மற்றும் கொடுப்பனவு நடைமுறைகளையும் அத்துடன் நிதிசார் ஒழுங்குவிதிகளையும் மேம்படுத்தல்" மீதான செயற்றிட்டத்தில் பங்கெடுத்தார்.

7. முகாமைத்துவ உதவியாளர்களான சாலிய தர்மதாச மற்றும் திரு. நிரோஷா திசாநாயக்க ஆகியோர், 2019 டிசம்பர் 24 அன்று PRAGஇல் நடைபெற்ற அலுவலக முறைமைகள் மற்றும் செயற்றிறமை" மீதான ஒரு நாள் பயிற்சி செயற்றிட்டத்தில் பங்கெடுத்தனர்.

**ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**

**2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு நிதிசார் நிலையின் கூற்று** ரூ.

| **சொத்துக்கள்** | குறிப்புகள் | **2019** | **2018** |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள் | 2 | 15,616,183.49 | 15,595,046.24 |
| கிடைக்க வேண்டியவை - கடன்தருனர்கள் | 3 | 32,520,745.31 | 31,356,972.15 |
| கிடைக்க வேண்டியவை - வைப்புக்கள் | 4 | 613,070.00 | 613,070.00 |
| பொருட்பட்டியல்கள் | 5 | 5,229,254.96 | 6,698,505.97 |
| முன்கொடுப்பனவுகள் | 6 | 35,067.01 | 24,559.73 |
| வேறு நடைமுறையிலான சொத்துக்கள் | 7 | 23,500.00 | 224,312.40 |
| | | **54,037,820.77** | **54,512,466.49** |
| **நடைமுறைசாராச் சொத்துக்கள்** | | | |
| வேறு நிதிசார் சொத்துக்கள் | 8 | 3,900,922.99 | 3,691,021.00 |
| உட்கட்டமைப்பு, பொறி மற்றும் சாதனங்கள் | 9 | 22,573,958.85 | 23,651,616.46 |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 10 | 37,697,130.51 | 39,294,336.79 |
| நடந்து கொண்டிருக்கும் வேலை | 11 | 1,539,951.30 | 386,568.36 |
| | | **65,711,963.65** | **67,023,542.61** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **119,749,784.42** | **121,536,009.10** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கொடுப்பனவுக்குரியவை | 12 | **19,063,151.63** | **17,334,089.64** |
| | | **19,063,151.63** | **17,334,089.64** |
| **நடைமுறைசாராப் பொறுப்புக்கள்** | 13 | 57,562,752.50 | 52,241,966.50 |
| ஊழியர் நன்மைகள் | | **57,562,752.50** | **52,241,966.50** |
| | | **76,625,904.13** | **69,576,056.14** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **43,123,880.29** | **51,959,952.96** |
| **நிகர சொத்துக்கள்** | | | |
| **நிகரசொத்துக்கள்/ஒப்புரவு** | 14 | 44,971,154.73 | 51,821,985.57 |
| அரசாங்க உதவுதொகை | | | - |
| அமைச்சினால் பங்களிக்கப்பட்ட மூலதனம் | 15 | 3,376,906.90 | 3,342,461.37 |
| ஒதுக்குகள் | | 26,450.20 | 26,450.20 |
| மீள்-மதிப்பு ஒதுக்கு | 16 | 8,611.38 | - |
| ஊக்குவிப்பு மற்றும் பயிற்சி நிதியம் | 17 | (5,259,242.92) | (3,230,944.18) |
| திரண்ட மேன்மிகை/(பற்றாக்குறைகள்) | | | |
| **மொத்த நிகர சொத்துக்கள்/ஒப்புரவு** | | **43,123,880.29** | **51,959,952.96** |

5 முதல் 8 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 9 முதல் 16 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும். அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் தேவைப்பாடுகள் அனுசரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

........................

**துஷாரி வெதகே**
**கணக்காளர்**

திகதி .............................

..................................

பேராசிரியா ரஞ்ஜித் பிரேமலால் டீ சில்வா
பணிப்பாளர்

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்கும் பொறுப்பு பணிப்பாளர்கள் சபைக்குரியதாகும். ஆகையால் இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர்கள் சபையினால் அதன் சார்பாக கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

..............................................

**நீல் பண்டாரா ஹபுயின்னா**

**தலைவர்**

.................................

**சபை உறுப்பினர்**

**ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**
**2019 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல**

இ.ரூ.

| **வருமானம்** | குறிப்புகள் | **2019** | **2018** |
|---|---|---|---|
| அரசாங்க திறைசேரியிலிருந்து கிடைத்த நிதி | | 175,000,000.00 | 157,730,000.00 |
| ஆராய்ச்சி, பயிற்சி செயற்பாடுகளுக்கு வெளித் தரப்புகளிடமிருந்து கிடைத்த நிதி | | 9,014,545.91 | 8,370,512.07 |
| ஆராய்ச்சி, பயிற்சி செயற்பாடுகளுக்கு கிடைத்த மூலதன மானியம் | | 15,694,578.53 | 17,134,027.29 |
| ஏனைய வருமானம் | 18 | 32,082,932.97 | 31,708,971.91 |
| ஏற்பாட்டின் மேலான கிடைக்காத கடன் | | 332,395.78 | 291,988.43 |
| **மொத்த வருமானம்** | | **232,124,453.19** | **215,235,499.70** |
| **செலவுகள்** | | | |
| வேதனாதிகள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள் | 19 | (168,108,417.15) | (154,888,834.37) |
| ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகள் | | (15,694,578.53) | (17,134,027.29) |
| ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்கு வெளித் தரப்புகளிடமிருந்து கிடைத்த நிதிகள் | | (9,014,545.91) | (8,370,512.07) |
| தேய்மானம் | 9, 10 | - | (971,637.00) |
| ஏனைய செலவுகள் | 20 | (41,274,563.20) | (36,084,825.77) |
| ஏற்பாட்டின் மேலான கிடைக்காத கடன் | | (97,700.00) | (86,795.00) |
| வங்கிக் கட்டணங்கள் | | **(234,189,804.79)** | **(217,536,631.50)** |
| **மொத்தச் செலவுகள்** | | | |
| **குறித்த ஆண்டிற்கான மேன்மிகை/பற்றாக்குறை** | | **(2,065,351.60)** | **(2,301,131.80)** |

........................ ..............................................

**கணக்காளர்** **பணிப்பாளர்**

**2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று**

| 2018 | குறிப்புக | | 2019 (இ.ரூ) | |
|---|---|---|---|---|
| | **இயக்கச் செயற்பாடுகளில் பயன்பட்ட காசுப் பாய்ச்சல்** | | | |
| (2,301,131.80) | குறித்த ஆண்டிற்கான தேறிய பற்றாக்குறை/மிகை | | | (2,065,351.60) |
| | **பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்** | | | |
| 20,162,404.00 | தேய்மானம் | | 8,741,252.31 | |
| (19,190,767.00) | கடன்தீர்ப்பு | | (8,741,252.31) | |
| 10,533,630.50 | பணிக்கொடைக்கான நிதியேற்பாடு | | 10,802,680.00 | |
| (1,237,847.79) | இடைநேர் பொறுப்புகளுக்கான நிதியேற்பாடு | | (1,190,841.12) | |
| (688,635.19) | முதலீட்டு வருமானம் | | 7,820,601.27 | |
| (47,865.00) | முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | 308,502.09 | |
| | பொருட்கள் அகற்றல் மீதான இலாபம் | | (332,395.78) | 17,408,546.46 |
| **7,229,787.72** | **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாட்டு இலாபம்** | | | **15,343,194.86** |
| | | | | |
| | **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | | |
| (5,026,074.21) | வருமதிகள் | | (8,947,321.57) | |
| (671,235.81) | பொருட்பதிவேடுகள் | | 1,469,251.01 | |
| (105.86) | முற்கொடுப்பனவுகள் | | (10,507.28) | |
| (25,486.90) | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | | 200,812.40 | |
| 7,090,737.95 | கொடுமதிகள் | | 1,729,061.99 | (5,558,703.45) |
| **8,597,622.89** | **இயக்கச்செயற்பாடுகளில் பயன்பட்ட காசு** | | | **9,784,491.41** |
| | | | | |
| **(3,954,919.50)** | **பணிக்கொடைக் கொடுப்பனவு** | | | (5,481,894.00) |
| | | | | |
| **4,642,703.39** | **இயக்கச்செயற்பாடுகளில் பயன்ட்ட தேறிய காசு** | | | **4,302,597.41** |
| | | | | |
| | **பாய்ச்சல்** | | | |
| 4,029,389.58 | கிடைக்கவேண்டிவை | | (209,901.99) | |
| (7,424,820.07) | வேறு நிதிசார் சொத்துக்கள் | | (6,391,287.37) | |
| (2,050,973.21) | உட்கட்டமைப்பு, பொறி மற்றும் சாதனங்கள் | | (1,637,646.71) | |
| | காணி மற்றும் கட்டிடங்கள் | | 1,962,545.66 | |
| 1,237,847.79 | முதலீட்டு வருமானம் | | 1,190,841.12 | |
| (254,068.36) | நடந்து கொண்டிருக்கும் வேலை | | (1,153,382.94) | |
| **(4,462,624.27)** | **முதலீட்டுச்செயற்பாடுகளில்பயன்படுத்தப்பட்ட தேறிய பணம்** | | | **(6,238,832.23)** |
| | | | | |
| | **[illegible] பாய்ச்சல்** | | | |
| 25,200,000.00 | அரசாங்க மானியம் - கிடைத்த மூலதனம் | | 17,585,000.00 | |
| (17,134,027.29) | ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்கு கிடைத்த மூலதன மானியம் | | (15,694,578.53) | |
| (915,614.55) | திறைசேரிக்கான நிலையான வைப்புப் பெறுமான மாற்றல் | | 34,445.53 | |
| 47,865.00 | ஊக்குவிப்பு நிதி - நிறுவகத்தின் பங்கு - 40% | | (308,502.09) | |
| (151,098.25) | அகற்றிய பொருட்களின் விற்பனை | | 8,611.38 | |
| | ஊக்குவிப்பு நிதி - நிறுவகத்தின் பங்கு - 10% | | 332,395.78 | |
| **7,047,124.91** | **தேறிய காசுப் பாய்ச்சல்** | | | **1,957,372.07** |
| | | | | |
| 7,227,204.03 | **தேறிய அதிகரிப்பு** | | | 21,137.25 |
| 8,367,842.21 | **சமனானவைகளும்** | I | | 15,595,046.24 |
| **15,595,046.24** | **சமனானவைகளும்** | II | | **15,616,183.49** |
| | | | | |
| | **குறிப்புகள்:** | | | |
| | **காசும் காசுக்கு சமனானவைகளும்** | | **1** | **11** |
| | | | **01.01.2019** | **31.12.2019** |
| 15,487,296.20 | வங்கியிலுள்ள காசு | | 15,487,296.20 | 15,595,513.49 |
| 107,750.04 | கையிலுள்ள காசு | | 107,750.04 | 20,670.00 |
| **15,595,046.24** | **மொத்தம்** | | **15,595,046.24** | **15,616,183.49** |

**ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**

**2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களிலும்/ஒப்புரவிலும் மாற்றங்களின் கூற்று**

இ.ரூ

| | அரசாங்க மானிய மூலதனம் | ஒதுக்கங்கள் | மீள்-மதிப்பீட்டு ஒதுக்கம் | ஊக்கு விப்பு மற்றும் பயிற்சி நிதியம் | திரண்ட மேன்மிகைகள் /(பற்றாக்குறைகள்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2019 ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 51,821,985.57 | 3,342,461.37 | 26,450.20 | - | (3,230,944.18) | 51,959,952.96 |
| திறைசேரியிலிருந்து கிடைத்த நிதிகள் | 17,585,000.00 | | | | | 17,585,000.00 |
| ஆண்டிற்கான கடன்தீர்ப்பு | (8,741,252.31) | | | | | (8,741,252.31) |
| கணக்கியல் நிறுவனப் பங்கு 40% & 10% | | 34,445.53 | | 8,611.38 | | 43,056.91 |
| முன்னைய ஆண்டுச் சீராக்கல்கள் | | | | | 37,052.86 | 37,052.86 |
| ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக மூலதன மானியம் பெறப்பட்டது | (15,694,578.53) | | | | | (15,694,578.53) |
| வருமானம் மற்றும் செலவினம் | | | | | (2,065,351.60) | (2,065,351.60) |
| 2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி | **44,971,154.73** | **3,376,906.90** | **26,450.20** | **8,611.38** | **(5,259,242.92)** | **43,123,880.29** |

**31 டிசம்பர் 2019இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

**1. கணக்கீட்டுக் கொள்கைகள்**

**1.1 பொது**

நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (இ.ப.க.நி.) விதிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் (இ.அ.து.க.நி.) மற்றும் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்களில், பண வீக்கக் காரணிகளுக்கு சீராக்கல்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. கணக்கீட்டுக் கொள்கைகள் அட்டுறு அடிப்படையில் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**1.2 ஒத்தீட்டுத் தகவல்**

கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டில் பிரயோகிக்கப்பட்ட இந்த கணக்கீட்டுக் கொள்கைகளுடன் சேர்த்து நிறுவகத்தினால் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன. நடைமுறை ஆண்டின் சமர்ப்பணத்தை உறுதிசெய்துகொள்ளும் நிமித்தம், தேவையான போது, முன்னைய ஆண்டின் புள்ளிவிபரங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

**1.3 ஐந்தொகைக் கணக்குத் திகதிற்கு பின்னர் எழும் சம்பவங்கள்**

ஐந்தொகைக் கணக்குத் திகதிற்கு எழுந்த சகல பொருண்மையான சம்பவங்களும் கருத்திற்கொள்ளப்பட்டு, நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செயப்பட்டுள்ளன.

**1.4 சொத்துக்களின் விலைமதிப்பீடு**

**(i) சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்**

சொத்துக்களின் கொள்வனவு ஆகுசெலவுஅல்லது நிர்மாண ஆகுசெலவு அடங்கலாக அவற்றின் மீதான ஏதாவது இடைநேர் செலவுகள் என்பன சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் ஆகுசெலவுகளாகும். நிறுவகம் தொடர்பில் மேற்கொள்ளும் வழிகளின் வாயிலாக நிலையான ஒரு தன்மையில் சொத்துக்களைச் சுவீகரிக்கும், சொத்துக்களை விஸ்தரிக்கும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக அல்லது நிறுவகத்தின் ஆற்றலை அதிகரிக்கும் நிமித்தம் சொத்துக்களை சுவீகரிக்கும், சொத்துக்களை விஸ்தரிக்கும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஏற்பட்ட செலவினம் மூலதன செலவினமாக கருதப்பட்டுள்ளது. பராமரிப்பினதும் மற்றும் பழுதுபார்ப்புகளினதும் ஆகுசெலவுகள் ஏற்பட்ட ஆகுசெலவுகளாக கருதப்பட்டுள்ளன. சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன கீழே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற குறைந்த திரண்ட தேய்மான ஆகுசெலவில் (அல்லது விலைமதிப்பீட்டில்) பதிவு செய்யப்பட்டுள்ளன.

அ) ஆண்டொன்றுக்கு பின்வரும் வீதங்களில், நேர்நிரல் முறையியல் பிரயோகிக்கப்பட்டு தேய்மானத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | ஆண்டொன்றுக்கு 2 ½% |
| உபகரணங்கள்/தளபாடங்கள் | ஆண்டொன்றுக்கு10% |
| கணனிகள் | ஆண்டொன்றுக்கு 20% |
| நலன்புரி உபகரணங்கள் | ஆண்டொன்றுக்கு10% |
| புத்தகங்கள் | ஆண்டொன்றுக்கு10% |
| வாகனங்கள் | ஆண்டொன்றுக்கு 20% |

ஒரு முழுமையான ஆண்டின் தேய்மானம் கொள்வனவு ஆண்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆ) இ.க..நி. 20 இன் ஏனைய முறை மீது பெறுமதி பதிவழிப்பு தொகை அடையாளங்காணப்பட்டு, கணக்கிடப்பட்டது.

**இ)** பல்வெஹெர பங்களா கட்டிடம்

ஆளுநர்கள் குழுவால் கைமாற்றம் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டிலிருந்து பல்வெஹெர பங்களா தம்புள்ள பிரதேச செயலக அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது.

### 1.5 கடன்தருனர்கள்

#### i) புலமைப்பரிசில் கடன்தருனர்கள்

தற்பொழுது ஒன்பது புலமைப்பரிசில் கடன் மீதிகள் தொடர்கின்றன. SLIPSAS 08 என்ற நியமத்திற்கு இணங்க, இடர் மற்றும் எதிர்பாராத சந்தர்ப்பங்கள் பேரில், இந்த ஆண்டில், போதியளவு நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

#### ii) ஏனைய கடன்தருனர்கள்

ஏனைய கடன்கள் அவை மாறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அளவுகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கு போதியளவு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:

1. 05 ஆண்டுகளுக்கு அதிக காலம் நிலுவையாக இருந்து வரும் கடன்தருனர்கள் - 100%
2. 01 முதல் 05 ஆண்டுகள் வரை நிலுவையாக இருந்து வரும் கடன்தருனர்கள் - 5%

#### iii) பதிவு செய்யப்படாத விடுதி வருமானம்

பதிவு செய்யப்படாத விடுதி வருமானமான ரூ. 8,895,470 /- ஆனது 2015 மே முதல் 2018 ஜூலை வரை விடுதி செயற்பாட்டு நடவடிக்கைகளினால் கிடைக்கப்பெற்றது. இத்தொகையானது ஹார்டி பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட விஷேட குழுவினால் அடையாளங் காணப்பட்டது.

### 1.6 பொருள் இருப்புக்கள்

நுகர்வுப் பொருட்களின் இருப்புக்கள் ஆகுசெலவில் மதிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய இருப்புக்கள் குறைந்த ஆகுலெவில் அல்லது தேறிய மாறக்கூடிய பெறுமானத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன. இருப்புகளின் ஆகுசெலவு FIFO முறையியலைப் பிரயோகித்து மதிப்பிடப்பட்டுள்ளது.

### 1.7 முதலீடு

நிலையான சொத்துக்கள் வைப்புக்கள் அதே வங்கிகளில் மீண்டும் வைப்புச்செய்யப்பட்டிருந்தன.

### 1.8 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடு

#### 1.8.1 பணிக்கொடை

1983இன் 12ஆம் இலக்கப் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய பணிக்கொடைக்கான நிதியேற்பாடு நிதிக்கூற்றக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழக்கைச் செலவுக் கொடுப்பனவு ஆகியவற்றின் அடிப்படையில், 2019ஆம் ஆண்டில், பணிக்கொடை கணிப்பிடப்பட்டுள்ளது.

**1.8.2 இடைநேர் பொறுப்புக்கள்**

நீதிமன்றத்தினது நிறைவு பெறாத தீர்ப்பின் அடிப்படையில், இடைநேர் பொறுப்புக்களுக்கான ஒரு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டு முடிவில் திரு. ஜே. சந்திரவன்சவின் வழக்கு மொணராகலை மாவட்ட நீதிமன்றத்தில் நிறைவு பெறாத நிலையில் உள்ளது.

**1.8.3 இடைநேர் சொத்துக்கள்**

புலமைப்பரிசில் கடன்களை அறவிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட நிறைவு பெறாத சட்ட வழக்கின் அடிப்படையில், இடைநேர் சொத்துக்களுக்கான நிதியேற்பாடு செய்யப்பட்டுள்ளது. விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**திரு. பி.டி.ஜே. ஆனந்த**

கொடுக்கப்பட்ட முகவரியில் அந்நபர் காணப்படாததால் நீதிமன்ற வழக்கு வைக்கப்பட்டுள்ளது. உத்தரவாததாரர்களிடமிருந்து ரூ .1,250,000.00 தொகை வசூலிக்கப்பட்டிருந்தாலும். மீதமுள்ள தொகையான ரூ. 2,759,754.28 திரு பி.டி.ஜே. ஆனந்தவிடமிருந்து மீட்கப்படவுள்ளது.

**திரு. எம்.எஸ். கௌரிசங்கர்**

கோரிக்கைக் கடிதத்தை அனுப்ப அவரது முகவரி கிடைக்கவில்லை. இருப்பினும், உத்தரவாததாரர்கள் ஏற்கனவே ரூ .1,250,000.00 செலுத்தியுள்ளனர். மீதமுள்ள தொகையான ரூ .3,634,110.07 திரு எம்.எஸ். கௌரிசங்கரிடமிருந்து மீட்கப்படவுள்ளது.

**கலாநிதி காமினி விக்ரமசிங்க**

அவர் இரண்டு முறை மேல்முறையீடு செய்துள்ளார். ஹார்டியிற்கு ஆதரவாக தீர்ப்பு பெறப்பட்டது. இறுதியாக சட்டமா அதிபருக்கு ரிட் ஆஃப் செர்டியோராரிக்காக ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நிதி நடவடிக்கை தொடர்கிறது.

**திருமதி எஸ்.டி. அபேரத்ன**

மீதமுள்ள தொகையான ரூ .501,392.00 திருமதி எஸ்.டி. அபேரத்னவிடமிருந்து மீட்கப்படல் வேண்டும். ஆனால் கொடுக்கப்பட்ட முகவரியில் அந்நபர் காணப்படாததால் வழக்கை தொடர முடியவில்லை.

**திருமதி ஆர்.அத்துகோரல**

திருமதி ஆர். அதுக்கோரலாவின் பத்திர மதிப்பு ரூ. 2,181,521.00 ஆகும். உத்தரவாததாரர்கள் ரூ. 1,250,000.00 செலுத்தியுள்ளனர். மீதமுள்ள தொகையான ரூ. 931,521.00 ஐ மீட்டெடுக்க முடியவில்லை. கோரிக்கைக் கடிதத்தை அனுப்ப அவரது முகவரி கிடைக்கவில்லை.

**திரு பி.டி..ஆர். குமாரசிறி**

திரு பி.டி.ஆர். குமாரசிரியின் பத்திர மதிப்பு ரூ. 499,302.00 ஆகும். உத்தரவாததாரர்கள் ரூ. 166,436.00 செலுத்தியுள்ளனர். மீதமுள்ள ரூ.332,866.98 நீதிமன்றம் தீர்மானித்த மற்ற இரண்டு உத்தரவாததாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். இருப்பினும், ஒரு உத்தரவாததாரரின் முகவரியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

**திருமதி ஏ.சி.கே. சேபால**

திருமதி ஏ.சி.கே.சேபாலவின் பத்திர மதிப்பு ரூ .1,249,641.11 ஆகும். நீதிமன்ற தீர்ப்பின்படி ரூ. 1,200,000.00 செலுத்தப்பட வேண்டும். அவர் இதுவரை ரூ. 900,000.00 செலுத்தியுள்ளார்.

### 1.8.4 திட்டவட்டமான ஓய்வூதிய பங்களிப்புத் திட்டம்

இந்த நிறுவகம் ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் 15%ஐயும் மற்றும் 3%ஐயும் முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (ஊ.சே.நி.) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ஊ.ந.நி.) பங்களிப்புச் செய்கின்றது. இந்த பங்களிப்புத் தொகைகள், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தற்போதைய சுற்றறிக்கைகளின் அடிப்படையில், நிதி சார்ந்த செயலாற்றுகைக் கூற்றில் செலவுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

### 1.9 நிதிசார்ந்த செயலாற்றுகைக் கூற்று

பின்வருவனவற்றின் பின்னர், நிதிசார்ந்த செயலாற்றுகைக் கூற்று எடுத்துரைக்கப்படுகின்றது.

அ. நிறுவகத்தின் நாளாந்த இயக்கச் செயற்பாடுகளிலும் மற்றும் செயல் வினைத்திறனிலும் சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் பராமரிப்பிலும் எதிர்பார்க்கப்படும் சகல எதிர்கால செலவுகளுக்கும் மற்றும் தீராத சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கும் நிதியேற்பாட்டை மேற்கொள்ளல்.

ஆ. அரசாங்கத் திறைசேரி நிதிகள், விடுதிக் கட்டணங்கள் வருமானம், மாநாட்டு மண்டபக் கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பன வருமானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.0 போக்குவரத்து மற்றும் அச்சிடல் செலவுகள்

போக்குவரத்து மற்றும் அச்சிடல் செலவுகள் சகல பிரிவுகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி என்பன தொடர்பில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். ஆகையால், அந்தச் செலவினம் அங்கீகரிக்கப்பட்டவொரு வீதத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆகுசெலவு அத்தகைய பொருத்தமான செலவினங்களுக்கு இடையில் ஒரு வீதத்திற்கு சீராக்கப்பட்டுள்ளது.

### 2.1 ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்காக கிடைத்த மூலதன மானியங்கள்

அரசாங்கத்தினது மூலதன மானியத் தலைப்பில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்கு என திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டது. இ.க..நி. 38 என்ற நியமத்திற்கு இணங்க, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சார்ந்த ஆகுசெலவை தொட்டுணர முடியாத சொத்தாக கருதப்படலாம். எனினும், இந்த நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சார்ந்த அத்தகைய ஆகுசெலவை தொட்டுணர முடியாத சொத்தாக கருத இயலாது. நிறுவகத்தின் ஆராய்ச்சி வெளியீடு இந்த இ.க..நி. 38 என்ற நிமயத்தின் தேவைப்பாடுகள் அனுசரிக்கப்படாமை இதற்கு காரணமாகும். ஆகையால், மொத்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சிசார்ந்த ஆகுசெலவுகள் நிதிசார்ந்த செயலாற்றுகைக் கூற்றுக்கு பற்றுவைக்கப்பட்டுள்ளன. அத்தகைய ஆகுசெலவுகளை மீண்டெழும் செலவினங்களாக கருத முடியும். மேற்குறித்த அரசாங்க மூலதன மானியங்களும் குறித்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிசார்ந்த செயலாற்றுகைக் கூற்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இ.ரூ

**2 காசும் காசுக்கு சமானானவைகளும்**

| | 2019 | 2018 |
|---|---|---|
| கையிலுள்ள காசு | 20,670.00 | 107,750.04 |
| வங்கியிலுள்ள காசு - கணக்கு இல: 2323292 | 8,463,976.86 | 6,704,465.78 |
| வங்கியிலுள்ள காசு - கணக்கு இல: 2323293 | 2,446,820.21 | 2,004,324.49 |
| வங்கியிலுள்ள காசு - கணக்கு இல: 2323315 | 203,895.78 | 107,518.91 |
| வங்கியிலுள்ள காசு - கணக்கு இல: 2323317 | 4,480,820.64 | 6,670,987.02 |
| | **15,616,183.49** | **15,595,046.24** |

**3 வருமதிகள்**

| | | |
|---|---|---|
| **ஊழியர் கடன்தருனர்கள்** | | |
| வீடமைப்புக் கடன் | 401,321.55 | 521,526.93 |
| திரண்ட கடன் | 22,894,203.34 | 22,877,445.15 |
| விழா முற்பணம் | 6,675.12 | 12,042.71 |
| கிடைக்க வேண்டிய கேட்போர்கூட வருமானம் | 509,875.00 | 787,625.00 |
| கிடைக்க வேண்டிய விடுதி வருமானம் | 907,145.07 | 591,617.75 |
| இடம்பெயர்ந்த நபர்களிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை | 8,895,470.00 | |
| புலமைப்பரிசில் கடன்தருனர்கள் | 13,486,273.49 | 15,387,897.86 |
| சம்பள முற்பணம் | - | 282,860.09 |
| | **47,100,963.57** | **40,461,015.49** |
| **வேறு கடன்தருனர்கள்** | | |
| கிடைக்க வேண்டிய முதலீட்டு வருமானம் | 50,612.38 | 53,743.26 |
| திருமதி பீ.எ.டி.எஸ்.பமுனுஆரச்சியிடமிருந்து கிடைக்க வேண்டியது | 48,000.00 | 160,000.00 |
| பதவி விலகிய ஊழியர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை | 564,378.12 | 574,515.55 |
| மருத்துவக் காப்புறுதியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை | 100.00 | - |
| கடன்தருனர்கள் - மொபிட்டெல் பிறைவேற் லிமிற்றெற் | 250,002.51 | 129,801.74 |
| G -97- காலநிலை-ஸ்மார்ட் பயிர்கள் மற்றும் இயந்திரமயமாக்கல் அளவிடுதல் | 325,924.33 | - |
| டிஜி ஹவுஸிலிருந்து பெறத்தக்கது | 230.00 | - |
| மெட்ரோபொலிற்றன் ஒபிஸ் (பிறைவேற்) லிமிற்றெற்றிலிருந்து மீட்டெடுக்கப்படுகிறது | 70.00 | - |
| அரசாங்க நிர்வாக அமைச்சிலிருந்து பெறத்தக்கது | 117,800.00 | 117,800.00 |
| R-481 யாழ்ப்பாணம் கடலேரி மற்றும் புறஎல்லைக் கிராமங்களின் வாழ்வாதாரத்திற்கு கடலேரியின் பங்களிப்பு | - | 111,921.59 |
| SMIB இலிருந்து பெறத்தக்கது | 47,028.07 | 53,617.28 |
| பிரதேச செயலகம் தம்புள்ள | 962,545.66 | - |
| R -540 "சேமிக்கவும் வளரவும்" அணுகுமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படையை உருவாக்குதல் பயிர் முறைகளின் நிலையான மற்றும் காலநிலை நெகிழ்திறன் தீவிரப்படுத்துதல் குறித்த பிராந்திய உத்திகள் | 809,686.06 | - |
| | **3,176,377.13** | **1,201,399.42** |
| | | |
| | **50,277,340.70** | **41,662,414.91** |
| **கழிக்குக:** | | |
| தீராத, சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடு | (519,542.01) | (305,134.51) |
| புலமைப்பரிசில்களுக்கான ஏற்பாடு | (9,453,504.97) | (10,000,308.25) |
| | **40,304,293.72** | **31,356,972.15** |

**4 வருமதிகள்**

| | | |
|---|---|---|
| **வைப்புக்கள்** | | |
| நிலையான வைப்பு - உணவு வழங்குநர் | 70,000.00 | 70,000.00 |
| நானாவிதம் - இலங்கை ரெலிகம் (இன்டர்நெட் வசதி) | 3,125.00 | 3,125.00 |
| நானாவிதம் - தபால் மா அதிபர் | 24,945.00 | 24,945.00 |
| நானாவிதம் - கொழும்பு கேஸ் என்ட் வோர்ட்டெர் கம்பனி | 4,750.00 | 4,750.00 |
| நானாவிதம் - நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | 500.00 | 500.00 |
| நானாவிதம் - செல்டெல் லங்கா லிமிற்றட் | 3,500.00 | 3,500.00 |
| நானாவிதம் - இலங்கை மின்சார சபை | 406,250.00 | 406,250.00 |
| நானாவிதம் - எரிபொருள் வைப்பு | 100,000.00 | 100,000.00 |
| | **613,070.00** | **613,070.00** |

## ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

**2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

இ.ரூ

| 5 | பொருட்பதிவேடுகள் | 2019 | 2018 |
|---|---|---|---|
| | வெளியீடும் சஞ்சிகைகளும் | 2,758,249.00 | 2,746,259.00 |
| | நுகர்வுப்பொருட்கள் | 1,538,084.96 | 3,000,271.97 |
| | விற்பனை நிலையம் | 932,921.00 | 951,975.00 |
| | | **5,229,254.96** | **6,698,505.97** |

| 6 | முற்கொடுப்பனவுகள் | | |
|---|---|---|---|
| | சேவை உடன்படிக்கை புகைப்படப்பிரதி | 10,500.00 | - |
| | கட்டிடக் காப்புறுதி | 24,567.01 | 24,559.73 |
| | | **35,067.01** | **24,559.73** |

| 7 | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | | |
|---|---|---|---|
| | கொள்வனவு முற்பணம் | 23,500.00 | 224,312.40 |
| | | **23,500.00** | **224,312.40** |

| 8 | நிதி சார்ந்த ஏனைய சொத்துக்கள் | | |
|---|---|---|---|
| | அழைப்பு வைப்புக்கள் | 1,500.00 | 1,500.00 |
| | அரச அடமான, முதலீட்டு வங்கியிலுள்ள நிலையான வைப்புக்கள் | 1,500,000.00 | 1,500,000.00 |
| | அரச அடமான, முதலீட்டு வங்கி வீடமைப்புக் கடன் திட்டத்திலுள்ள வைப்புக்கள் | 2,399,422.99 | 2,189,521.00 |
| | | **3,900,922.99** | **3,691,021.00** |

## ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
**2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

இ.ரூ

| | கொடுமதிகள் | 2019 | 2018 |
|---|---|---|---|
| 12 | திரண்ட செலவுகள் | 8,621,848.58 | 9,380,068.54 |
| | கொடுப்பனவுக்குரிய ஆராய்ச்சி, பயிற்சிச் செலவுகள் | 1,216,781.39 | 2,999,702.29 |
| | மீளளிக்கத்தகு கேள்விமனு வைப்பு | 133,462.20 | 133,462.20 |
| | மீளளிக்கத்தக்க உணவக வைப்பு - உபதிஸ்ஸ பறணமான | 50,000.00 | 50,000.00 |
| | சம்பள முற்பணம் | - | - |
| | கொடுப்பனவாகாத செலவினம் | 267,135.56 | 97,215.00 |
| | பதவி விலகிய ஊழியர்களுக்கு கொடுப்பனவுக்குரியது | 189,150.61 | 220,725.04 |
| | கொடுப்பனவுக்குரிய முத்திரை வரிகள் | 16,225.00 | 17,600.00 |
| | பிடித்துவைத்த தொகைகள் | 136,526.06 | 22,769.79 |
| | கடன்வழங்குனர்கள் | 1,720,160.05 | 1,078,781.48 |
| | நலன்புரிச் சங்கம் | - | 3,197.00 |
| | செலுத்த வேண்டிய பணிக்கொடை | 126,912.50 | 126,912.50 |
| | அமைச்சுக்கு செலுத்த வேண்டிய தொகை | 94,358.05 | 94,358.05 |
| | முகாமைத்துவ அபிவிருத்தி நூல் | 10,000.00 | - |
| | விசேட முற்பணம் | - | 400.00 |
| | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கொடுப்பனவுக்குரியது | 84,000.00 | - |
| | திரு.நாராயணசாமிக்கு கொடுப்பனவுக்குரியது | 9,000.00 | - |
| | முன்கூட்டியே பெறப்பட்ட விடுதி வருமானம் | 43,528.00 | |
| | **கருத்திட்டங்களுக்கு எதிரான கடன்கள்** | | |
| | துரித உணவு பாதுகாப்பு மற்றும் தேவை மதிப்பீடு | 7,774.28 | 7,774.28 |
| | R-512 - பூகோள மாற்றமும், நிலைபெறுதகுதன்மையும்: இலங்கையின் கமத்தொழில் ஆராய்ச்சி தொழில்நுட்ப ஆளணியினரின் ஆற்றல் அபிவிருத்தி | 22,831.18 | 22,831.18 |
| | R-530 இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட பிராந்தியங்களில் வாழை, மா மற்றும் அன்னாசிப் பயிர்களுக்கு பெறுமதிச் சங்கிலியைப் பலப்படுத்துவதற்கான அடிமட்ட ஆய்வு | 2,716,082.09 | 1,973,590.33 |
| | R-535 இலங்கையின் மகாவலி ஆற்றுப் படுக்கையில் வாழ்கின்ற விளிம்புநிலையிலான கமத்தொழில் சனசமூகங்களின் காலநிலை மாற்றத் தாக்கங்களைக் கவனத்திற்கெடுத்தல் | 440,981.34 | 440,981.34 |
| | R-540 பயிர்ச்செய்கை முறைமைகளின் நிலைத்திருத்தல் மற்றும் காலநிலை மீளுதல் தீவிரமாக்கல் மீது "சேமித்தலும், வளர்த்தலும்" பிராந்திய உபாயங்கள் அணுகுமுறையை அமுலாக்குவதற்கான அடிப்படையைக் கட்டியெழுப்புதல் | - | 417,818.74 |
| | சேவை ஒப்பந்தம் - 03-2017 | 245,901.88 | 245,901.88 |
| | R-559 இலங்கையில் பல்வேறு பயிர்களுக்கு சொட்டு நீர் பாசன தொழில்நுட்பங்களுக்கான ஆற்றல் / நீர் அடிப்படை மதிப்பீடு | 695,062.86 | - |
| | R-561 இலங்கை அனுராதபுர மாவட்டத்தில் அரிசி உற்பத்தியில் மேம்பட்ட விவசாய விரிவாக்க சேவைகளின் தாக்கம் குறித்த சான்றுகள் | 1,799,880.00 | - |
| | சேவை ஒப்பந்தம் 01-2019 | 415,550.00 | - |
| | | **19,063,151.63** | **17,334,089.64** |

| | ஊழியர் நன்மைகள் | | |
|---|---|---|---|
| 13 | ஜனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை | 52,241,966.50 | 45,663,255.50 |
| | ஆண்டின் போது கொடுப்பனவுகள் | 5,481,894.00 | 3,954,919.50 |
| | ஆண்டிற்கான ஏற்பாடு | 10,802,680.00 | 10,533,630.50 |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி | **57,562,752.50** | **52,241,966.50** |

| | அரசாங்க மூலதன மானியம் | | |
|---|---|---|---|
| 14 | ஜனவரி 01இல் உள்ளவாறு நிலுவை | 51,821,985.57 | 58,021,062.86 |
| | ஆண்டின் போது மூலதன பங்களிப்பு | 17,585,000.00 | 25,200,000.00 |
| | ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்கு கிடைத்த மூலதன மானியம் | (15,694,578.53) | (17,134,027.29) |
| | ஆண்டிற்கான கடன்தீர்ப்பு | (8,741,252.31) | (11,360,926.00) |
| | கொள்வனவுசெய்யப்பட்ட வாகனத்திற்கான மதிப்பிறக்க சீராக்கல் | - | (2,904,124.00) |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி | **44,971,154.73** | **51,821,985.57** |

| | ஒதுக்கங்கள் | | |
|---|---|---|---|
| 15 | கருத்திட்ட மூலதன நிதி | - | - |
| | மூலதன ஒதுக்கம் | 1,675,000.00 | 1,675,000.00 |
| | ஊக்குவிப்பு நிதி - நிறுவகத்தின் பங்கு | 1,701,906.90 | 1,667,461.37 |
| | | **3,376,906.90** | **3,342,461.37** |

| | ஊக்குவிப்பு மற்றும் பயிற்சி நிதிகள் | | |
|---|---|---|---|
| 16 | கருத்திட்டத்திலிருந்து வரும் 10% ஊக்குவிப்பு நிதி | 8,611.38 | - |
| | | **8,611.38** | **-** |

ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

**2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

இ.ரூ

| | திரண்ட பற்றாக்குறைகள் | 2019 | 2018 |
|---|---|---|---|
| 17 | ஜனவரி 01இல் உள்ளவாறு மீதி | (3,230,944.18) | 9,927,540.39 |
| | நிறுவக நிதிகளில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் மீள்விலை மதிப்பீட்டு ஒதுக்கம் மீதான சீராக்கல் | - | (2,586,363.20) |
| | திறைசேரி மானியத்தில் வாங்கிய வாகனம் 2014 தேய்மானம் சீராக்கப்பட்டது | - | (7,100,000.00) |
| | பயிற்சி நிதிகள் திட்ட இருப்பு | - | 0.01 |
| | முந்தைய ஆண்டு சீராக்கல் - ஆண்டுக்கு | 7,820,601.27 | 688,635.18 |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறு வருமானத்தின் மேலான செலவினம் | (2,065,351.60) | 2,301,131.80 |
| | டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி | **2,524,305.49** | **3,230,944.18** |

| | ஏனைய வருமானம் | | |
|---|---|---|---|
| 18 | விடுதிக் கட்டணங்கள் | 13,303,731.02 | 14,266,583.83 |
| | மாநாட்டு மண்டபக் கட்டணங்கள் | 15,997,250.00 | 13,791,868.75 |
| | மொபிட்டெல் வாடிக்கையாளர் சேவை வருமானம் | 120,200.77 | 110,821.63 |
| | வெளியீடுகளின் விற்பனை | 80,309.00 | 146,151.00 |
| | முதலீடுகள் மீதான வட்டி | 256,888.99 | 337,963.68 |
| | ஊழியர் கடன் மீதான வட்டி | 933,952.13 | 899,884.11 |
| | கருத்திட்டங்களிலிருந்து வரும் மீண்டெழும் பங்களிப்பு | 846,932.77 | 1,567,814.13 |
| | பங்களா கட்டணங்கள் மற்றும் அறை வாடகை | 91,619.95 | 172,099.64 |
| | பெல்வெஹர அறை வாடகை | 28,950.00 | 70,500.00 |
| | கணனி வருமானம் | - | 2,002.00 |
| | கேள்விமனுக் கட்டணங்கள் | - | 2,000.00 |
| | மனித வலு வருமானம் | 64,002.43 | 6,173.34 |
| | வேறு வருமானம் | 129,975.91 | 83,244.80 |
| | விநியோகஸ்தரின் பதிவு | 177,000.00 | 175,000.00 |
| | விளம்பர வருமானம் | 32,250.00 | 29,000.00 |
| | அதிகப்படியான கையிருப்பு | 19,870.00 | - |
| | கழிவுப் பொருள் அகற்றல் | - | 47,865.00 |
| | | **32,082,932.97** | **31,708,971.91** |

| | வேதனாதிகள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நன்மைகள் | | |
|---|---|---|---|
| 19 | சம்பளம் - நிரந்தர ஊழியர்கள் | 86,888,993.04 | 76,921,443.04 |
| | சம்பளம் - ஆய்வாளர்கள் | 12,932,062.53 | 8,913,439.37 |
| | வாழ்க்கைப்படிச் செலவுக் கொடுப்பனவு, விசேட கொடுப்பனவு, வேறு | 31,451,303.22 | 36,484,917.91 |
| | ஊ.சே.நி. (EPF) | 17,485,167.32 | 15,640,443.47 |
| | ஊ.ந.நி. (ETF) | 3,497,032.27 | 3,139,553.66 |
| | மேலதிகநேரக் கொடுப்பனவு | 5,051,178.77 | 3,255,406.42 |
| | பணிக்கொடை | 10,802,680.00 | 10,533,630.50 |
| | | **168,108,417.15** | **154,888,834.37** |

## ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
### 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இ.ரூ

| | | 2019 | 2018 |
|---|---|---|---|
| | **ஏனைய செலவுகள்** | | |
| **20** | உள்நாட்டு வாழ்க்கைப்படி மற்றும் உள்நாட்டு போக்குவரத்துச் செலவு | 1,746,142.18 | 1,163,236.16 |
| | வெளிநாட்டுப் பிரயாணக் கொடுப்பனவு | 67,772.77 | 382,218.00 |
| | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 3,034,873.17 | 1,952,737.17 |
| | எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கிகள் | 1,212,026.39 | 1,493,393.50 |
| | சீருடைகள் | 415,708.42 | 509,134.31 |
| | வாகனங்களின் பழுதுபார்ப்புகள் | 1,553,772.54 | 1,749,011.14 |
| | கட்டிடங்கள் பராமரிப்பு | 2,048,644.33 | 1,885,429.98 |
| | பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பழுதுபார்ப்புகள் | 1,835,323.58 | 1,984,938.14 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் | 3,295,188.47 | 2,640,531.75 |
| | மின்சாரக் கட்டணங்கள் | 5,162,274.02 | 5,264,241.90 |
| | தண்ணீர் கட்டணங்கள் | 1,156,255.88 | 1,140,656.40 |
| | உள்ளூராட்சி மன்றங்களுக்கான வரிகள் | 579,456.00 | 354,913.20 |
| | தபால் கட்டணங்கள் | 609,870.00 | 413,870.00 |
| | போக்குவரத்து | 594,560.00 | 570,110.00 |
| | வாகனங்களுக்கான தொழில்நுட்ப ஆலோசனை | 90,000.00 | 90,000.00 |
| | நிர்மாணத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனை | 90,000.00 | 60,000.00 |
| | செய்திப்பத்திரிகைகள் | 271,796.00 | 197,960.00 |
| | அனுமதிப்பத்திரங்களும் காப்புறுதியும் | 1,061,870.63 | 1,198,986.99 |
| | பாதுகாப்புக் கட்டணங்கள் | 3,036,000.00 | 3,050,650.00 |
| | துப்புரவேற்பாடு சார்ந்த சேவைகள் | 1,240,080.49 | 975,319.47 |
| | சலவைச் சேவைகள் | 435,520.00 | 527,330.00 |
| | கணக்காய்வுக் கட்டணங்கள் | 986,000.00 | 900,000.00 |
| | மருத்துவக் கட்டணங்கள் | 1,015,500.00 | 957,000.00 |
| | சிற்றுண்டிச்சாலைக் கட்டணங்கள் | 109,034.00 | 102,762.00 |
| | நானாவித செலவுகள் - ஏனையவை | 368,447.00 | 174,768.00 |
| | சட்டமுறையான கட்டணங்கள் | 591,716.00 | 8,970.00 |
| | நலன்புரி சேவை | 200,475.00 | 388,325.00 |
| | விளம்பரம் | 1,908,253.01 | 877,565.00 |
| | நேர்முகப் பரீட்சை தொடர்பான கட்டணங்கள் | 68,801.00 | 51,027.00 |
| | ஆளுநர் சபை உறுப்பினர்கள் | 608,435.00 | 559,068.00 |
| | அச்சீடும் வெளியீடும் | 1,915,540.02 | 1,374,437.90 |
| | பொழுதுபோக்கு | - | 16,232.00 |
| | தகவல் பரம்பல் | 669,675.00 | 454,242.50 |
| | விற்பனை ஆகுசெலவு - வெளியீடுகள் | 80,059.00 | 146,366.00 |
| | நிறுத்தி வைத்தல் வரி | 13,881.79 | 21,871.07 |
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 63,721.00 | 68,150.00 |
| | ஊழியர் அபிவிருத்தி | 2,101,080.92 | 1,829,373.19 |
| | வினைத்திறன் தடைகாண் (EB) பரீட்சைக் கட்டணங்கள் | 478,500.00 | - |
| | வேலையாட்களின் நஷ்டஈடு | - | 550,000.00 |
| | மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 150,547.50 | - |
| | உபகரணங்களுக்கும், ஏனையவற்றுக்கும் தொழில்நுட்ப ஆலோசனை | 89,500.00 | - |
| | அச்சிடப்பட்ட புத்தகங்களில் இழப்பு | 1,560.00 | - |
| | பங்கு பற்றாக்குறை | 8,200.00 | - |
| | கழிவுப் பொருள் அகற்றல் | 308,502.09 | - |
| | | **41,274,563.20** | **36,084,825.77** |

**தலைவர்**
**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**

**2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12இன் பிரகாரம், 2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

**1. நிதியின் கூற்றுக்கள்**

**1.1 கருத்து**

2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு, நிதிசார் கூற்றினையும் அத்துடன் நிதிசார் செயலாற்றுகையின் கூற்றினையும், அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான ஒப்புரவில் மாற்றங்களின் கூற்றினையும் மற்றும் பணப்பாய்ச்சல்களின் கூற்றினையும் அத்துடன் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம் ஒன்றையும் 2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்காக ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உறுப்புரை 154 (1)உடன் இணைந்து வாசிக்கத்தக்கதாக,1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் மற்றும் 2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் பின்துரந்து, எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 154(6)இன் பிரகாரம், எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்படும்.

எனது கருத்தை வெளிப்படுத்துவதன் அடிப்படையில் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள உண்மைகளின் விளைவுகளுக்கு புறநீங்கலாக, 2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு,ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதிசார் நிலையும் அத்துடன் அதன் நிதிசார் செயலாற்றுகையும் மற்றும் பணப்பாய்ச்சல்களும் இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உண்மையானதும், நியாயமானதுமான சூழ்நிலையொன்றைப் பிரதிபலிக்கின்றன என்ற கருத்தினை நான் கொண்டுள்ளேன்.

**1.2 கருத்துக்கான அடிப்படை**

(அ) ஒரு சுற்றுலா விடுதியைப் பராமரிப்பதற்காக தம்புள்ள பிரதேசச் செயலாளரிடமிருந்து நீண்ட கால வாடகை அடிப்படையில் பெல்வெஹர சுற்றுலா விடுதியைக் கையகப்படுத்தியதற்காக 2011 டிசம்பர் முதல் 2019 டிசம்பர் 12 வரையிலான காலத்திற்கு ரூ.1,000,000 கொடுப்பனவுக்குரியவற்றின் மீதத்திற்கு நிதிசார் அறிக்கையில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

(ஆ) பொருட்களை அகற்றுவதில் இருந்து பெறப்பட்ட பணம் ரூ. 5,900 என்ற போதிலும், ரூ. 308,502 என்பது பொருட்களை அகற்றுவதற்கான விற்பனை இழப்பு என்பது பணப்புழக்க அறிக்கையில் நிதி செயல்திறன்களின் கீழ் பணப்புழக்கமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(இ) பெல்வெஹர சுற்றுலா விடுதியின் பராமரிப்புச் செலவுகளுக்காக நிறுவகம் மேற்கொண்ட ரூ. 1,962,545 பெல்வெஹர பிரதேசச் செயலாளருக்கு செலுத்தப்பட வேண்டும் என்று கணக்கிடப்பட்டது. ஆனால், நிறுவகம் இந்த பணத்தைப் பெறவில்லை. இருப்பினும், பணப்புழக்க அறிக்கையில் முதலீட்டுச் செயல்திறன்களின் கீழ் பணப்புழக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு குறித்து கணக்காய்வாளரின் பொறுப்பு பற்றி பிரிவில் மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளபடி,பொறுப்பான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வு என்னால் மேற்கொள்ளப்பட்டது. எனது கருத்துக்கான அடிப்படையாக நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்று போதுமானதும், பொருத்தமானதும் என நான் உறுதிப்படுத்துகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும், நிருவாகத்தினதும் பொறுப்புக்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அவை நியாயமான சமர்ப்பணமொன்றையும் முன்வைப்பதுடன், நிதிசார் கூற்றினைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் மீது தீர்மானிப்பதில் அவை பொருள்ரீதியான தப்பான கூற்றுக்களைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், முகாமைத்துவத்தின் பொறுப்பில் தவறும் இருக்கவில்லை.

நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பில், நிறுவகத்தின் தொடர்கின்ற பராமரிப்புக்கான திறமை மீது தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பு என்பதுடன், நிறுவகத்தை திரவநிலைக்கு கொண்டுவருவதற்கான உத்தேசத்தை முகாமைத்துவம் கொண்டுவருகின்ற அல்லது ஏதேனும் வேறு மாற்றுவழியின் இன்மையில் தொழிற்பாட்டினை நிறுத்துகின்ற ஒழுங்குபடுத்தும் விடயத்திற்குப் புறநீங்கலாக, அகாலமான இருப்பின் அடிப்படையின் மீது கணக்குகளை வைத்திருப்பதும்,நிறுவகத்தின் தொடர்கின்ற இருப்பு தொடர்பில் காரணங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிசார் அறிக்கையிடல் நடைமுறையின் பொறுப்பானது சம்பந்தப்பட்ட கட்டுப்படுத்தலினால் தக்கவைக்கப்பட்டுள்ளது.

2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 16(1)இன் பிரகாரம், நிறுவகத்தின் வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியன மீதான ஆவணங்களும், அறிக்கைகளும் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் நேரகாலத்திலான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பை இயலச்செய்வதற்காக சரிவரப் பராமரிக்கப்பட வேண்டும்.

### 1.4 நிதிசார் கூற்றுக்களின் கணக்காய்வு குறித்து கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடியின் அல்லது தவறின் காரணமாக பொருள்ரீதியான தப்பான கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நிதிசார் கூற்றுக்கள் இருப்பதாக நியாயமான உறுதிப்பாடு ஒன்றை வழங்குவதும், எனது கருத்தினை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளரின் அறிக்கையை விடுவிப்பதுமே எனது முழுமையான குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்தைக் கொண்ட உறுதிப்பாடொன்றாகும் என்பதுடன், ஆனால் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வை மேற்கொள்வதில் பொருள்ரீதியான தப்பான கூற்றுக்கள் வெளிப்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. தனியாக அல்லது கூட்டுச்சேர மோசடிகளினதும், தவறுகளினதும் அழுத்தத்தின் காரணமாக, பொருள்ரீதியாக தவறான கூற்று இடம்பெறலாம் என்பதுடன், இது எதிர்பார்க்கப்படுகின்றது, ஆனால், இந்த நிதிசார் கூற்றுக்களின் அடிப்படையின் மீது பயனாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களை அது பாதிக்கவும் முடியும்.

வாழ்க்கைத்தொழில் சீர்தூக்கிப் பார்த்தலுடனும், வாழ்க்கைத்தொழில் சந்தேகத்துடனும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

- நேரகாலத்திலான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலமும் அத்துடன் போதுமானதும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினைப் பெறுவதன் மூலமும் மோசடிகளினால் அல்லது தவறுகளினால் எழுகின்ற அபாயங்களைத் தவிர்ப்பதற்கு மோசடியின் அல்லது தவறின் காரணமாக தேசிய கூற்றுக்களின் அபாயங்களின் அடையாளங்காணலும், மதிப்பீடுமே ஏதேனும் கருத்துக்கான அடிப்படையாகும். மோசடியொன்றினால் விளைவிக்கப்படுகின்ற செல்வாக்கானது பொருள்ரீதியிலான தவறான கூற்றுக்களினால் ஈடுபடுத்தப்படும் செல்வாக்கினை விட வலிமையானதாகும் என்பதுடன், மோசடியொன்றுக்கான சதித்திட்டம், மோசடி, வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக ஒப்பந்தத்தை உதாசீனம் செய்தல் ஆகியன இட்டுச்செல்ல முடியும்.

- நேரகாலத்திலான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றி புரிந்துணர்வொன்றைக் கொண்டிருந்த

போதிலும், அவற்றின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறமை மீது கருத்தொன்றை வெளிப்படுத்துவது நோக்கமல்ல.

- கணக்கீட்டுக் கொள்கைகளினதும் மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் அத்துடன் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட தொடர்பான வெளிப்படுத்தலின் பொருத்தத்தன்மையினதும் நியாயத்தன்மை பாராட்டப்படுகின்றது.

- நிகழ்வுகளினதும் மற்றும் சூழ்நிலைகளினதுர்ம் காரணங்களினால் நிறுவகத்தின் தாங்கிப் பிடிக்கின்ற தூரம் பற்றி போதியளவு உறுதியற்ற தன்மையொன்று உள்ளதா என்பதற்காகப் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையின் மீது கணக்காய்வுக்கான தொடர்கின்ற இருப்பின் அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தத்தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவு உறுதியற்றதன்மையொன்று உள்ளது என நான் முடித்துவைத்தால், நிதிசார் கூற்றுக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கை கவனத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் எனது கருத்து கோரப்பட முடியாது என்பதற்கு போதுமானவையல்ல. எனினும், மேலதிக நிகழ்வுகளினதும், சூழ்நிலைகளினதும் மீது தொடர்கின்ற இருப்பு நீங்கிவிடலாம்.

- வெளிப்படுத்தல்களின் உள்ளடங்கலிலான நிதிசார் கூற்றுக்களினதும், பாராட்டப்பட்டுள்ள கட்டமைப்பினதும், உள்ளடக்கங்களினதும் மற்றும் நிதிசார் கூற்றுக்களின் பொருத்தமாகவும், நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தகைய நடவடிக்கைகளினதும், நிகழ்வுகளினதும் அடிப்படையினதும் சமர்ப்பணம் பாராட்டப்படுகின்றது.

எனது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முக்கியமான கணக்காய்வு முடிவுகளும், பிரதான கணக்காய்வுக் கட்டுப்பாட்டின் உள்ளடக்கங்களும் மற்றும் அடையாளங்காணப்பட்ட வேறு விடயங்களும் கட்டுப்படுத்தும் தரப்புகளுக்கு அறியச்செய்யப்பட்டன.

**2. வேறு சட்ட மற்றும் கட்டுப்படுத்தல் தேவைகள் மீதான அறிக்கை**

2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தில் அவற்றின் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- எனது கருத்தை வெளிப்படுத்துவதன் அடிப்படையில் பிரிவில் விவரிக்கப்பட்ட உண்மைகளின் விளைவுகளுக்கு பிரத்தியேகமாக, 2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(A)இன் தேவைகளின் பிரகாரம், கணக்காய்வுக்கு அவசியமான சகல தகவலையும் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டதுடன், எனது ஆய்வில் தோன்றுகின்றவாறு தோதான நிதிசார் பதிவேடுகளையும் நிறுவகம் பராமரித்துள்ளது.

- 2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(C)(iii)இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம், நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்துப்போகின்றன.

- 2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(C)(iv)இன் தேவைகளின் பிரகாரம், முன்னைய ஆண்டில் நான் செய்துள்ள பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைகளினதும் அத்துடன் பெறப்பட்டுள்ள சான்றினதும் மட்டுப்படுத்தப்பட்ட உள்ளக உண்மைகளினதும் மீது பின்வரும் வெளிப்படுத்தல்களை செய்வதற்கு எனது கவனத்திற்கு எதுவும் பெறப்படவில்லை.

- 2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(d)இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், நிறுவகத்தின் சம்பந்தத்துடன் ஏதோ உடன்பாட்டில் ஆளுனர் சபையின் யாரேனும் உறுப்பினர் நேரடியாக அல்லது வேறு வகையில் பொது வியாபாரச் சூழ்நிலைக்கு வெளியே தொடர்பொன்றினைக் கொண்டுள்ளார்.

- பிரிவு 12(e)இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புகளுக்கு புறநீங்கலாக, நிறுவகத்தின் ஆளுனர் சபையினால் வழங்கப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகளின் ஏதேனும் பொருத்தமான எழுத்துமூலச் சட்டத்தின் அல்லது வேறு பொதுவான விசேட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படவில்லையென்பதால் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன:

**ஒழுங்குவிதிகள் / ஒழுங்குவிதிக்கான மேற்கோள் விவரணம்**

இலங்கைஜனநாயக, சோசலிசக் குடியரசின் நிதிசார் ஒழுங்குவிதி குறியீடு

| | | |
|---|---|---|
| (i) | FR 756 | 2019ஆம் ஆண்டிற்கான நூலக புத்தகங்களைப் பற்றி கையிருப்பு கணக்கெடுப்பு எதுவும் செய்யப்படவில்லை |
| (ii) | FR 757(2) (A) | கணக்கெடுப்பு அறிக்கையில் ஏதேனும் வேறுபாடுகள் இருந்தால், 2011, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் கையிருப்பு கணக்கெடுப்பில் அடையாளங்காணப்பட்ட மேன்மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் அல்லது பொறுப்பான அதிகாரிகள் ஆகியன பற்றி இந்த FRஇன் கீழ் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை |
| (iii) | 2010 டிசம்பர் 14 திகதியிட்ட அரசாங்க அலுவல் சுற்றறிக்கை இல. PED 55 | 03 மாதங்களுக்கு ஒரு முறையாவது கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடத்த வேண்டிய அவசியம் இருந்தபோதிலும், நிறுவகம் 2017, 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் தலா 03 கூட்டங்களை மட்டுமே நடத்தியது |

- பிரிவு 12 (G)இன் தேவையின் பிரகாரம், நிறுவகத்தின் பணிகளுக்கும் மற்றும் செயல்பாடுகளுக்கும் இணங்காத விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- 2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (H)இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புக்கு புறநீங்கலாக, நிறுவகத்தின் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விதிகளினதும், ஒழுங்குவிதிகளினதும் பிரகாரம் கொள்வனவு செய்யப்படவில்லை என்பதுடன், சிக்கனமாகவும், செயற்றிறனாகவும் மற்றும் செயல்விளைவாகவும் நேரமட்டுப்படுத்தலினுள்ளும் பயன்படுத்தப்படவில்லை.

**3. வேறு கணக்காய்வு அவதானிப்புகள்**

அ. வெளிநாடுகளுக்குச் சென்று நாட்டிற்குத் திரும்பாத 07 அதிகாரிகளால் 2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய முறிகளின் ஆகுசெலவான ரூ. 13,486,273கொண்ட தொகையை அறவிடுவதற்கு பயனுறுதுவாய்ந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆ. கமத்தொழில் அமைச்சின் பாதுகாப்பு அதிகாரிகள் மே 2015 முதல் 2018 வரை நிறுவகத்தின் விடுதியில் 05 அறைகளை வாடகைக்கு எடுத்திருந்தனர். ஆனால் அந்தக் காலத்திற்கான ரூ. 8,895,470 கொண்ட தொடர்புடைய வாடகை அறவிடப்படவில்லை.

இ. பற்று மீதியில், நூலகப் புத்தகங்கள் மற்றும் காலாந்திரிகள் ஆகியவற்றுக்கு கிடைக்கவேண்டிய 05 வருடங்களைக் கொண்ட காலமொன்றுக்கு மேலாக நிலுவையாக உள்ள ரூ. 484,529 கொண்ட தொகையொன்றுக்கு 05 மீதிகள் இருந்ததுடன், இந்தப் பணம் நிறுவகத்திலிருந்து பெறப்பட்ட பொருட்களுக்கும் மற்றும் சம்பளங்களினதும் படிகளினதும் மேலான கொடுப்பனவுகளுக்கும் கிடைக்கவேண்டியதாகும். இது நிறுவகத்தில் சேவையை முடித்து ஓய்வு பெற்ற அதிகாரிகளிடமிருந்து மீட்கப்பட்டிருக்க வேண்டும்.

ஈ. 2012-2015 காலகட்டத்தின் போது ரூ. 1,031,020 கொண்ட தொகையில் நிறுவகத்தில் அமைக்கப்பட்ட உயிரக-வாயு அலகு 2016 முதல் செயல்படவில்லை என்பதுடன், நீண்ட காலமாக பழுதுபார்க்க முடியாத நிலையில் இருப்பதால், அதன் உதிரிப்பாகங்கள் செயலிழந்துவிட்டன என்பதுடன் மீண்டும் பயன்படுத்த முடியாததாகவும் விளங்குகின்றன.

உ. அடையாளங்காணப்பட்ட கமத்தொழில் முன்னேற்றத் தேவைகளின் அடிப்படையின் மீது கொள்கை வகுப்போருக்கும் மற்றும் பிற பங்குதாரர்களுக்கும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் முடிவுகளையும் மற்றும் பரிந்துரைகளையும் அனுப்பும் நோக்கத்திற்காக 2019 செயல் திட்டத்தின் மூலம் வெளியீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூ 2.73 மில்லியன கொண்ட ஏற்பாட்டில் ரூ.775 மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஊடகங்களுக்கும் மற்றும் கண்காட்சிகளுக்கும் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கப்;படவில்லை.

ஊ. நிறுவகத்தின் பாரிய வகிபங்கொன்றாக விளங்கும் ஆராய்ச்சியை நடத்துவதிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட பங்குதாரர்களுக்கு அனுப்புவதற்காக அடையாளங்காணப்பட்ட செயற்றிட்டங்கள், ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் புதிய அறிவு ஆகியன ஆண்டுதோறும் அல்லது குறிப்பிட்ட நேர எல்லைகளினுள் பயனுறுதிவாய்ந்ததாக போடப்படவில்லை. 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ஆராய்ச்சி அறிக்கைகளை விடுவிப்பதற்கு செயல் திட்டங்கள் ஊடாக ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை. இதேபோல், ரூ. 1,801,264 கொண்ட ஆகுசெலவொன்றில் 2016இல் ஆரம்பிக்கப்பட்ட 02 ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள் டிசம்பர் 31க்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும். ஆனால், இறுதி செய்யப்படவில்லை. இந்த காரணத்திற்காக, நேரகாலத்திலான தேவைகள் மீதான அடிப்படையில் ஆராய்ச்சித் செயல் திட்டங்களிலிருந்து தோன்றுகின்ற பரிந்துரைகள், குறிப்பிட்ட நேர எல்லைக்குள் தொடர்பான பங்குதாரர்களால் பெறப்படவில்லை.

டபிள்யு.பி.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

**2018இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 19இன் பிரகாரம் 2019 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

13.08.2020 திகதியிட்ட மேற்கண்ட அறிக்கையுடன் தொடர்புடைய விளக்கம் இங்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**1.2**

(அ) ஒப்புக்கொள்ளப்படுகின்றது
எதிர்கால நிதிசார் அறிக்கைகள் மூலம் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) ஒப்புக்கொள்ளப்படுகின்றது

இது நிலையான சொத்தின் விற்றொழித்தலின் இழப்பு அல்ல. ஆனால், நுகர்வோர் பொருட்களின் விற்பனையின் இழப்பாகும். இந்த இழப்பு ரூ. 308,502/= என்பது நிதி செயல்திறனின் கீழ் பணப்புழக்கமாக்க் குறிக்கப்படுகிறது, ஏனெனில் இந்த பரிவர்த்தனை செயல்பாட்டு செயல்திறன்களின் கீழ் சரிசெய்யப்படுகிறது. சுட்டிக்காட்டப்பட்டபடி, பணப்புழக்க அறிக்கையின் தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

(இ) பெல்வெஹர சுற்றுலா விடுதி சார்பாக பணம் பெறப்படாத போதிலும், இந்தப் பணம் உரிய கட்டணமாகக் கணக்கிடப்பட்டது. பெல்வெஹெர சுற்றுலா விடுதி என்ற சொத்தின் தேய்மானத்தைக் கழித்த பின்னர் இந்தக் கட்டணம் மதிப்பு என்பதால், இது பணப்புழக்க அறிக்கையில் முதலீட்டு செயல்திறன்களின் கீழ் வழங்கப்படுகிறது.

2. (அ) i. தேசிய நூலகம் மற்றும் ஆவணாக்கல் சபையின் அறிவுறுத்தல் சுற்றறிக்கை இல./ஜ.ஐ./01ஐப் பொறுத்தவரை, தவறாக இடப்பட்ட புத்தகங்கள் ஒவ்வொரு 2 வருடங்களுக்கும் ஒரு முறை கணக்கிடப்பட வேண்டும். ஆனால் ER 756இன் படி, எதிர்காலத்தில் நூலக புத்தகங்கள் கணக்கெடுப்பு நடத்தப்படும். இருப்பினும், 2019இல், நிதிப் பிரிவுடன் ஒன்றுசேர நூலகப் பிரிவானது நூலகத்தில் தகவல் புத்தக அலுமாரிவாரியாகப் பிரித்தெடுக்கப்பட்டது. மேலும் தகவல்களை தனித்தனியாக அடையாளம் காணக்கூடிய வகையில் கணினிமயமாக்கியது.

ii. நிறுவகத்தால் ஒரு நூலக புத்தக கணக்கெடுப்பு நடத்தப்பட்ட போதிலும், புத்தகங்களின் மேன்மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் ஆகியன குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இருப்பினும், 2019 முதல் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேன்மிகைகளையும் மற்றும் பற்றாக்குறைகளையும் தெளிவாக அடையாளங்காணலாம். 2020இல் ஒரு நூலக புத்தக கணக்கெடுப்பைத் தொடர்ந்து இந்த சிக்கல்கள் அனைத்தையும் தீர்க்க நடவடிக்கைகள் உள்ளன.

(ஆ) 2019இல், 03 கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன; அந்த ஆண்டின் டிசம்பர் முதல் வாரத்தில் கடைசி கூட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டது. ஆயினும்கூட, 2019 நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், பணிப்பாளர் சபைகள் இல்லாதொழிக்கப்பட்டதனால் கணக்காய்வுக் கூட்டங்களுக்கு சபை உறுப்பினர்களை நியமிப்பது சாத்தியமற்றிருந்தது.

2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் நிறுவகத்தில் நிரந்தரப் பதிவாளர் இல்லாத நிலையில், பணிப்பாளர்களால் கணக்காய்வுக் கூட்டங்களை நடத்துவது சாத்தியமில்லை என்று தோன்றியது,

3. (அ) 2019ஆம் ஆண்டின் தொடக்கத்தில், வெளிநாட்டுப் புமைப்பரிசில் உடமைதாரர்களுக்கான பற்று மீதி ரூ.15,387,897.91 என்பதுடன், ரூ. 1,901,629.37 தொகை மீட்கப்பட்டது. அதன்படி, 31 டிசம்பர் 2019 உள்ளவாறு, வெளிநாட்டுப் புமைப்பரிசில் உடமைதாரர்களின் பற்று மீதி ரூ.13,486,273.54 ஆகும். 2019ஆம் ஆண்டில், இந்த மீட்டெடுப்பு நிறுவகம் மேற்கொண்ட மூலோபாய நடவடிக்கைகளின் விளைவாக வழங்கப்பட்டது. நிலுவைத் தொகையை மீட்டெடுக்க முறையான நடவடிக்கை உள்ளது. மேலும் 2020ஆம் ஆண்டில் ரூ. 596,392/- மீட்கப்பட்டுள்ளது. இப்போது வெளிநாட்டுப் புமைப்பரிசில் உடமைதாரர்களின் பற்று மீதி ரூ. 12,889,881.54 ஆகும்.

(ஆ) மேற்கண்ட விடயம் தொடர்பாக ஒரு குழுவைப் பணிப்பாளர் நியமித்ததுடன், இந்த குழுவின் பரிந்துரைகளைக் கொண்ட ஒரு அறிக்கையும் ஆளுநர் சபைக்கு (இல. 379) அனுப்பப்பட்டது. கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகளுக்கு உட்பட்டு கணக்காய்வுக்கு ஆளுநர் சபை ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது இந்த அறிக்கையை ஆழமாக ஆராய்ந்த பின்னர், இந்த வருமானத்தை மீட்டெடுப்பதற்கான மேலதிக நடவடிக்கைகளைத் தொடர பொருத்தமான முடிவுக்கான ஒப்புதலுக்காக, கணக்காய்வுக்கு முன்னர் அறிக்கையை மீண்டும் ஆளுநர் சபைக்கு பரிந்துரைக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, இந்த அறிக்கை தற்போது ஆளுநர் சபைக்கு பரிந்துரைக்கப்படும். மேலும் தொடர்புடைய ஒப்புதல்களின்படி இந்தக் கொடுப்பனவைக் கணக்காய்வு செய்வதற்கும் அத்துடன் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) நிறுவகத்தின் சேவையில் இருந்து ஒய்வு பெற்ற அதிகாரிகளிடமிருந்து 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ள தொகை ரூ. 484,529.87 ஆகும். இந்த மீதி பின்வருமாறு அமைந்துள்ளது.

1. திரு எம்.ஜி.எம். ரஸாக் - ரூ. 212,819.90. திரு. ரஸாக் ஒரு வெளிநாட்டு புமைப்பரிசில் உடமை கடன்தருனர் ஒருவருக்கு பிணையாளரா விளங்குகிறார். வெளிநாட்டுப் புமைப்பரிசில் உடமை கடன்தருனர்களின் கீழ் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. சேவையை விட்டு வெளியேறியதன் மீது 03.09.2011 வரை திரு. எச்.கே.எஸ். பிரேமலாலிடமிருந்து ரூ. 152,525.25 பணம் வருமதியாகும். ஆனால், இந்த நிலுவைத் தொகையில் சேர்க்கப்பட்டுள்ள இடுக்கண் கடன் இப்போது நிறுவகத்தில் சேவையில் உள்ள பிணையாளர்களிடமிருந்து அறவிடப்படுகிறது. 31.12.2019 அன்று நிலுவையிலான மீதி ரூ. 26,382.35 ஆகும். சட்ட நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

3. திரு எல்.கே. ஜயசேகர - நிறுவகத்தில் பணியாற்றிய பணிப்பாளர். 09.01.2015 திகதியின்படி நிறுவகத்திற்கு திரு ஜயசேகர செலுத்த வேண்டிய தொகை ரூ. 29,086.38 ஆகும். சட்ட நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

4. திரு ரங்கன அதுக்கிரல - ரூ. 19,474.50.
03.06.2014 அன்று சேவையை விட்டு வெளியேறிய அவரிடமிருந்து வருமதியான மீதி ரூ. 19,474.50 ஆகும். சட்ட நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

5. திரு. எ.எம்.டி.என். தென்னக்கூன்

திரு. எ.எம்.டி.என். தென்னகூனிடமிருந்த வருமதியான மீதி ரூ. 196,767.29 ஆகும். இந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஈ) நிறுவகத்தின் பணிப்பாளர்,மேலதிகப் பணிப்பாளர், கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒரு சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழு 2019 மார்ச் 04 அன்று இந்த திட்டத்தின் தற்போதைய நிலைமையை மதிப்பாய்வு செய்து, இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியானது பொருளாதாரீதியாக லாபகரமானது அல்ல என்றும், இந்த வலைப்பின்னலில் முதலீடு செய்யக்கூடாது என்றும் முடிவு செய்தது. இதேபோல், உணவகத்திலிருந்து அச்சமயத்தில் (2012) நாளாந்தம் வெளியிடப்பட்ட உணவு கார்போனிக் கழிவுகளை நிர்வகிப்பது சிக்கல்களை ஏற்படுத்தியது. ஆனால், இப்போது இந்தக் கழிவுகள் விலங்குகளின் தீவனமாக விற்கப்படுகின்றன என்பதுடன், கூடுதல் வருமானத்தை உணவகம் ஈட்டுகிறது. சூழ்நிலைகளில், உயிர் வாயுவை உருவாக்குவதற்கு போதுமான அளவு கார்போனிக் கழிவுகளைப் பெற இயலாமை, உயிர் எரிவாயு அலகு பராமரிக்க உந்துதலில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல், ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் வலைப்பின்னல்களின் தேய்மானத்துடன், அதை இயல்பு நிலைக்கு கொண்டுவருவது அல்லது தற்போது கிடைக்கக்கூடிய புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப வலைப்பின்னல்களை புதுப்பிப்பது ஆகியன பொருளாதாரரீதியாக இலாபகரமானது அல்ல. இப்போது இதன் ஆயுட்காலம் 8 ஆண்டுகள் ஆகும்.

(உ) வாக்கின் கீழ், கருத்தரங்குகள்,செயலமர்வுகள் மற்றும் பொதுச் சொற்பொழிவுகள் ஆகியவற்றின் கீழ் 2019க்கு ரூ. 0.75 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், 2019 டிசம்பர் 31 வரை செலவுகள் ரூ. 0.253 மில்லியன் தொகையிலானதாகும்.

இதற்கு முக்கியமானது, கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் மற்றும் செயற்றிட்டங்கள் ஆகியவற்றுக்கு மக்களை ஒன்று சேர்ப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னோடியில்லாத வகையிலான உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஊ) 2017 முதல் 2019 வரையிலான காலத்திற்கு ஆராய்ச்சி வெளியீடுகளைத் தொடங்குவதற்கான கருத்தரங்குகள் திட்டமிடப்படவில்லை. இது சம்பந்தமாக தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு தேவையான வழிமுறைகள் வழங்கப்படும் என்பதுடன், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**R – 513 ஆராய்ச்சி அறிக்கை**

2016இல் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆராய்ச்சிப் பயிற்சி அதன் இறுதி கட்டத்தில் உள்ளது. இதேபோல், இந்த ஆய்வின் ஆராய்ச்சி அறிக்கை ஜூன் 2019 இறுதிக்குள் செயல் ஆய்வறிக்கையாகத் தயாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஆராய்ச்சியை ஒருங்கிணைத்த ஆராய்ச்சி அதிகாரியின் பணிகள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதால் இந்த பணி நிறுத்தப்பட்டுள்ளது. பணியை விரைவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**R – 511**

இந்த ஆராய்ச்சி முன்மொழிவு 2016 ஆராய்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால், 15.09.2016 அன்று நடந்த சபைக் கூட்டத்தில், ஒரே ஒரு குளத்திற்கு பதிலாக முழு எல்லங்கா வலையமைப்பையும் ஆய்வு செய்யவும், குளத்தின் அடிப்பகுதியை உறிஞ்சுவது குறித்து பொறியியல் மற்றும் மண் ஆய்வு செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, ஆராய்ச்சி முன்மொழிவையும் மற்றும் முறைமையையும் மாற்ற வேண்டியிருந்தது.

எமது நிறுவகத்தால் சமூக-பொருளாதார ஆய்வு செய்யப்பட்டது. ஆனால், தொடர்புடைய தொழில்நுட்ப அறிவை வெளிப்புறத் தரப்பிலிருந்து பெற வேண்டியிருந்தது. இது கணிசமான தாமதத்தைச் சம்பந்தப்படுத்தியிருந்தது.

தேவையான நிதி ஏற்பாடுகள் இல்லாத நிலையில், ஆய்வு செய்ய, தேவையான தகவல்களை டிஜிட்டல் தரவு மூலம் பெற வேண்டியிருந்தது என்பதுடன், இப்போது ஆய்வு முடிந்துவிட்டது. அத்துடன் ஆங்கில மொழிப் பதிப்பித்தலுக்கு தயாராக உள்ளதுடன், அதன் பிறகு அச்சிடும் செயல்முறை தொடங்கும். கொள்கையின் உருவாக்கம் குறித்த செயலமர்வுகளில் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நீர்ப்பாசனச் சட்டத்தை திருத்தும் பணியில் எமது நிறுவகம் எமது பங்களிப்பை வழங்கியது. இந்த ஆய்விலிருந்து பெறப்பட்ட தகவல்களும் இந்த ஆய்வின் அடிப்படையில் கூடுதலாக ஒரு பங்களிப்பைச் செய்தன. கொள்கை வகுக்கத் தேவையான ஒரு அறிக்கை ராஜாங்க நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது.